# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 25 செவ்வாய்க்கிழமை (08.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 194


# அரசு - கூட்டமைப்புக் குழு

# இனப்பிரச்சினை, மீள் குடியேற்றத்துக்கு

★ தடுப்பு முகாமில் உள்ள விடுதலைப் புலி சந்தேக நபர்கள் டிசெம்பருக்கு முன்னர் விடுதலை.

★ சிறைகளில் உள்ள தமிழ் இளைஞர், யுவதிகள் விரைவில் விடுவிப்பு.

★ வன்னியில் மீளக்குடியமர்ந்தோரின் தொழில் வசதிக்கு நிதி உதவி.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, வன்னி மக்களின் மீள்குடியேற்றம் ஆகிய இரண்டு விடயங்கள் குறித்தும் ஆராய்வதற்கு அரசாங்கத்தினதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதும் பிரதிநிதிகளைக் கொண்ட விசேட கூட்டுக்குழு ஒன்று நியமிக்கப்படும்.

ஜனாதிபதி தமது இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் இந்தக் குழு நியமிக்கப்பட்டுச் செயற்படத் தொடங்கும்.

நேற்று மாலை அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஒன்றரை மணி நேரமாக நடைபெற்ற சந்திப்பின்போது இந்த முடிவுகள் எட்டப்பட்டன.

★ தடுப்பு முகாம்களிலுள்ள விடுதலைப்புலிச் சந்தேக நபர்களை டிசெம்பருக்கு முன் விடுதலை செய்வது -

★ சிறைகளிலுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளை விரைவில் விடுவிப்பது -

★ வன்னியில் மீளக்குடியமர்ந்தோர் தொழில் வசதிக்கு அரசு நிதியுதவி செய்வது - ஆகிய பிரதான முடிவுகளும் நேற்றைய சந்திப்பில் எடுக்கப்பட்டன.

(23ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வை உடன் நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் ஈ.பி.டி.பி. குழு வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 8

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் விசேட பிரதிநிதிகள் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நேற்று மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துத் தமிழ் மக்களின் அரசியலுரிமை மற்றும் உடனடிப் பிரச்சினைகள் குறித்து விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர் என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தரப்பின் பிரதான சக்திகளோடு அரசியல் தீர்வு குறித்து பேசுதல் என்ற நிகழ்ச்சி நிரலின் கீழ் நேற்று மாலை 5 மணியளவில் தமிழத் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்த (23ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவரம்

04 ஆம் பக்கத்தில்

## அரசமைப்புத் திருத்தங்களை இந்தியாவிடம் ஏன் காட்ட வேண்டும் இந்திய மாநிலமா இலங்கை எனக் கேட்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 08

இலங்கை அரசால் தயாரிக்கப்பட்டுள்ள அரசமைப்புத் திருத்தங்களை இன்று இந்தியா செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய அரசிடம் காண்பிக்கவுள்ளார் என்றும் இந்தியாவின் ஒரு மாநிலம் போல் இலங்கை செயற்படுகிறது என்றும் ஜே.வி.பி. நேற்றுக் குற்றம் சாட்டியது.

தனது மகன் அடுத்த ஜனாதிபதியாகும்வரை நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையைத் தக்கவைத்துக்கொள்ளும் வகையில் அந்த அரசமைப்புத் திருத்தங்கள் அமைத்துள்ளன என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று பத்தரமுல்லையில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவற்றைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

(23ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவின் உதவிப் பிரதமர் அடங்கிய குழு மூன்று நாள் விஜயமாக கொழும்பு வருகிறது

### தாராள கடன் உதவிகளும் கிடைக்கும்

கொழும்பு, ஜூன் 8

இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் தொடர்பாக நேரில் ஆராயும் முகமாக சீனாவின் உதவிப்பிரதமர் சாங்டிஜாங் அடங்கிய குழுவினர் மூன்று நாள் விஜயமாக இலங்கை வரவுள்ளனர்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை இலங்கை வரும் இந்தக் குழுவினர் - சீனாவின் நிதி உதவியுடன் இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் பார்வையிடுவர்.

அத்துடன் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர், சபாநாயகர் மற்றும் பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன் அபிவிருத்திப் பணிகளைச் சார்ந்த அதிகாரிகளுடனும் கலந்துரையாடவுள்ளனர்.

சீன அரசு இலங்கையில் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலரையும், ரயில்வே அபிவிருத்திகளுக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலரையும் இலங்கைக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் (23ஆம் பக்கம் பார்க்க)

## குப்பைக்கு தீ மூட்டிய வேளை ஷெல் வெடித்தது தனங்கிளப்பில் 2 பேர் பலி; மூவர் படுகாயம்

### தென்மராட்சியில் நேற்று நிகழ்ந்த அனர்த்தம்

தென்மராட்சி, ஜூன் 8

சாவகச்சேரி, தனங்கிளப்பு புல்லுக்குளம் பிள்ளையார் கோயிலடியில் குப்பைக்குத் தீமூட்டியபோது ஷெல் வெடித்ததில் இரண்டுபேர் பலியாகியதுடன் மூன்றுபேர் படுகாயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணிக்கு நடை பெற்றுள்ளது.

சம்பவத்தின்போது தனங்கிளப்பைச் சேர்ந்த குடும்பஸ்தர்களான கனகசபை பிரகாஷ் (வயது 28), மந்திகை ஆதார வைத்தியசாலை ஊழியரான மணியம் பொன்சேகரா (வயது 38) ஆகியோரே உயிரிழந்தனர். (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சரத்பொன்சேகா விவகாரம்:

# செய்தியாளரின் குறிப்புப் புத்தகத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, ஜூன் 8

ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் சர்ச்சைக்குரிய நேர்காணலை நடத்திய 'சண்டே லீடர்' பத்திரிகையின் பத்திரிகையாளர் பிரட்ரிகா ஜயன்ஸின் குறிப்புப் புத்தகத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு மாஜிஸ்ரேட் நீதிமன்ற பிரதம நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

இந்த சர்ச்சைக்குரிய பேட்டி தொடர்பாக தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று இரகசியப் பொலிஸார் நீதிமன்றுக்குத் தெரிவித்தனர்.

சர்ச்சைக்குரிய பேட்டிகளைக் குறித்து வைத்துள்ள குறிப்புப் புத்தகத்தை இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்க பத்திரிகையாளர் பிரட்ரிகா ஜயன்ஸ் முன்வரவில்லை என்று இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்துக்கு மேலும் தெரிவித்தனர்.

ஆனால், இந்தக் குறிப்புப் புத்தகம் இம்மாதம் 21 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று கொழும்பு மஜிஸ்திரேட் பிரதம நீதிவான் சம்பத் ஜானகி ராஜரட்ண உத்தரவிட்டனர்.

இந்தக் குறிப்புப் புத்தகம் இந்த வழக்கில் திருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்று என்பதால் இதை நீதிமன்றில் சமர்ப்பிப்பது நல்லது என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த நவரட்ண பண்டார கூறினார்.

இந்த வழக்கு இம்மாதம் 21 ஆம் திகதி வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. நேற்றைய விசாரணையின்போது ஜெனரல் சரத் பொன்சேகா நீதி மன்றிற்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

## இன்று திட்டமிடல் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் திட்டமிடல் குழுக்கூட்டம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஆலோசனையும் செயற்றிட்டம் தொடர்பான கருத்துரைகளும் வழங்கப்பட உள்ளதால் செயற்றிட்ட உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-16)

## நீதிமன்ற அறைக் கம்பிகளை வெட்டித் தப்பிய கைதிகள்

### மாளிகாவத்தையில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு, ஜூன் 8

மாளிகாவத்தை இரண்டாவது நீதிமன்றத்திலிருந்து 11 கைதிகள் நேற்றுப் பிற்பகல் தப்பியோடினர்.

பாரதூரமான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு வழக்கு விசாரணைகளை எதிர்கொண்டிருந்த இவர்கள், தம்மை அடைத்து வைத்திருந்த அறையின் இரும்பு வலைக் கம்பிகளை வெட்டியே தப்பிச் சென்றனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து புதிய மகசீன் சிறைச்சாலையின் விசேட காவலர்களின் பாதுகாப்பில் மாளிகாவத்தை நீதிமன்றத்துக்கு இவர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர் என சிறைச்சாலை ஆணையாளரும் பேச்சாளருமான கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் மீண்டும் காந்தி சேவா சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் கிளிநொச்சியில் மீண்டும் செயற்படவுள்ளது.

இதன் முன்னேற்பாடாகக் கிளிநொச்சி, உருத்திரபுரம், 8ஆம் வாய்க்காலில் உள்ள காந்தி நிலையத்தில் உத்தியோகபூர்வ தலைமையகத் திறப்புவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சோ.க. தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் காந்தி அஞ்சலி, நிறுவனப் பெயர்ப் பலகையும், அலுவலகமும் திறந்துவைத்தல், பாபுஜி உருவப்படம் அமரர் சி.க.வேலாயுதபிள்ளை உருவப் படம் திரைநீக்கம் ஆகிய நிகழ்வுகள் முக்கிய அம்சமாக இடம்பெறும். (50-236)

## யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்க சட்டமூலம்

கொழும்பு, ஜூன் 08

முப்பது வருடகால யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்க வழிசெய்யும் சட்டமூலமொன்று விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர இணையத்தளம் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

அமைச்சரின் மேற்படி சிபாரிசுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் இந்த யுத்தத்தின்போது கொல்லப்பட்டுள்ளதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மூன்று தசாப்தங்களாக நடைபெற்று வந்த இந்த யுத்தத்தில் இரு தரப்பிலும் மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இனந்தெரியாத ஆயுதக் குழுக்களாலும் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாவின் ஒரு பகுதி மற்றும் மன்னார் மாவட்டங்களில் வாழ்ந்த ஆயிரக்கணக்கானவர்களின் இயற்கை மரணங்களும் முறையாகப் பதிவுசெய்யப்படவில்லை.

புலிகளின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் 22,000 போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களது மரணமும் முறையாகப் பதிவுசெய்யப்படவில்லை. இதனால் இறந்தவர்களின் பெயர்களிலுள்ள சொத்துகளைச் சட்டரீதியாக அனுபவிக்கவும் மாற்றிக்கொள்ளவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட அரச சேவையாளர்களின் விதவை மனைவி, குடும்பத்தவர் ஓய்வூதியம் மற்றும் நஷ்டஈட்டை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இவர்களில் பலர் யுத்தத்தில் இரு தரப்பு மோதல்களிலும் சிக்கி உயிரிழந்தவர்களாவர்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

---

## நீங்கா நினைவில்...

25 ஆம் வருடம்



தோற்றம்:
22.07.1934

அழிப்பு:
15.05.1985

### அமரர் ஐயாமுத்து நகுலேஸ்வரன்

(பொலிஸ் உத்தியோகத்தர், திருகோணமலை)

இருபதொடு ஆண்டைந்தும் நீண்டோடி மறைந்ததுவே,
இதுவரையில் நும்நினைவு எம்மைவிட்டு அகன்றதில்லை
பசியதொரு மரமதனில் பதித்திட்ட ஆணியதாய்
இனிமேலும் எம்மனதில் நிலைநிற்கும் நும் நினைவு
வளமாக இப்பாரில் தலை நிமிர்ந்தே நாம் வாழ
தங்களது அர்ப்பணிப்போ எல்லையில்லை; ஏராளம்
இறுதியுள்ள வாழ்நாளில் எம்மனதில் நும் நினைவு,
அணையாது சுடர்வீசும் தாள் பணிந்து ஏத்துகின்றோம்.

சமாதுலேன், திருகோணமலை.

குடும்பத்தினர்.

---

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 09 |
| ★ | ★ |
| 01 | 05 |
| ★ | ★ |
| 1932 | 2010 |

### அமரர் கதிர்காமு கணபதிப்பிள்ளை

(Retired Superintendent of Surveys)

கடந்த 9.5.2010 அன்று அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தலைவர் அமரர் கதிர்காமு கணபதிப்பிள்ளை அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் 11.05.2010இல் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்து மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய வடமாகாண நில அளவையாளர் சங்க உறுப்பினர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னார் நோய்வாய்ப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்தபோது இறுதிவரை கவனித்த டாக்டர் சிவராமன் அவர்களுக்கும் மற்றும் மருத்துவர்கள், உத்தியோகத்தர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று 08.06.2010 செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் தென் புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலய முன்றலில் உள்ள மடத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மு.ப.11 மணி அளவில் வீட்டில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன் புடன் அழைக்கின்றோம்.

மாவில் வீதி,
புற்றளை, புலோலி.

(சி/568157)

குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை நாகலிங்கம்

மல்லாகம் சல்லியோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நாகலிங்கம் நேற்று (07.06.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், சிவானந்தம் (இ.மி.ச.), சச்சிதானந்தம், மகானந்தம் (மகான் லங்கா சிமேந் லிமிற்றட்), காலஞ்சென்ற ஜெயானந்தம் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தங்கம்மா, பரமேஸ்வரி, வசந்திநாயகி, இராசம்மா ஆகியோரது அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(99249)

தகவல் :
நா. சிவானந்தம்
(மகன்- இ.மி.ச.)

## தம்பிமுத்து தர்மலிங்கம்



சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து தர்மலிங்கம் நேற்று (07.06.2010) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து மற்றும் சின்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான செல்லர் - பசுபதி தம்பதிகளின் மருமகனும், ராதாராணி (ஜெயா) யின் அன்புக் கணவரும், ரூபசங்கர் (உரிமையாளர், சங்கீதா ஏஜன்ட், யாழ்ப்பாணம்), சிந்துஷன் (சுவிஸ்), சுரேஷ், சங்கீதா (உயர்தர மாணவி, இராமநாதன் கல்லூரி), சங்கீத்தன் (மாணவன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(99169)

தகவல் :
குடும்பத்தினர்
0213219317

## மயில்வாகனம் பரமேஸ்வரி (பாமா)



சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பரமேஸ்வரி (பாமாக்கா) நேற்று (07.06.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இராசமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், முரளிதரனின் (UNDP, Vavuniya) அன்புத் தாயாரும், உமேஷின் (விவசாயத்திணைக்களம், வவுனியா), அன்பு மாமியாரும், நேசராணி (வவுனியா), காலஞ்சென்ற துரைரத்தினம் (கொழும்பு) மற்றும் சபாரத்தினம் (N.T.K. வவுனியா), யோகராணி, விசயராணி, ஜெயக்குமார் (பிரான்ஸ்), ஜெயராணி (அதிபர் யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நமசிவாயம் நாகராசா (கட்டடத் திணைக்களம், வவுனியா), சந்திரமலர் (வவுனியா), தனேஸ்வரலிங்கம் (சவுதி), நிர்மலா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிங்கலனின் அன்புப் பேர்த்தியும் தீபா (கனடா), சுகன்யா (வத்தளை), நித்தியா (வ/இறம்பைக்குளம் மகாவித்தியாலய A/L 2010 மாணவி) ஆகியோரின் அன்பு மாமியும், கௌரி (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), ஜெய காந்தன் (பிரான்ஸ்), ஜெயன் (வவுனியா), அகி லேஸ்வரன் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும், யசோதரன், தேவகி, சுதா (UC வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தேவாலய வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் இன்று (08.06.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை.

(99168)

தகவல் :
எம்.முரளிதரன் (மகன்)
(T.P. 0770837672)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சோபை இழந்துபோன இந்திய திரைப்பட விழா

11ஆவது சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழாவுக்கான ஏற்பாடுகள் மிகவும் கோலாகலமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், பிரபல பொலிவூட் நட்சத்திரங்கள் பங்கு பற்றாமை, விருது வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி கலந்துகொள்ளாமை, உள்ளூர் நடிகர்களுக்கு உரிய கௌரவம் வழங்கப்படாமை, விழா ஏற்பாடுகளில் இடம்பெற்ற குறைபாடுகள் ஆகியவை காரணமாக விழா சோபை இழந்துவிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் நற்பெய ருக்கு இது இழுக்கு ஏற்படுத்திவிட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

கடந்த வியாழக்கிழமை பத்திரிகையாளர் மாநாடு ஒன்றுடன் ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெற்று முடிவடைந்த இந்த விழா இலங்கைக்குப் பெரும் கீர்த்தியை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று எதிர்பார்த்த போதிலும் மாறாக அபகீர்த்தியையே ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இலங்கைக்கு வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்த விழாவினால் 400 கோடி ரூபா வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. விழாவுக்காக 60 கோடி ரூபாவை அரசு செலவிட்டது. ஆனால் இந்தப் பணம் முழுவதும் மண்ணோடு மண் என்கிறது சரத் பொன்சேகாவின் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு. இந்தப் பணத்தை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி இருக்கலாம் என்கிறது இக்கட்சி. இந்த விழாவினால் பெரும் வருமானம் ஈட்டலாம், இலங்கையின் பெயர் உலகப் பிரபல்யமாகும், உல்லாசப் பயணத்துறை மேம்படும் என்ற இலங்கையின் நம்பிக்கைகள், தவிடு பொடியாகி வெறும் கற்பனையாகி விட்டன.

இந்த விழா ஆரம்பத்தில் இருந்தே எதிர்ப் பைச் சம்பாதித்துக் கொண்டது. 'முதல் கோணல் முற்றும் கோணல்' என்பார்கள். இதற்கு இணங்க பிரச்சினைகளுடன் ஆரம்பித்து தோல்வியில் முடிவடைந் திருக்கிறது.

இலங்கைத் தமிழர் மீதான படுகொலை யைக் கண்டித்து தமிழக திரைப்படத் துறை யினர் முதலில் விழாவைப் பகிஷ்கரித்தனர். தெலுங்கு, மலையாள, கன்னட நடிகர்களும் பகிஷ்கரிப்பில் சேர்ந்துகொண்டனர். அதுமட்டும் அல்ல, இந்தி முன்னணி நடிகர்களும் பகிஷ்கரித்தனர்.

இந்தியாவின் முன்னணி நட்சத்திரமான அமீர் கானின் '3இடியட்ஸ்' திரைப்படம் இந்த விழாவில் பொலிவூட் ஒஸ்கார் விருதைப் பெற்றபோதிலும் அமீர்கான் விழாவில் கலந்துகொள்ளவில்லை. அதேபோன்று விழாவில் விளம்பரத்துக்காகக் கடமையாற்றியவர் அமிதாப்பச்சன். அவரும் வரவில்லை. அமிதாப்பச்சனின் மகன் அபிஷேக் பச்சன் மருமகள் ஐஸ்வர்யாராய் மற்றும் பிரபல இந்திய நடிகர் சாரூக்கான் ஆகியோரும் வரவில்லை. ரசிகர்கள் இதனால் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். விருது வழங்கும் விழாவில் பெரும்பாலான ஆசனங்கள் காலியாக இருந்தன.

இலங்கையைப் பொறுத்த மட்டில் இலங்கை அரசு இதனை ஓர் பாடமாகக் கொள்ளவேண்டும். இந்தத் திரைப்பட விழா முதல் தடவையாக 2000 ஆம் ஆண்டில் பிரிட்டனில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பின்பு மலேசியா, தென் ஆபிரிக்கா உட்பட பல நாடுகளில் வருடா வருடம் நடை பெற்றது. அடுத்த வருடம் கனடாவின் ரொறன்டோ நகரில் இதனை நடத்துவதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. ஆகவே, இலங் கையில் தான் இந்த விழா நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது; அவமானத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

இப்படியான விழாக்களை ஏற்பாடு செய்யும் போது அவதானம் தேவை. எதனையும் ஏற்பாடு செய்யும் போது கள நிலைமையைப் புரிந்து கொண்டு செயலாற்றுவது அவசியம்.

அத்தியாவசிய - நுகர்வுப் பொருள்களின் விலைகளை குறைக்க முடியாமல் அரசாங்கம் மற்றும் கூட்டுத்தாபன துறையினர் சம்பளங்களை அதிகரிக்க முடியாமல் நிதிப் பற்றாக்குறையால் திண்டாடும் அரசாங்கத்துக்கு இப்படியும் ஒரு 'தமாஷா' தேவை தானா என்று யதார்த்த வாதிகள் எழுப்பிய கேள்விக்கு சம்பந்தப்பட்டவர்கள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?

இந்தியாவைச் சந்தோசப்படுத்துவது இப்படியொரு 'கந்தறுந்த' விழாவை நடத்தி தன் விரலை தானே சுட்டுக்கொண்டது இலங்கை. இதனால் அவமானம் மட்டுமன்றி பெரும் வெக்கக் கேடும் ஆகும்.

### குடாநாட்டில் டெங்குக் காய்ச்சலை முற்றாக ஒழித்துக்கட்ட

# டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூன்று மாத காலத்துக்குத் தொடரும்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயை முற்றாக ஒழித்துக்கட்டும் நோக்குடன் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அடுத்த மூன்று மாத காலத்துக்குத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

பிரதேச,கிராம மட்ட டெங்கு தடுப்பு செயலணி குழுக்கள் வாராந்தம் கூடி அந்தப் பிரதேசங்களின் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்றும் -

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் ஒவ்வொரு புதன்கிழமையும் மாவட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் கண்காணிப்புக் குழு, டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் என்றும் - பணிப்பாளரின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தேசிய மட்டத்தில் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் அமைக்கப்பட்ட தேசிய டெங்குத்தடுப்பு செயலணிக் குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய யாழ்ப்பாண மாவட்டத்திற்கான டெங்கு நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. கடந்த 5 ஆம் திகதி யாழ். மாவட்ட டெங்குத் தடுப்பு செயலணிக்குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக் கைகள்**

**★ வைத்தியசாலைகள்.**

1. வைத்தியசாலை ஒவ்வொன்றும் கிரமமான முறையில் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
2. பொது சுகாதார பரிசோதகர்கள் வாரத்திற்கு ஒரு தடவை வைத்தியசாலையைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்கி அறிக்கையிட வேண்டும்.
3. வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட வேண்டும்.
4. தேவை ஏற்படின் வைத்தியசாலைகளில் புகையூட்டல் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

**பாடசாலைகள்**

1. ஒவ்வொரு திங்கட்கிழமையும் வெள்ளிக்கிழமையும் பாடசாலைகளில் மாணவர்களின் உதவியுடன் 30 நிமிடங்கள் சிரமதானம் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.
2. இச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கவும் ஏற்பாடு செய்யவும் ஒவ்வொரு பாடசாலையிலும் ஓர் ஆசிரியர் பொறுப்பாக நியமிக்கப்பட வேண்டும்.
3. பாடசாலை சுகாதாரக் குழுக்கள் டெங்கு சிரமதானப் பணியில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.
4. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இரு வாரத்துக்கு ஒரு தடவையேனும் பாடசாலையைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்க வேண்டும்.
5. ஒவ்வொரு பாடசாலையிலும் காலை ஒன்று கூடலில் அல்லது விசேட ஒன்று கூடலில் டெங்கு விழிப் புணர்வு கருத்துரை ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

**நிறுவனங்கள்**

1. ஒவ்வொரு நிறுவனமும் வாரத்தில் ஒரு நாள் தெரிவுசெய்யப்பட்டு அந்நாளில் ½ மணித்தியாலம் சிரமதானப் பணிக்காக ஒதுக்கப்பட வேண்டும்.
2. இச் செயற்பாட்டை ஒருங்கிணைக்க ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒரு உத்தியோகத்தர் பொறுப்பாக நியமிக்கப்பட வேண்டும்.
3. ஒவ்வொரு நிறுவனத்திலும் டெங்கு விழிப்புணர்வு பற்றிய கருத்துரை ஏற்பாடு செய்யப்படவேண்டும்.
4. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இரு வாரத்திற்கு ஒரு முறையேனும் நிறுவனங்களை பார்வை யிட்டு ஆலோசனை வழங்க வேண்டும்.

**பொது இடங்கள்**

1. சந்தைகள், கடைத் தெருக்கள் நகரப் பகுதிகள் போன்ற இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களினால் கிரமமாக சுத்திகரிக்கப்பட வேண்டும்.
2. திண்மக் கழிவுகள் கிரமமான முறையில் அகற்றப்பட்டு சரியான முகாமைத்தும் செய்யப்பட்டு கழிவு நீர் வாய்க்கால்கள் கிரமமான முறையில் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

**தனிப்பட்ட வீடுகள்**

1. உரிமையாளர்களால் அல்லது குடியிருப்பாளர்களினால் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
2. பராமரிப்பற்ற வீடுகள் உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்களினால் உடனடியாகச் சுத்திகரிக்கப்பட வேண்டும்.
3. பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று உரிய ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்குவார்கள் - என்றுள்ளது. (ஒ)

## நல்லுறவுப் பயணமாக சிங்கள மாணவர் யாழ். வருகை

கண்டி, மடகல்ல சிங்கள மகா வித்தியாலய ஆசிரியர், மாணவர் அடங்கிய குழுவினர் நல்லுறவுப் பாலம் அமைக்கும் நோக்கில் யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்துக்கு வந்துள்ளனர்.

இவர்கள் இந்தப் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்களையும், உணவுப் பொருள்களையும் வழங்கவுள்ளனர்.

இதற்கான நிகழ்வுகள் பாடசாலையில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளன. (ஒ-10)

## யாழ். கல்வி அலுவலகத்தில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்களுக்கான விசேட கூட்டம் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். கல்வி பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஒ-16)

### ஐ.தே.க. மறுசீரமைப்பு:

# இணக்கப்பாடு இன்றேல் இரகசிய வாக்கெடுப்பு

கொழும்பு, ஜூன் 8

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்கு ஆள்களைத் தெரிவு செய்யும்போது, இணக்கப்பாட்டுடன் தெரிவுசெய்ய முடியாது போனால் மட்டுமே இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்ய வேண்டும் என ஐ.தே.கட்சி மறு சீரமைப்புக் குழுவுக்கு சிபாரிசு ஆலோசனை கிடைத்துள்ளது.

ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க நேற்றுக் காலை எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கட்சி மறுசீரமைப்புக்கு என ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள எண்மர் அடங்கிய குழு கட்சியின் பல்வேறு தரப்புகளிடமிருந்தும் சிபாரிசுகளைப் பெற்றுவருகிறது. இவ்வாரம் ஐ.தே. கட்சி நாடாளுமன்ற எம்.பிக்களையும் சந்தித்து ஆலோசனைகள் பெறப்படும். அத்துடன், கட்சித் தொழிற் சங்கங்கள், சட்டத்தரணிகள் அமைப்பு உட்பட கட்சி சம்பந்தப்பட்ட பல்வேறு அமைப்புகளையும் இக்குழு சந்திக்கும்.

கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்களிடமும் ஆலோசனை பெறப்படும். இந்த ஆலோசனைகள் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கட்சி மாநாட்டில் முன்வைக்கப்படும்.

மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்படும் சிபாரிசுகளின்படி கட்சி யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### மொறட்டுவ பொறியியல் பீட தமிழ் மாணவரின் ஏற்பாட்டில்

# ஜி.சீ.ஈ. உயர்தர முன்னோடிப் பரீட்சை நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 8

எதிர்வரும் ஜி.சீ.ஈ. (உ/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள விஞ்ஞானப் பிரிவுத் தமிழ் மாணவர்களின் நன்மை கருதி மொறட்டுவப் பல்கலைக்கழக பொறியியல் பீட 2ஆம் வருட தமிழ் மாணவர்களால் விசேட முன்னோடிப் பொதுப் பரீட்சையொன்று நடத்தப்படவுள்ளது.

இந்த முன்னோடிப் பரீட்சையின் விசேட அம்சமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மன்னார், மலையகம் ஆகிய பகுதிகளில் ஒரே நேரத்தில் இப் பரீட்சைகளை நடத்தி அனைத்துப் பெறுபேறுகளையும் Z புள்ளி அடிப்படையில் தரப்படுத்தப்பட்டு மாணவர்களின் அடைவுமட்டம் வெளிக் கொணரப்படவுள்ளது.

இப்பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் யாழ். இந்துக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, வடமராட்சி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் நாளை புதன் கிழமைக்கு முன்னர் தமது பதிவுகளை யாழ்ப்பாணத்தில் ''வி.சி.எம்.'' கல்வி நிறுவனம், ''நியூ சயன்ஸ் ஹோல்'', சாவகச்சேரியில் ''நியூ சயன்ஸ் அக்கடமி'', நெல்லியடியில் ''பீகொன் சென்ரர்'' ஆகிய நிலையங்களில் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-16)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 26 | 09.06.2010 |
| | புதன்கிழமை |
| திதி | : துவாதசி |
| | மு.இ. 07.34 வரை |
| நட்சத்திரம் | : அச்சுவினி |
| | மு.ப. 09.56 வரை |
| சுபநேரம் | : 04.22 - 05.52 |
| ராகுகாலம் | : 11.52 - 01.22 |

## பளை பிரதேசத்தில் 2 ஆலயங்கள் புனரமைப்பு

நல்லூர், ஜூன் 8

பளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள புலோப்பளை புனித ராயப்பர் ஆலயம், புனித மரியாள் ஆலயம் ஆகியன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

தற்சமயம் இங்கு மீள்குடியேற்றம் இடம்பெற்றுவரும் நிலையில் பங்குத் தந்தையின் கோரிக்கைக்கமைய இந்த ஆலயங்கள் புனரமைக்கப்படவுள்ளதாகவும், தலா இரண்டு லட்சம் ரூபா வீதம் இதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் பளை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. (50-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி 'இசற்' புள்ளிவிவரம்

கடந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான 2009 - 2010 கல்வியாண்டுக்கான 'இசற்' வெட்டுப்புள்ளி மாவட்ட ரீதியான விவரம் வருமாறு:-

| Course of Study | Jaffna | Kilinochchi | Mullaitivu | Vavuniya | Mannar | Trinco | Batticaloa | Amparai | Colombo |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| MEDICINE | 1.7434 | 0.1149 | 0.3593 | 1.5926 | 1.3571 | 1.6490 | 1.6219 | 1.7067 | 1.9671 |
| DENTAL SURGERY | 1.7409 | 0.0168 | 0.2852 | 1.5646 | 1.3497 | 1.6469 | 1.6022 | 1.6956 | 1.9336 |
| VETERINARY SCIENCE | 1.6988 | 0.0149 | 0.2213 | 1.5321 | 1.2884 | 1.6283 | 1.5381 | 1.6101 | 1.8112 |
| MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | 1.7351 | -0.0271 | 0.1433 | 1.5539 | 1.3339 | 1.4952 | 1.5931 | 1.6954 | 1.8851 |
| AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.5755 | -0.2455 | -0.0718 | 1.4860 | 1.1523 | 1.2811 | 1.3909 | 1.4743 | 1.5571 |
| AGRICULTURE | 1.0602 | -0.2301 | -0.4398 | 0.9218 | 0.4875 | 0.8197 | 0.9193 | 1.0482 | 1.0760 |
| FOOD SCIENCE & NUTRITION | 1.5546 | NQC | -0.1025 | 1.4035 | 0.8577 | 1.2950 | 1.5371 | 1.5482 | 1.4822 |
| FOOD SCIENCE & TECHNOLOGY | 1.7108 | NQC | -0.2681 | 1.4302 | 0.9583 | 1.4787 | 1.5595 | 1.6234 | 1.7336 |
| BIOLOGICAL SCIENCE | 0.9718 | NQC | NQC | 0.4962 | 0.1820 | 0.7344 | 0.6841 | 0.9519 | 1.3845 |
| APPLIED SCIENCES (BIO.SC) | 0.9398 | NQC | NQC | 0.6723 | 0.5304 | 0.9842 | 0.6814 | 0.9205 | 1.2290 |
| ENGINEERING | 1.8822 | 0.3008 | 0.0661 | 1.5336 | 1.4474 | 1.3003 | 1.2928 | 1.3159 | 1.9170 |
| ENGINEERING (EM) | 1.8588 | NQC | NQC | 1.2960 | 1.4299 | 1.2984 | 1.2662 | 1.2695 | 1.8606 |
| ENGINEERING (TM) | 1.8007 | NQC | NQC | 1.2922 | 1.4201 | 1.1544 | 1.2089 | 1.2176 | 1.8691 |
| QUANTITY SURVEYING | 1.7921 | 0.0111 | NQC | 1.4551 | 1.2845 | 1.2313 | 1.2483 | 1.2617 | 1.7934 |
| COMPUTER SCIENCE | 1.5812 | NQC | NQC | 1.1883 | 1.1618 | 0.8595 | 1.1260 | 1.0507 | 1.6393 |
| PHYSICAL SCIENCE | 0.9711 | NQC | NQC | 0.7547 | 0.1987 | 0.1455 | 0.4747 | 0.6092 | 1.1509 |
| SURVEYING SCIENCE | 1.5514 | NQC | NQC | 1.2779 | 1.1335 | 0.7799 | 1.1598 | 1.1853 | 1.5962 |
| APPLIED SCIENCES (PHY.SC) | 0.9264 | NQC | NQC | 0.8267 | 0.5436 | 0.3853 | 0.8020 | 0.8768 | 0.9910 |
| MANAGEMENT | 1.2815 | 0.5482 | -0.1057 | 1.1037 | 0.9093 | 1.1662 | 1.0292 | 1.1421 | 1.5856 |
| ESTATE MANAGEMENT & VALUATION | 1.7086 | 0.9646 | -0.1865 | 1.5182 | 1.2490 | 1.6372 | 1.5862 | 1.6876 | 1.6241 |
| COMMERCE | 1.2264 | 0.3949 | -0.2066 | 1.1257 | 0.8813 | 1.0631 | 0.9441 | 1.1029 | 1.5640 |
| PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.7434 | 1.6314 | 1.5234 | 1.6528 | 1.3935 | 1.6450 | 1.7608 | 1.7786 | 1.6125 |
| ARTS * | 1.3529 | 0.8714 | 0.8792 | 1.3529 | 1.1389 | 1.3337 | 1.3529 | 1.3179 | 1.2523 |
| ARTS (SP) / MASS MEDIA* | 1.2444 | 1.2444 | 1.2444 | 1.2444 | 1.2444 | 1.2444 | 1.2444 | 1.2444 | 1.2444 |
| ARTS (SP)/ PERFORMING ARTS * | 0.9670 | 0.9670 | 0.9670 | 0.9670 | 0.9670 | 0.9670 | 0.9670 | 0.9670 | 0.9670 |
| ARTS (SAB) - A * | 1.3446 | 1.3446 | 1.3446 | 1.3446 | 1.3446 | 1.3446 | 1.3446 | 1.3446 | 1.3446 |
| ARTS (SAB) - B * | 1.4046 | 1.4046 | 1.4046 | 1.4046 | 1.4046 | 1.4046 | 1.4046 | 1.4046 | 1.4046 |
| MANAGEMENT STUDIES (TV) - A | 1.2376 | 1.2111 | -0.2609 | 1.1746 | 0.8689 | 1.0596 | 0.9848 | 1.1024 | 1.4237 |
| MANAGEMENT STUDIES (TV) - B | 1.3374 | 0.8391 | 0.8781 | 1.3286 | 1.2456 | 1.3309 | 1.3977 | 1.3893 | 1.4060 |
| ARCHITECTURE | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.9799 |
| DESIGN (ARCHITECTURE) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.6008 |
| TOWN & COUNTRY PLANNING | 1.7162 | 0.2536 | -0.2380 | 1.5025 | 1.1701 | 1.6000 | 1.6983 | 1.6345 | 1.6836 |
| FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.0337 |
| INFORMATION TECHNOLOGY | 1.7713 | NQC | NQC | 1.3653 | 0.9209 | 1.3072 | 1.4035 | 1.6014 | 1.7543 |
| INFORMATION TECHNOLOGY & MANAGEMENT | 1.6592 | NQC | NQC | 1.4614 | 1.4472 | 1.6022 | 1.6676 | 1.5803 | 1.6683 |
| FACILITIES MANAGEMENT | 1.6596 | 0.5884 | NQC | 1.5704 | 1.1013 | 1.6376 | 1.6570 | 1.5921 | 1.8250 |
| TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 1.7819 | NQC | NQC | 1.1972 | 0.6939 | 1.0782 | 1.1939 | 1.2222 | 1.7552 |
| LAW | 1.6828 | 0.4507 | 0.0164 | 1.7107 | 1.7077 | 1.6687 | 1.7620 | 1.6641 | 1.6328 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY | 1.3305 | NQC | NQC | 0.9703 | 1.0656 | 1.1459 | 1.3201 | 1.4461 | 1.3302 |
| COMMUNICATION STUDIES * | 1.3302 | 1.3302 | 1.3302 | 1.3302 | 1.3302 | 1.3302 | 1.3302 | 1.3302 | 1.6400 |
| PEACE & CONFLICT RESOLUTION * | 1.6400 | 1.6400 | 1.6400 | 1.6400 | 1.6400 | 1.6400 | 1.6400 | 1.6400 | |
| AYURVEDIC MEDICINE & SURGERY * | 1.0350 | 1.0350 | 1.0350 | 1.0350 | 1.0350 | 1.0350 | 1.0350 | 1.0350 | 1.0350 |
| UNANI MEDICINE & SURGERY * | 0.8344 | 0.8344 | 0.8344 | 0.8344 | 0.8344 | 0.8344 | 0.8344 | 0.8344 | 0.8344 |
| SIDDHA MEDICINE * | 0.6998 | 0.6998 | 0.6998 | 0.6998 | 0.6998 | 0.6998 | 0.6998 | 0.6998 | 0.6998 |
| INFORMATION & COMMUNICATION TECHNOLOGY | 1.0465 | NQC | NQC | 1.2255 | 0.2825 | 0.4285 | 1.0306 | 0.7297 | 1.3903 |
| HEALTH PROMOTION | 1.2822 | NQC | NQC | 0.9948 | 0.4903 | 1.1536 | 1.2805 | 1.2884 | 1.2767 |
| NURSING | 1.3777 | NQC | NQC | 1.0015 | 0.4547 | 1.1856 | 1.2480 | 1.2833 | 1.3100 |
| PHARMACY | 1.6520 | NQC | NQC | 1.2845 | 0.8524 | 1.4655 | 1.3696 | 1.6044 | 1.6704 |
| MEDICAL LABORATORY SCIENCES | 1.6539 | NQC | -0.2766 | 1.3149 | 0.9141 | 1.4760 | 1.5618 | 1.6242 | 1.6992 |
| RADIOGRAPHY | 1.5497 | NQC | NQC | 1.4142 | 1.2315 | 1.3903 | 1.2869 | 1.6039 | 1.6689 |
| PHYSIOTHERAPY | 1.7054 | -0.0448 | -0.0534 | 1.5123 | 1.1382 | 1.4382 | 1.5804 | 1.6310 | 1.8317 |
| ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | 1.2867 | NQC | NQC | 0.6985 | 1.3119 | 1.0814 | 1.1292 | 1.2668 | 1.3179 |
| INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | 1.6172 | NQC | NQC | 1.1590 | 0.6891 | 1.0378 | 1.1387 | 1.1447 | 1.6077 |
| STATISTICS & OPERATIONS RESEARCH | 1.5828 | NQC | NQC | 1.0251 | 0.6848 | 0.9552 | 1.1601 | 1.0148 | 1.5677 |
| COMPUTATION & MANAGEMENT | 1.6617 | 0.3694 | 1.1011 | 1.5192 | 1.2655 | 1.6757 | 1.5334 | 1.6284 | 1.5613 |
| FISHERIES & MARINE SCIENCES | 1.2837 | NQC | NQC | 0.9284 | 1.0572 | 1.0942 | 1.0320 | 1.2414 | 1.2831 |
| ANIMAL SCIENCE & FISHERIES | 1.3647 | NQC | NQC | 1.1852 | 0.7759 | 1.1036 | 1.2833 | 1.3881 | 1.3636 |
| FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT | 1.4191 | -0.4877 | NQC | 1.2311 | 0.5678 | 1.1165 | 1.3001 | 1.4258 | 1.3696 |
| ISLAMIC STUDIES * | 1.2511 | 1.2511 | 1.2511 | 1.2511 | 1.2511 | 1.2511 | 1.2511 | 1.2511 | 1.2511 |
| ARABIC LANGUAGE * | 0.8880 | 0.8880 | 0.8880 | 0.8880 | 0.8880 | 0.8880 | 0.8880 | 0.8880 | 0.8880 |
| SCIENCE & TECHNOLOGY | 1.1092 | NQC | NQC | 1.0079 | 0.5239 | 0.3401 | 0.9770 | 0.9549 | 1.0098 |
| COMPUTER SCIENCE & TECHNOLOGY | 1.3397 | NQC | NQC | 0.9583 | 0.6514 | 0.3605 | 1.1162 | 1.2266 | 1.2698 |
| ENTREPRENEURSHIP & MANAGEMENT | 1.2202 | NQC | NQC | 1.4230 | 1.2539 | 0.9781 | 1.2660 | 1.4053 | 1.4308 |
| ANIMAL SCIENCE | 0.7955 | NQC | NQC | 0.7199 | 0.4988 | 0.2619 | 0.6500 | 0.8163 | 0.9260 |
| EXPORT AGRICULTURE | 0.7759 | NQC | NQC | 0.5918 | 0.1386 | 0.3330 | 0.5804 | 0.8884 | 1.0254 |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION | 0.8043 | NQC | NQC | 0.5452 | 0.1602 | 0.3211 | 1.0192 | 0.8306 | 0.9599 |
| INDUSTRIAL INFORMATION TECHNOLOGY | 1.3847 | NQC | NQC | 1.3292 | 1.0007 | 0.7306 | 1.0733 | 1.2578 | 1.3453 |
| MINERAL RESOURCES & TECHNOLOGY | 1.0143 | NQC | NQC | 0.8586 | 0.4137 | 0.7855 | 0.9804 | 1.0171 | 0.9753 |
| PALM AND LATEX TECHNOLOGY & VALUE ADDITION | 0.7180 | NQC | NQC | 0.3915 | 0.1043 | 0.3170 | 0.4980 | 0.6150 | 0.8675 |
| HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT | 1.2709 | NQC | NQC | 1.3434 | 1.3863 | 1.1514 | 1.3848 | 1.3303 | 1.3490 |
| BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.6500 | 0.4203 | -0.3540 | 1.6375 | 1.3330 | 1.6414 | 1.6014 | 1.5881 | 1.6684 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) | 1.4810 | 0.8452 | 0.8889 | 1.3717 | 1.3969 | 1.4573 | 1.5229 | 1.5022 | 1.4676 |
| COMPUTING & INFORMATION SYSTEMS | 0.6467 | NQC | NQC | NQC | NQC | 0.4796 | NQC | 0.6806 | 0.7856 |
| PHYSICAL EDUCATION | -0.1534 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.5336 | 0.5934 |
| SPORTS SCIENCES & MANAGEMENT | 1.1951 | NQC | NQC | 1.0474 | NQC | NQC | NQC | 1.0516 | 0.9648 |
| SPEECH & HEARING SCIENCES | 1.2162 | 0.8037 | NQC | 1.2992 | 1.3161 | 1.1783 | 1.3086 | 1.4101 | 1.3465 |
| AQUATIC RESOURCES TECHNOLOGY | 0.7381 | NQC | NQC | 0.6674 | 0.2476 | 0.2538 | 0.3285 | 0.8342 | 0.9186 |
| ART & SCULPTURE (UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | NQC | NQC | NQC | NQC | NQC | 0.8403 | NQC | 0.3097 | 0.7920 |
| MUSIC (UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.3156 | 0.4499 |
| DANCE (UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | NQC | NQC | NQC | NQC | NQC | 0.4063 | NQC | 0.6660 | 0.9378 |
| DRAMA & THEATRE (UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.8539 |
| ART & DESIGN (RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.7707 | NQC | NQC | 0.8223 | NQC | NQC | 0.1249 | 0.3840 | NQC |
| MUSIC (RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.4589 | 0.1382 | -0.2302 | 0.3647 | 0.1692 | -0.4484 | 0.0273 | 0.1082 | 0.8757 |
| DANCE (RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.4642 | -0.2393 | -0.5074 | 0.2528 | 0.3614 | -0.4036 | 0.1705 | 0.3872 | 0.1340 |
| VISUAL & TECHNOLOGICAL ARTS (SWAMI VIPULANANDA INSTITUTE) | 0.7793 | 0.8063 | 0.4650 | 0.2675 | 0.6092 | 0.8765 | 0.7053 | 0.8587 | 0.5497 |
| MUSIC (SWAMI VIPULANANDA INSTITUTE) | 0.3121 | -0.4983 | -0.5115 | -0.0553 | 0.0528 | -0.0917 | -0.2597 | 0.2077 | 0.7887 |
| DANCE (SWAMI VIPULANANDA INSTITUTE) | 0.2760 | -0.0088 | 0.1839 | 0.0589 | -0.0760 | -0.0011 | -0.2034 | -0.1403 | -0.5666 |
| DRAMA & THEATRE (SWAMI VIPULANANDA INSTITUTE) | 1.2833 | 0.7256 | 0.8519 | 1.1115 | 1.0845 | 0.0692 | 1.2450 | 1.1758 | 0.6339 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக

# யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளின் விடுதிகளுக்குள் பொலித்தீன், இளநீர் கோம்பை கொண்டுசெல்லத் தடை

யாழ்ப்பாணம்,ஜூன் 8

யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்திய சாலைகளின் விடுதிகளுக்குள் பொலித் தீன் பைகளையும் இளநீர் கோம்பையுடம் கொண்டு செல்லத் தடை விதிக்கப் பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு ஓர் அம்சமாகவே இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்திய சாலைகளின் விடுதிகளில் பொலித்தீன் பைகளால் கழிவுநீர் வாய்க்கால்கள் தடைப்படுகின்றன. பல இடங்களில் பொலித்தீன் பைகளில் நீர் தேங்கி நிற்பது நுளம்பு பெருக்கத்திற்குக் காரணமாக அமைகின்றது. வைத்தியசாலைகளில் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டால் வைத் தியசாலைகளுக்குள்ளேயே ஒரு நோயா ளியில் இருந்து இன்னொரு நோயாளிக்கு டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட லாம். எனவே வைத்தியசாலை விடுதி களுக்கு பொலித்தீன் பைகள் கொண்டு வரப்படுவது டெங்குநோய் கட்டுப்பாட் டின் ஓர் நடவடிக்கைக்காக தடை செய் யப்படுகின்றது.

இதேபோன்று விடுதிகளில் வீசப்படும் வெற்று இளநீர் கோம்பைகளில் தண்ணீர் தேங்கி நின்று நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக அமைகின்றது. எனவே இளநீர் கோம்பைகளை விடுதிகளுக்கு கொண்டு வருவது தடைசெய்யப்படுகின்றது. இள நீரை வேறு ஏதாவது ஒரு போத்தலில் கொண்டுவரும்படி பொதுமக்களை கேட் டுக்கொள்கின்றோம்.

இலங்கையின் சில வைத்தியசாலை களில் டெங்கு நோய் கட்டுப்பாட்டின் ஓர் அம்சமாக இத்தடைகள் இருப்பதை சுட் டிக்காட்ட விரும்புகின்றேன். எனவே டெங்கு நோய் பரம்பலைக் கட்டுப்படுத்த எமது மக்களை இதற்கு ஒத்துழைப்புத் தரு மாறு வேண்டுகின்றேன். - என்றுள்ளது. (50-14)




# மீண்டும் தடைப்பட்டது குமுதினி அரச படகுச் சேவை

## கடல்நீர் உட்புகுவதே காரணம்

நெடுந்தீவு,ஜூன் 8

நெடுந்தீவு போக்குவரத்துச் சேவை யில் உள்ள அரச படகான குமுதினி மீண் டும் கடல் நீர் உட்புகுவதாக கூறி சேவை யில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் மேற்படி படகு கடல் நீர் உட்புகுவதாகக் கூறி குறிகாட்டுவானில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் சேவைக்கு வந்திருந்தது.

அடிக்கடி திருத்த வேலைகளுக்கென பெருந்தொகையான பணம் குமுதினிப் படகுக்கு ஒதுக்கப்படுவதாகவும் திருத்த வேலைகளுக்கென ஒதுக்கிய பணத்தி லேயே புதிய படகொன்றைக் கட்டி முடித் திருக்கலாம் எனவும் பொதுமக்கள் கூறு கிறார்கள்.

சங்கப் படகு சமுத்திரதேவாவும் திருத்த வேலைகளுக்கென கரையில் ஏற்றிவைக் கப்பட்டுள்ள நிலையில் தனியார் படகான 'அக்குவாட்டி' மட்டுமே தற்சமயம் சேவை யில் உள்ளது.

கடற்றொழிலாளர் சங்கப் படகு பய ணிகளை ஏற்றி இறக்குவதற்கான அனு மதியைப் பெறவில்லை எனவும் தெரிவிக் கப்படுகின்றது. (50-111)

# மனவளக் கலை அறிமுகப் பயிற்சி

நல்லூர்,ஜூன் 8

சமுதாய வாழ்க்கைக் கல்விக்கான இல வச அறிமுக உரையும், காயகல்பப் பயிற் சியும் இன்று செவ்வாய்க்கிழமை முற் பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் நடை பெறும்.

இலங்கை மனவளக் கலை மன்ற அறங் காவலர் அருள்நிதி சி.முருகானந்தவேள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வின் தொடக்கவுரையை புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபால னும் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனும் அறிமுகவுரையை தமிழக வேளாண் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் த.இலக்குமணனும் வழங்குவார்கள். (இ-111)

# வேலணை மத்தியஸ்தர் சபையில் அதிக எண்ணிக்கையான முறைப்பாடு

வேலணை,ஜூன் 8

வேலணை பிரதேச மத்தியஸ்த சபை யில் கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தவி சாளர் தெரிவித்தார்.

காணித் தகராறு, சிறுகளவுகள், பண மோசடி, குடும்பத்தகராறுகள் என தற் போது அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

அண்மையில் பொலிஸ் திணைக் களத்துக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்த லின் பிரகாரம் சிறுபிரச்சினைகள் மத்தி யஸ்த சபைக்கு பாரப்படுத்தப்படுகின்றன. எனினும் அநேக முறைப்பாடுகள் சுமுக மாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாகவும், சில பொலிஸாருக்கு பாரப்படுத்தப்பட் டுள்ளதாகவும் தவிசாளர் எஸ்.கே.சண்முக லிங்கம் மேலும் தெரிவித்தார். (50-267)



உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி பாடசாலை மாணவர்கள் யாழ்.நகரில் நடத்திய விழிப்புணர்வுப் பேரணியை முதற்படத்திலும், முற்றவெளியில் இடம்பெற்ற சிரமதானப் பணியை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்துவைப்பதை இரண்டாவது படத்திலும், பொதுமக்கள் சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள் : நந்தன்)

# ஊர்காவற்றுறை - காரைநகர் இடையேயான பாதைச் சேவை சீரில்லை என முறைப்பாடு

குருநகர்,ஜூன் 8

ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக் கும் இடையே வீதி அதிகார சபையால் நடத்தப்படும் பாதைச் சேவை சீராக நடைபெறாததனால் இப்பாதையூடாக பய் ணிக்கும் அரச ஊழியர்கள் தமது அலு வல்களுக்கு உரிய நேரத்துக்கு சென்று வரமுடியாமல் உள்ளதாக ஊர்காவற்றுறை யில் உள்ள அரச அலுவலங்கங்களில் சேவை புரிந்து வரும் அரச ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பாதைச் சேவை குறிப்பிட்ட நேரத் திற்கு நடைபெறாததுடன் பாதையை செலுத் துபவர்கள் தாம் நினைத்த நேரத்தில் இச் சேவையை நடத்துவதுடன் பாதையை மிகவும் குறைவான நேரத்துக்கு செலுத் திச் செல்வதனால் பயணத்தில் தாமதம் ஏற்படுவதாகவும், இதனால் குறிப்பிட்ட நேரத்துக்கு அரச அலுவலகங்களுக்கு கட மைக்குச் சமுகம் அளிக்கமுடியாமல் உள்ளதாகவும் இந்த அலுவலர்கள் தெரி வித்துள்ளனர். (50-51)

# உரும்பிராய்ச் சந்தியில் மதுப்பிரியர்களின் அதிகரிக்கும் அட்டகாசத்தால் அசௌகரியம்

யாழ்ப்பாணம்,ஜூன் 8

மதுபோதையில் அட்டகாசம் செய்வோரின் எண்ணிக்கை உரும்பிராய்ச் சந்தியில் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாக வீதியால் பயணிக்கும் பொதுமக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

உரும்பிராய் சந்தியில் போதை தலைக்கேறிய நிலையில் நடமாடுவோர் பகல், இரவு என்றில்லாமல் எல்லா வேளைகளிலும் கெட்டவார்த்தைகளைப் பிரயோகிப்பது டன் வீதியால் செல்வோருடன் வீணான சண்டித்தனத்திலும் ஈடுபடுகின்றனர். அத்து டன் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவிகளை யும் இவர்கள் ஏளனம் செய்வதாகவும் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இனியாவது சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் -

மதுப்பிரியர்களால் பொதுமக்கள் அனுபவிக்கும் அசௌகரியங்களை நீக்க ஆவன செய்யவேண்டுமெனவும் - கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-288)

# ஆஸ்பத்திரியில் மரம் நடுகை

நவாலி,ஜூன் 8

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத் தியசாலையில் வைத்தியசாலை அபிவி ருத்திச் சபையினரின் ஏற்பாட்டில் மரம் நடும் வைபவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வைத்தியசாலை பொறுப்பதிகாரி ஏகாம் பரமூர்த்தி பத்மராணி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மாவும் சிறப்பு விருந்தினர்களாக நவாலி கிராம சேவையாளர் ரி.நித்தியானந்தன், ஆனைக் கோட்டை அ.மி.த.க.பாடசாலை அதிபர் சி.நாகையா ஆகியோரும் கலந்து கொண்டு மரங்களை நட்டுவைத்தனர்.

இந்நிகழ்வில் பொதுமக்களும் வைத் தியசாலை ஊழியர்கள், வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரும் கலந்துகொண் டனர். (1-100)

# மாகாணமட்டத் தமிழ்மொழித் தின போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்

வலி வடக்கு,ஜூன் 8

வடமாகாண கல்வித் திணைக்களத்தி னால் வடமாகாண மாவட்ட கல்வி வல யங்களுக்கு இடையே நடைபெற்ற தமிழ் மொழித் தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு-

பிரிவு 1(ஆக்கம்- எழுத்து)

பா. காருண்யா ( சென் ஜோன் பொஸ் கோ வித்தியாலயம்-யாழ்ப்பாணம்), ந. அபிராமி (வித்தியானந்தாக் கல்லூரி- முல்லைத்தீவு), ம.லக்சன் ( புதுக்குளம் மகா வித்தியாலயம் - வவுனியா வடக்கு)

பிரிவு 2 (கட்டுரை வரைதல்)

ப.கஸ்தூரி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை- யாழ்ப்பாணம்), இ.சங்கீத் தனா (இந்துக் கல்லூரி- கிளிநொச்சி), செ. அருந்துசன்(ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியா சாலை - (முல்லைத்தீவு)

பிரிவு 3

ப.கதிர்தர்சினி ( வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை - யாழ்ப்பாணம்), க.மோக னப்பிரியா ( உயிலங்குளம் றோமன் கத். தோலிக்க தமிழ் வித்தியாலயம் - மன்னார்), க.தூரிகா (முழங்காவில் மகா வித்தியால யம் - கிளிநொச்சி)

பிரிவு 4 கட்டுரை வரைதல் (இலக்கியம் நயத்தல்)

சோ.நிரஞ்சன் (கிடாச்சூரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை - வவுனியா வடக்கு), பொ. கோகிலா ( வற்றாப்பளை மகா வித்தி யாலயம்- (முல்லைத்தீவு), ஏ.எப்.நிபாயா (அல்மினா மகா வித்தியாலயம் - மன்னார்)

பிரிவு 5

ப.கஜிதா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் - யாழ்ப்பாணம்), அ.மடு மலர் (நானாட்டான் மகா வித்தியாலயம் - மன்னார்), சோ.வசந்தகௌரி(புதுக்குளம் மகா வித்தியாலயம் - வவுனியா வடக்கு)

பிரிவு 6 (இலக்கணப்போட்டி)

கோ.தர்மிக்கா (வட இந்து மகளிர் கல் லூரி - பருத்தித்துறை), ச.கீர்த்திகா (இறம் பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் - வவுனியா தெற்கு), உ. துஷேந்தினி(முருங் கன் மகாவித்தியாலயம் - மன்னார்.)

பிரிவு 7

க.சிவகௌரி நாயகி ( யூனியன் கல் லூரி - யாழ்ப்பாணம்), இ. நிஷாந்தினி( தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - வவு னியா தெற்கு), நற்குணநாதன் ஜீவிதா (பாத்திமா மத்திய மகா வித்தியாலயம் - மன்னார்) (தொடரும்) (எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியை உறுதிப்படுத்தாமல் ஒருபோதும் மாவோக்களுடன் அதிகாரப் பகிர்வு இல்லை

## நேபாள காங்கிரஸ் திட்டவட்டம்

காத்மாண்டு, ஜூன் 8

அமைதியை உறுதிப்படுத்தாமல் மாவோவாதிகளுடன் அதிகாரப்பகிர்வு செய்துகொள்ள முடியாது என நேபாள காங்கிரஸ் கட்சி உறுதிபடத் தெரிவித்துள்ளது.

அறிவுஜீவிகளுடன் நேபாள காங்கிரஸ் தலைவர்கள் கலந்துரையாடும் நிகழ்ச்சி காத்மாண்டுவில் சனிக்கிழமை நடைபெற்றது. பேச்சுகள் மூலம் அமைதி முயற்சிக்கு ஒரு முழுமையான தீர்வு காணவே தாங்கள் விரும்புகிறார்கள் என நேபாள காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் சுசீல் கொய்ராலா இதில் கூறினார்.

பிரதமர் பதவி விலகவேண்டும் என்பதை நாங்கள் மையப்படுத்தவில்லை. அமைதி முயற்சி முழுமை அடையவேண்டும். இதுவே முக்கியமானது என கட்சியின் துணைத் தலைவர் ராமச்சந்திர பொத்யால் கூறினார்.

சர்வாதிகார அரசை அமைக்கவேண்டும் என்ற மறைமுகத் திட்டம் மாவோவாதிகளுக்கு உள்ளது. இதற்கு நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம் என்றும் ராமச்சந்திர பொத்யால் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட அரசு சொத்துகளைத் திரும்ப ஒப்படைத்தல், தங்களது ஆயுதப் படையை கலைத்தல் ஆகியவை தொடர்பாக கடந்த 4 ஆண்டுகளில் 8 ஒப்பந்தங்களில் மாவோவாதிகள் கையெழுத்திட்டுள்ளனர். அதை முதலில் அவர்கள் அமுல்படுத்தவேண்டும் என கட்சியின் செய்தித் தொடர்பாளர் அர்ஜுன் நரசிங் கத்ரிசேத்ரி வலியுறுத்தினார்.

அதேவேளை, அரசியல் நிர்ணய சபையின் காலத்தை நீடிப்பதை தாங்கள் ஆதரிக்க வேண்டுமானால், பிரதமர் மாதவ் குமார் நேபாள் இராஜிநாமா செய்யவேண்டும் என மாவோவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஒருமித்த கருத்தின் அடிப்படையில் கூட்டணி அரசு அமைக்கவேண்டும் என மாவோவாதிகள் கூறிவருகின்றனர்.

# தாய்லாந்தின் அமைச்சரவை மாற்றத்துக்கு மன்னர் ஒப்புதல்

பாங்கொக், ஜூன் 8

தாய்லாந்து அமைச்சரவை மாற்றியமைப்புக்கு மன்னர் ஒப்புதல் அளித்துள்ளார்.

அமைச்சரவையில் 8 பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டு மன்னரின் ஒப்புதல் கோரப்பட்டது. இதற்கு மன்னர் ஒப்புதல் அளித்துவிட்டார் என்று பிரதமர் அபிசித் வெஜஜிவா தெரிவித்தார்.

அரசில் அங்கம் வகிக்கும் கூட்டணி கட்சிகள் ஒற்றுமையுடன் செயற்படும் நோக்கில் இந்த அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டது. இதனால் கூட்டணி கட்சிகள் இனிமேல் ஒற்றுமையுடன் செயற்படும் என்ற நம்பிக்கை உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றியமைப்புக்கு மன்னர் ஒப்புதல் அளித்தாலும், புதிய அமைச்சர்கள் பதவி ஏற்பது குறித்து மன்னர் தரப்பில் இருந்து தகவல் இல்லை. இதனால் அதற்காகக் காத்திருக்கிறோம் என்றும் அபிசித் வெஜஜிவா கூறினார்.

# சவூதி இளவரசர்களுக்கு அல் - குவைதா மிரட்டல்

துபாய், ஜூன் 8

சவூதி அரேபிய சிறையில் அடைக்கப்பட்டுள்ள அல்-குவைதா இயக்கப் பெண் தீவிரவாதி ஒருவரை மீட்பதற்காக சவூதி அரேபிய இளவரசர்களும்,அமைச்சர்களும் கடத்தப்படுவார்கள் என அல் - குவைதா அறிவித்தல் விடுத்துள்ளது.

சவூதி அரேபியாவைச் சேர்ந்த பெண் ஹேய்லா அல் காசிர், மதபோதகர் ஹெய்லா அல் கசாயர் என்பவரின் மனைவி ஆவார். அல் - குவைதா இயக்கத்தைச் சேர்ந்த இந்த மத போதகர் 6 ஆண்டுகளுக்கு முன்னர் சவூதி பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதன் பின்னர் காசிர் அல் - குவைதா இயக்கத்தில் சேர்ந்தார். இவர் அந்த இயக்கத்துக்காகப் பெண்களைத் திரட்டினார். அத்தோடு அந்த இயக்கத்துக்குச் சொந்தமான நிதியையும் இவர்தான் நிர்வகித்துவந்தார். இவர் ரியாத் நகருக்கு வெளியே சமீபத்தில் கைது செய்யப்பட்டார். இப்போது இவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

இவரை விடுதலை செய்யவேண்டும் என்பதில் அல் - குவைதா தீவிரமாக இருக்கிறது. இதற்காக அந்த இயக்கம் சவூதி அரேபிய இளவரசர்களுக்கு மிரட்டல் விடுத்துள்ளது. இது தொடர்பாக ஓர் ஒலிநாடாவை அல் - ஜசீரா தொலைக்காட்சி நிறுவனம் ஒளிபரப்பியுள்ளது.

அதில் அரேபிய தீபகற்ப பிரதேசத்தின் அல் - குவைதா இயக்கத்தில் 2ஆவது இடத்தில் இருக்கும் சயீத் அல்-ஷேரி பேசியிருக்கிறார்.

சவூதி அரேபியாவின் இளவரசர்கள், அமைச்சர்கள், இராணுவத் தளபதிகள் ஆகியோரைக் கடத்திச் செல்ல எங்கள் இயக்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று அவர் ஒலிநாடாவில் குறிப்பிட்டுள்ளார்.

# தென் ஆபிரிக்க மைதானத்தில் மோதல்; இரு பொலிஸார் உட்பட 16 பேர் காயம்!



பிரிட்டோரியா, ஜூன் 8

உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டிகள் நடைபெறவுள்ள தென் ஆபிரிக்காவில், மைதானமொன்றில் இடம்பெற்ற மோதலில் 16 பேர் காயமடைந்துள்ளனர்.

உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டி நடைபெறவுள்ள மைதானமொன்றிற்கு வெளியே இரசிகர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 16 பேர் காயமடைந்துள்ளனர்.

ஜொஹனர்ஸ்பேர்க் டெம்பிஷா மைதானத்தில் இந்தக் கலவரம் இடம்பெற்றுள்ளது. நைஜீரியா, தென் கொரிய அணிகளுக்கு இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ போட்டியின்போது இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.


இந்த இலவச போட்டியை கண்டு களிப்பதற்காக பெருந்தொகையான இரசிகர்கள் முயற்சித்த காரணத்தினால் இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

நுழைவுச் சீட்டு பிரச்சினைக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என சர்வதேச கால்பந்தாட்டப் பேரவை அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஒரு பொலிஸ் அதிகாரி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# துருக்கிக் கப்பல் மீதான தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணைக்கு இடமளியோம்!

## இஸ்ரேல் இறுமாப்பு



டெல் அவிவ், ஜூன் 08

பலஸ்தீன மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் சென்ற துருக்கி கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

கப்பல் மீது இஸ்ரேலிய படையினர் நடத்திய தாக்குதல் சம்பந்தமாக சர்வதேச ஆணைக்குழுவொன்று விசாரணை நடத்த உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது இராணுவத்தினரின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்தும் உரிமையும், ஆற்றலும் இஸ்ரேலிய அரசுக்கு உண்டு. இதனால் ஏனையோரின் தலையீடு அவசியமில்லை என அமெரிக்காவிற்கான இஸ்ரேலிய தூதுவர் மிச்சேல் ஓரன் தெரிவித்துள்ளார்.

துருக்கி கப்பல் மீது இஸ்ரேலிய துருப்பினர் நடத்திய தாக்குதல்களில் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேல் ஒரு ஜனநாயக நாடு. சர்வதேச அமைப்புகளால் இஸ்ரேல் விவகாரத்தை விசாரணை செய்ய அனுமதிக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிப்படையானதும், நியாயமானதுமான முறையில் விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் கோரிக்கை விடுத்துள் ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெட்டன்யாகுவுடன், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தொலைபேசி மூலம் உரையாடியுள்ளார்.

இதேவேளை, நிவாரணப் பொருள்களை ஏற்றிச் சென்ற கப்பல்களைச் சேர்ந்தவர்களை இஸ்ரேலிய அரசு நாடு கடத்தியுள்ளது.

உலக அரங்கில்

# லண்டன் கண்காட்சியில் கிளியோபாட்ராவின் கடிதம்

லண்டன், ஜூன் 8

உலகப் பேரழகியான கிளியோபாட்ரா தன் கைப்பட எழுதிய கடிதமொன்று கண்காட்சியில் இடம்பெற்றுள்ளது. உலகப் பேரழகியான கிளியோபாட்ரா எகிப்தின் இராணியாக இருந்தவர். அவர் கிரேக்க சாம்ராஜ்யத்தின் மன்னரான மார்க் அண்டோனியை திருமணம் செய்துகொண்டார்.

இந்த கிளியோபாட்ரா பயன்படுத்திய பொருள்களின் கண்காட்சி லண்டனில் தற்போது நடைபெற்று வருகிறது. இது எதிர்வரும் ஜனவரி மாதம் வரை நீடிக்கும்.

கிளியோபாட்ராவின் சொந்த ஊரான டபோசிரிஸ் மேக்னா கடலில் மூழ்கிவிட்டது. இந்த நகரில் கடலுக்கு அடியில் அகழ்வாராய்ச்சி நடந்தது. அப்போது கிளியோபாட்ரா காலத்து நகரம் மண்மூடிக்கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

அங்கிருந்து அவர் பயன்படுத்திய பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்தப் பொருள்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

# சூறாவளி அனர்த்தங்களால் பாக். சிந்து மாகாணம் பாதிப்பு

## நிவாரண முகாம்களில் 5 ஆயிரம் பேர்

கராச்சி, ஜூன் 8

கடும் மழையோடு கூடிய 'பெட்' சூறாவளியால் பாகிஸ்தானின் சிந்து மாகாணம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. சுமார் ஐயாயிரம் பேர் தாழ்வான பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

அரபிக் கடலில் உருவான இந்த 'பெட்' சூறாவளி குஜராத் மாநிலம் வழியாக ஓமானைத் தாக்கியது. இதனால் அங்கு பலத்த மழை பெய்தது. இதில் 15 பேர் பலியாயினர். 60 ஆயிரம் பேர் அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். ஓமானை தாக்கிய இச்சூறாவளி அங்கிருந்து பாகிஸ்தான் கடல் பகுதிக்குள் புகுந்தது.

இதனால் சிந்து மாகாணத்தில் தத்தா கடலோரத்தை பலத்த மழையோடு சூறாவளி தாக்கியது. பலத்த மழை நீடிக்கிறது. கடலில் 3 முதல் 5 மீற்றர் உயரத்துக்கு இராட்சத அலைகள் எழும்புகின்றன. இந்த சூறாவளியின் தாக்கம் கராச்சி கடலோரப் பகுதிகளிலும் எதிரொலித்துள்ளது.

அங்கும் பலத்த மழை கொட்டுகிறது. சிந்து மாகாணத்தில் உள்ள கேதிபந்தா நகரில் தாழ்வான பகுதிகளில் வசித்த சுமார் 5 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாகன் நகரில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மழை தொடர்ந்து கொட்டுவதால், சிந்து மாகாணத்தில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் வீடுகள் இடிந்துள்ளன. வீதிகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. பல இராட்சத மரங்கள் சாய்ந்துள்ளன. இதனால் மின் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

அங்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனால், அது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை. மீட்பு நடவடிக்கையில் இராணுவச் சிப்பாய்கள், பொலிஸார் தீயணைப்பு படையினர் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

# தன்னந்தனியாக படகொன்றில் பசுபிக் கடலை கடந்த முதல் பெண்!

லண்டன், ஜூன் 08

பிரிட்டனைச் சேர்ந்த ரோஸ் சாவேஜ் என்னும் 42 வயதான பெண் தன்னந்தனியாகத் துடுப்பு போட்டு படகை செலுத்தி, பசிபிக் கடலைக் கடந்தார். இந்தச் சாதனையை நிகழ்த்திய முதல் பெண் இவர் தான்.

இவர் 23 அடி நீள படகில் 250 நாள்களில் 13 ஆயிரம் கி.மீ. தூரம் பயணம் செய்து பசிபிக் பெருங்கடலைக் கடந்தார். இவர் 3 கட்டமாக இந்தத் தொலைவைக் கடந்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி இவர் அமெரிக்காவிலுள்ள சான் பிரான்சிஸ்கோவிலிருந்து பயணத்தை தொடங்கினார். 99 நாள்களில் இவர் 4640 கி.மீ. தொலைவைக் கடந்தார்.

அடுத்த ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி ஹவாயில் தொடங்கி 5053 கி.மீ. தூரம் பயணம் செய்து தெற்கு பசிபிக் தீவு நாடான கிரிபாதியை கடந்த செப்டம்பர் மாதம் அடைந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி அங்கிருந்து பயணத்தை தொடங்கிய இவர் பாபு நிகினியாவை அடைந்தார். அந்த நாட்டின் மடாங்க் நகரில் ஆயிரக்கணக்கானவர்கள் கூடி இவரை வரவேற்றனர்.

இவர் ஏற்கனவே அட்லாண்டிக் பெருங்கடலை 103 நாள்களில் படகில் கடந்து சாதனை படைத்து இருக்கிறார் என் பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'நேஷன் ட்ரஸ்ட்' வங்கியின் நாற்பதாவது கிளை யாழ்.நகரில் நேற்று திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாகக் கலந்துகொண்டவர்கள் மங்கள வாத்திய இசை சகிதம் அழைத்துவரப்படுவதனை முதல் படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஜனாதிபதியின் வங்கியியல் ஆலோசகர் கலாநிதி திருமதி ராணி ஜெயமஹா, வங்கியின் நிறைவேற்றுப்பணிப்பாளர் சாலிய ராஜகருணா ஆகியோர் இணைந்து நாடாவைவெட்டி வங்கியினைத் திறந்து வைப்பதனை இரண்டாம் படத்திலும், நிறைவேற்றுப் பணிப்பாளர் சாலிய ராஜ கருணா, ஜனாதிபதியின் வங்கியியல் ஆலோசகர் கலாநிதி திருமதி ராணி ஜெயமஹா, வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.விமலநாதன் ஆகியோர் உரைநிகழ்த்துவதை அடுத்துள்ள மூன்று படங்களிலும், வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினரும், இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவருமான குமார் சங்கக்கார சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்:ரட்ணம்)*

# யாழ்ப்பாண வர்த்தகர்கள், தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் சேவைகளை 'நேஷன் ட்ரஸ்ட்' வழங்கும்

## மத்திய வங்கியின் உப ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்.மாவட்டத்திலுள்ள தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் 'நேஷன் ட்ரஸ்ட்' வங்கி தனது நாற்பதாவது கிளையூடாக சேவைகளை வழங்கும்.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் உப ஆளுநரும் ஜனாதிபதியின் வங்கியியல் ஆலோசகருமான கலாநிதி திருமதி ராணி ஜெயமஹா தெரிவித்தார்.

யாழ்.நகரில் நேஷன் ட்ரஸ்ட் வங்கியின் கிளை திறப்பு விழா நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'நேஷன் ட்ரஸ்ட்' வங்கியானது தனது நாற்பதாவது கிளையை யாழ்ப்பாண நகரத்தில் திறந்து வைக்கிறது. இது வடமாகாணத்தில் இரண்டாவது கிளையாகும். 1999இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த வங்கியானது -மிகக் குறுகிய காலத்தில் தன்னிகரில்லா வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.

பாரம்பரிய வங்கியியல் முறைமைகளுக்கு அப்பால் சென்று வாடிக்கையாளர்களின் நலனை முதன்மைப்படுத்தி தனது சேவையை வழங்கிவருகிறது. இதே போன்ற சேவையை யாழ்ப்பாணத்திலும் வழங்க வங்கிக் கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடந்த 3 தசாப்த காலமாக யுத்தத்தினால் இழப்புகளைச் சந்தித்த வட பகுதி மக்களுக்கு என பல சேவைத்திட்டங்களை வழங்கவுள்ளோம். வட பகுதியின் சிறியளவான வர்த்தகர்களும், தொழில் முயற்சியாளர்களும் தம்மை ஊக்குவிக்கக்கூடிய ஊக்குவிப்பாளர்களை எதிர்பார்க்கின்றனர். அவர்களினதும், மக்களினதும் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவர்களின் முன்னேற்றத்தின் பங்காளியாகவும் இந்த வங்கி செயற்படும்.

கடந்த ஒருவருட காலத்தில் இலங்கை மத்திய வங்கி 52 வங்கிக் கிளைகளையும், 25 விரிவாக்கல் அலுவலகங்களையும் வடமாகாணத்தில் திறந்து வைப்பதற்கான அனுமதியை வழங்கியிருக்கிறது.

இலங்கை மத்திய வங்கி பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி வடமாகாண மக்களுக்கு குறைந்த வட்டி வீதத்திலான கடன் வசதிகளை வழங்கி வருகிறது. குறிப்பாக ஒருங்கிணைந்த கிராமிய கடன் திட்டத்தின் ஊடாக குறைந்த வட்டியாக 12 வீதத்தை வழங்குகிறது. இதன்மூலம் உள்ளூர் விவசாயிகள் பெரிதும் நன்மை அடைவார்கள்.

கடந்த வருடம் 20 வங்கிக் கிளைகளும் 23 விரிவாக்கல் அலுவலகங்களும் திறந்து வைக்கப்பட்டன.

'நேஷன் ட்ரஸ்ட்' வங்கியானது அதன் உத்வேக அணுகுமுறையால் வைப்பீடு மற்றும் கடன் வழங்கல் ஆகியவற்றில் மட்டுமன்றி சிறிய அளவிலான தொழில் முனைவோரை ஊக்குவிப்பதோடு புதிய தொழில்நுட்பங்களைப் பிரயோகித்து அவர்கள் தமது உற்பத்திகளை அபிவிருத்தி செய்யவும் உதவும்.

வடமாகாணத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புப் பெறுவதற்கு வசதியாக தொழில் வழிகாட்டல் பயிற்சிப்பட்டறை ஒழுங்குசெய்து நடத்தப்பட்டது. இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் குமார் சங்கக்காரவின் முயற்சியால் விளையாட்டு வீரர்களை இனங்காண்பதற்கு என 'திறமைக்கான தேடல்' என்ற நிகழ்வு ஒழுங்கு செய்து நடத்தப்பட்டது. தொழில் முயற்சியாளர்களை இனங்காண்பதற்கும் இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும்.

இந்த வங்கி வைப்புக்களை மட்டும் நம்பியிருக்காது வாடிக்கையாளர் நலனை முதன்மைப்படுத்தி மீள்கடனளிப்புத் திட்டங்களையும் பரவலாக அறிமுகப்படுத்தியிருக்கின்றது. அதுமட்டுமன்றி நவீன தொழில்நுட்ப வசதிகள் மூலம் வெளிநாடுகளுக்கும் யாழ்ப்பாணத்துக்குமான தொடர்புகளையும் பேணக்கூடியதாக இந்த வங்கி இருக்கும்- என்றார். (50-14)

## மணிக்கூட்டுக் கோபுரத்தின் கடிகாரம் செயற்படுகிறது

கொழும்புத்துறை, ஜூன் 8

யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்திலுள்ள கடிகாரம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

கடந்த சில வாரங்களாக இக் கடிகாரம் இயங்கமறுத்து செயலிழந்து காணப்பட்டது.

தற்போது திருத்தம் செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. அடிக்கடி இக்கடிகாரத்தில் பழுது ஏற்பட்டு செயலிழந்து காணப்படுவதும், திருத்தம் செய்யப்படுவதும் தொடர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. (50-135)

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 8

சின்னத்தம்பி கனகராணி, நலன்புரி நிலையம், கண்ணகிபுரம் என்பவரது தேசிய அடையாள அட்டை போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய அடையாள அட்டை இல.707383925V. உரியவர் தகுந்த ஆதாரத்துடன் போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு நிர்வாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

# தனங்கிளப்பில் 4 கிராம அலுவலர் பிரிவுகளில் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ள தனங்கிளப்புப் பிரதேசத்தில் நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தொழில்நுட்பமற்ற முறை மூலம் மிதிவெடி அகற்றப்பட்டு 83 லட்சத்து 49 ஆயிரத்து 848 சதுர மீற்றர் பிரதேசம் மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மிதிவெடியகற்றும் செயற்பாட்டு அலுவலகத்தின் அதிகாரியொருவர் இந்த தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தனங்கிளப்புப் பகுதியில் விவசாயத்திற்கும், மீளக்குடியமர்விற்கும் என விடுவிக்கப்பட்டுள்ள ஜே/296, ஜே/297, ஜே/298, ஜே/299 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பிரதேசங்கள் தொழில்நுட்பமற்ற மிதிவெடியகற்றல் முறை மூலம் பரிசீலிக்கப்பட்டு அண்மையில் மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளன.

டெனிஸ் மிதிவெடியகற்றும் நிறுவனம் இப்பிரதேசங்களில் மிதிவெடியகற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்- என்றார். (50-9)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சித்த ஆயுள்வேத வைத்தியசாலை மீண்டும் ஸ்ரான்லி வீதியில் இயங்கும்

நல்லூர், ஜூன் 8

வட இலங்கை சுதேச வைத்திய சபையின் பாரம்பரிய சித்த ஆயுள்வேத வைத்தியசாலை யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் உள்ள லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக் கட்டடத்திலேயே மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற இயக்குநர் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தால் சுன்னாகம் மின்சாரசபைக்கு அண்மையில் யாழ்.லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரி இடம்மாற்றப்பட்டிருந்தது. இங்கு மாணவர்கள் கல்வி கற்கக் கூடிய சூழ்நிலை இல்லை எனவும், மின்சார சபையின் இயந்திரக் கழிவுகள், வாயுக்கள் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் முறையிடப்பட்டிருந்தது. (50-111)

# உத்தரவின்றி உள்ளே வரலாமா? கல்லுண்டாயைக் கேட்கிறது கடல்

நவாலி, ஜூன் 8

நவாலி கிழக்கு, நவாலி தெற்கு பிரதேசங்களிலிருந்து கல்லுண்டாய் வரையுள்ள நிலங்களில் சிப்பி அகழப்படுவதால் கடல் நீர் குடிமனைகளுக்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இப்பிரதேசங்களில் தினமும் அதிகாலை சிப்பி அகழ்ந்து, அரித்தெடுக்கப்படுகின்றது. இவ்வாறு அரிக்கப்படும் மண் உழவு இயந்திரங்கள் மூலம் உடனுக்குடன் அள்ளி[illegible]கின்றது.

இதனால் அப்பிரதேசத்தில் பாரிய கிடங்குகள் ஏற்பட்டு தாழ்ந்த பிரதேசமாக இப்பகுதி மாறிவருகின்றது.

இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் கடல் நீர் உட்புகுந்து எதிர் காலத்தில் இப்பிரதேசம் கடலாகவே மாறும் அபாயகரமான சூழ்நிலை தோன்றியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடன் நேரில் வந்து பார்வையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இப்பகுதி அமைப்புக்களும், மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலை மாசுபடுத்தும் 'சொப்பிங் பாக்'

வே.தபேந்திரன்

சுற்றுச் சூழலைப் பாதிக்கும் விடயங்கள் ஏராளம் இருக்கின்றன. சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டுமென்ற விழிப்புணர்வும் பலமாக முன்னெடுக்கப்படும் கால கட்டம் இது.

சுற்றாடலைப் பாதிக்கும் விடயங்களில் ஒன்றை எனது அவதானங்களுடன் இங்கு ஆவணப்படுத்துகிறேன். 'ரிசு பாக்' என்றால் அது என்னவென்று ஒருகணம் யோசிப்பீர்கள்.

நாற்பத்தைந்து வயதை அண்மித்தவர்களுக்கும், கடந்தவர்களுக்கும் 33 வருடங்கள் பின்னோக்கிப் பார்த்தால் இச் சொல்லின் உருவம் தெரியவரும்.

'ரிசு' என்றால் பாடசாலை மாணவர்கள் சித்திரப் பாடத்திற்குப் பாவிப்பதும், வெளிச்சக் கூடு கட்டப் பாவிக்கப்படுவதுமான ரிசுப் பேப்பர் என நினைத்துவிடாதீர்கள்.

அன்றாடம் நீங்கள் குறைந்தது ஒரு தடவையாவது பாவிக்கும் 'சொப்பிங் பாக்' தான்.

1970-1977ஆம் வரை இறுக்கி மூடப்பட்ட எமது நாட்டின் பொருளாதாரம் 1977 ஜூலை மாதத்தின் பின்னர் தாராளப் பொருளாதாரமாகத் திறந்து விடப்பட்டது.

அப்போது எமது நாட்டிற்குள் புது வரவுகள் பலநிகழ்ந்தன. அவற்றில் ஒன்றுதான் இந்த 'சொப்பிங் பாக்' என்பதும் சொப்பிங் பையின் வருகையால் கடதாசிப் பைகளுக்கு பெருமளவில் 'குட்பை' எம்மால் சொல்லப்பட்டும் விட்டது. அக்காலத்தில் பொருள்களை வாங்கிப் போவது மிக நாகரீகமாகவும் கருதப்பட்டது.

பின்நாளில் 'ரிசு' என்ற சொல் காணாமல்போய் 'சொப்பிங் பாக்' என அதாவது பொருள்களை வாங்கும் நோக்கத்திற்குப் பாவிப்பதால் அப்பெயர் பெற்றது.

முழு இலங்கையிலும் இப்பெயர்தான் தற்போது வழக்கத்தில் உள்ளது.

இந்தியாவின் தமிழகத்திற்குச் சென்று பார்த்தால் அங்கு 'காரி பாக்' என்ற சொல்லை இதற்குப் பாவிப்பதைக் காணலாம்.

அதாவது பொருள்களைக் காவிச் செல்லப் பயன்படும் பை. ஆங்கிலத்தில் அர்த்தப்படுத்தும் சொல்லைப் பாவிக்கின்றார்கள். அதுதான் மிகச் சரியானதுபோல எனக்கும் படுகின்றது.

## உடன் கட்டுப்படுத்தாவிட்டால் விளைவுகள் விபரீதமாகும்

என் சிற்றறிவுக்கு எட்டியது இவ்வளவுதான். உலகின் மிகுதி 200 நாடுகளின் உள்ளூர் மக்களால் என்ன சொல்கொண்டு எமது 'சொப்பிங் பாக்' அழைக்கப்படுகிறதோ தெரியவில்லை. விடயத்திற்கு வருவோம்.

ஜூன் 5ஆம் திகதி சர்வதேச சுற்றுச் சூழல் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. வழமைபோலவே சம்பிரதாய பூர்வமாக அரச, அரசசார்பற்ற அமைப்புக்களால் அதனையொட்டிய விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இந்தச் சொப்பிங் பையின் பாவனையின் தீமைகள், அதனை மிகக் குறைவாகப் பயன்படுத்தும் முறைகள், அதன் மாற்று உபயோகங்கள் பற்றி என் பட்டறிவுக்கு எட்டியவற்றையும், சூழலில் அவதானித்தவற்றையும் இங்கே பட்டியலிடுகிறேன்.

திருகோணமலை, கோட்டை வளாகத்தில் வசிக்கும் மான்கள் 1998, 1999ஆம் ஆண்டுகளில் திடீர் திடீரென இறந்துபோயின. காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் சுற்றுலாப் பயணிகள் 'லஞ்ச் பேப்பர்' என அழைப்படும் பொலித்தீனில் கட்டிவந்து தாம் உண்ட உணவின் மிகுதியை எறிந்தபோது, மான்கள் அவற்றை உண்டதாலேயே வயிறு பொருமி இறந்து போயின.

எமது பிரதேசங்களிலும் சில வேளைகளில் மாடுகள் இப்படியாக இறப்பதுண்டு.

விவசாயிகள் தோட்டத்திற்கு



பொலித்தீனின் அபாயத்தை உணர்த்த விநோத உடை பூண்ட பாடசாலை மாணவனின் காட்சி

குப்பை பறிக்கின்றபோது அதனுடன் கலந்துவரும் பொலித்தீன்கள், 'சொப்பிங் பாக்கு'கள் மண்ணுடன் கலந்து பயிர்களுக்குத் தீங்கு பயப்பதைக் காண்கின்றோம்.

சந்தையில் மீன்களை 'சொப்பிங் பை'களில் வாங்கிவிட்டு ஓரிரு மணித்தியாலங்கள் வேறு கருமங்களைப் பார்த்துவிட்டு வீட்டிற்குச் சென்று மீனை வெட்டும்போது மீன் பழுதடைந்திருப்பதைக் கண்டு அடுத்தநாள் மீன் வியாபாரியுடன் சண்டை பிடிக்கும் சிலரையும் காண்கின்றோம்.

சில புத்திசாலிகள் சந்தையில் மீன்களை வாங்கி அவற்றை அங்கேயே கூலி கொடுத்து வெட்டிய பின் மீன்களை கடதாசிப் பேப்பரில் நன்றாகச் சுற்றி சொப்பிங் பைகளில் எடுத்துச் செல்வதையும் காண்கின்றோம். இதனால் மீன்கள் பழுதடைவதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவானது.

இதனை முன் மாதிரியாகக் கொண்டு மற்றையவர்கள் நடந்து கொண்டால்நல்லதல்லவா?

இன்னும் சிலர் கடைகளில் பழங்களை வாங்கும்போது அவற்றை கடதாசிப் பேப்பர்களில் நன்றாகச் சுற்றி சொப்பிங் பைகளில் இட்டு வீட்டிற்கு எடுத்துச் செல்வதைக் காண்கின்றோம். இதன்போதும் பழங்கள் பழுதடையும் சந்தர்ப்பம் மிகமிகக் குறைவு.

மரக்கறிகளைச் சொப்பிங் பைகளில் வாங்கிவிட்டு வீட்டிற்கு எடுத்துச் சென்றதும் அவற்றை கடகப் பெட்டிகளில் வைக்கும் நற் பழக்கமுள்ள சிலரையும் காண முடிகிறது.

மரக்கறிகள், மீன்வகைள் வாங்கும் சொப்பிங் பைகளை நன்றாகக் கழுவிவிட்டு காயவைத்த பின் மீண்டும் மீண்டும் உபயோகிக்கும் சிலரையும் காண்கின்றோம்.

இவர்களை கஞ்சன் அல்லது நப்பி என மட்டும் கூறிவிடாதீர்கள். இவர்கள் நாம் வாழும் சூழலுக்கு நன்மை விளைவிப்பதுடன் பணத்தையும் மிச்சம் பிடிக்கிறார்கள்.

இன்னும் சிலர் வயர்களால் இழைக்கப்பட்ட 'உமல் பாக்' எனப் பெருமளவில் அழைக்கப்படும் பைகளில் பொருள்கள் வாங்குவதையும், கடைக்காரர் சொப்பிங் பை தந்தாலும் வாங்க மறுப்பதையும் காண்கின்றோம்.

மிகச் சிலர் துணியினால் தைக்கப்பட்ட பைகளில், பனை ஓலையில் இழைக்கப்பட்ட பைகளில் பொருள்களை எடுத்துச் செல்வதைக் காண்கின்றோம். இத்தகைய மிகப் பெரும்பாலானோர் பின்பற்றக்கூடிய நடைமுறைகளை, விழிப்புணர்வுகளை அரச, அரசசார்பற்ற துறைகளும், அச்சு, இலத்திரனியல் ஊடகங்களும் முன்னெடுக்க வேண்டும்.

கடதாசிப் பைகளில் பொருள்களை எடுத்துச் செல்வதும், பொதி செய்வதும் மீளவும் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

சீமெந்துப் பைகளில் பாக் ஒட்டி அவற்றை விற்று வறுமை தணித்த பல குடும்பங்கள் எமது பிரதேசங்களில் முன்பு இருந்தன. அத்தொழிலைப் பகுதி நேரமாகச் செய்து பணம் உழைத்துப் படித்துக் கல்விமான்களாக, அதிகாரிகளாக உள்ளவர்களும் எம்மிடையே உள்ளனர்.

சீமெந்துப் பைகளில் பொருள்களை எடுத்துச் செல்வது நாகரீகக்குறைவு என நாம் நினைத்தாலும், இலகுவான வேலையாக 'சொப்பிங் பை'களைப் பாவித்தாலும் கடதாசிப் பைகளுக்கு மிகப் பெருமளவில் விடை கொடுத்துவிட்டோம்.

இவை பற்றிய விழிப்புணர்வும் எமக்குத் தேவை. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு பழைமைக்குத் திரும்பிப் போதலே மிகச் சிறந்தது என்ற வாதம் பலமாக மீண்டெழும் காலப்பகுதியில் வாழ்கின்றோம்.

'' பழையவை நல்லன தெரிதலும்,புதியவை தீயவை கழிதலும் நன்மைக்கே'' என்ற வாழ்வியலைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது.

ஐந்து ரூபாப் பொருளுக்கும் 'சொப்பிங் பாக்', ஆயிரம் ரூபா பொருள் காவவும் சொப்பிங் பாக் என்ற நடைமுறைக்கு மெல்ல மெல்ல விடைகொடுக்க வேண்டியுள்ளது.

குழந்தைக்குப் புட்டி (போச்சி)யில் பால் பருக்கும் தாயொருவர், பிளாஸ்டிக் போச்சியில் பால் வைத்தால் மிக விரைவில் கெடுகிறதெனவும் , கண்ணாடிப் போச்சியில் பால் வைத்தால் ஓரிரு மணித்தியாலங்கள் நல்ல நிலையில் இருப்பதாகவும் கூறினார்.

அதீத பிளாஸ்டிக் பாவனையும் தீங்கானதுதான். விரிவஞ்சி இதில் ஆராயவில்லை.

பழைய இரும்புகளுக்கு திடீரென கிராக்கி வந்து அவை அள்ளுப்பட்டு யாழ்ப்பாணம் சுத்தமாகியது போல பொலித்தீன்களுக்கும் வந்தால் நல்லது. வாழையிலையை வாட்டியபின் அதில் உணவைப் பொதி செய்யும் வழக்கம் எம்மிடையே பெருமளவில் அருகிப்போய்விட்டது. சமைத்த உணவை இவ்வாறு 'பார்சல்' கட்டும்போது உணவின் சுவை மாறாமலிருப்பதுடன் பலமணி நேரங்கள் உணவு பழுதுபடாமல் இருப்பதையும் காணலாம். ஆனால் ' லஞ்ச்' பேப்பரில் உணவைப் பார்சல் கட்டினால் விரைவிலேயே பழுதடைந்து போவதனைக் காணலாம்.

உயர்வான வாழ்க்கைச் செலவுடன் போராடும் நடுத்தர, வறிய குடும்பங்கள் வாழையிலையில் உணவைப் பார்சலாக்கும் பழைமைக்கு இயன்ற வரை திரும்பிப் போவது ஆரோக்கியத்துடன் பணத்தைச் சேமிக்கவும் உதவும்.

நெகிழ்ந்து உக்கிப் போகும் 'சொப்பிங் பை'களை உற்பத்தி செய்யும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. அவற்றை மட்டும் தான் உபயோகிக்க முடியுமென்ற அரசாங்க அறிவித்தல்களும் 5 வருடங்களுக்கு முன்பு வந்தன. ஆனால் அவற்றுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை.

பொலித்தீன்களை, 'சொப்பிங் பை'களை குப்பையுடன் சேர்த்து எரிக்கும்போது துர்நாற்றம் எழுவதனையும் அவதானித் திருப்பீர்கள். இதனைச் சுவாசிப்பது உடல் நலத்துக்குக் கேடானதென்ற அறிவித்தல்களும் வருகின்றன. ஆனால் மக்கள் பெருமளவில் இதனைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகளிடம் சொப்பிங் பை, பொலித்தீன் பாவனை தொடர்பான விளக்கங்களைக் கேட்டபோது 4R முறையொன்றைக் கூறினார்கள்.

முதலாவது Refuse- அதாவது இவற்றின் பாவனையை மறுப்பது அவற்றைப் பாவிக்காமலே இருப்பது.

இரண்டாவது Reduse - இவற்றின் பாவனைகளை இயன்ற வரையில் குறைப்பது.

மூன்றாவது Reuse- பாவித்த சொப்பிங் பை, பொலித்தீன்களை மீள மீள உச்சப்பாவனைக்கு உட்படுத்துவது.

நான்காவதுRecycle- பொலித் தீன், சொப்பிங் பைகளை அழித்து அவற்றிலிருந்து புதியவற்றை மீள உற்பத்தி செய்து பாவிப்பது.

எனது அவதானிப்புக்களில் பெரும்பாலானவை இவற்றில் அடங்குவதையும் காண முடிகின்றது.

இயற்கையை நாம் அழித்தால் இயற்கை எம்மை அழிக்குமென்ற படிப்பினைகளை அடிக்கடி கற்றுக் கொள்கிறோம்.

ஆனாலும் அதிலிருந்து திருத்திக் கொள்கின்றோமா என்றால்அது தான் இல்லை.

புதிய புதிய சிந்தனைகள் நாளுக்கு நாள் வருகிறது. ஆனாலும் எமக்கு ஆரோக்கியத் தைக் கொடுக்கும் பழைமையில் நல்லவற்றைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க உறுதி பூணுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டத்தில் மினி சூறாவளி!

அம்பாறை,ஜூன்8

அம்பாறை மாட்டத்தின் சில பிரதேசங்களில் கடந்த 5ஆம் திகதி மினி சூறாவளி ஏற்பட்டுள்ளது. இதனால் பல வீடுகள், கடைகள் சேதமடைந்துள்ளன. அத்துடன், மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி, நிந்தவூர், காரைதீவு, சம்மாந்துறை உள்ளிட்ட பிரதேங்களில் வீசிய பலத்த காற்றின் காரணமாக பிரதான வீதியில் இருந்த பல மின்கம்பங்கள் அடியோடு வீழ்ந்துள்ளன.





குறிப்பாக ஒலுவில் முதல் நிந்தவூர் வரையிலான பிரதான வீதியோரத்திலிருந்த சுமார் 15இற்கும் அதிகமான மின்கம்பங்கள் சாய்ந்து வீழ்ந்துள்ளன. இதனால் இப்பிரதேசங்களில் மின்துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி உள்ளிட்ட பகுதிகளிலும் தொடர்ச்சியாக மின் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சம்புமடு, மஜீட்புரம், செட்டிடவட்டை,கல்லரைச்சல், வீரமுனை, உடங்கா ஆகிய பிரதேசங்களிலும் மினி சூறாவளியால் பல வீடுகளும், கடைகளும், செங்கல் வாடிகளும் சேதமடைந்துள்ளன.

மேலும், சம்புமடு, சென்நெல்புரம், சென்நெல் கிராமம் ஆகிய பகுதிகளில் மின்சாரத் தொடர் கம்பிகளும், தொலைபேசி இணைப்புகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இதனால் இப்பகுதியிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. (ளி)




# கடத்தப்பட்ட - காணமற் போனோர்; விவரங்களை உடனடியாக அறிவிக்குக!

## அம்பாறை மாவட்ட எம்.பி. பியசேன கோரிக்கை

திருகோணமலை,ஜூன்8

அம்பாறை மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கடத்தப்பட்டோர் அல்லது காணாமல் போனோர் பற்றிய தகவல்களை தெரிவிக்குமாறு தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொ.பியசேன கேட்டுள்ளார்.

குறிப்பாக தமிழ்க்கிராமங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலையில் கடத்தப்பட்ட - காணாமல்போன தமிழ் இளைஞர்கள் தொடர்பாக தினமும் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன என்ப் பியசேன எம்.பி. கூறுகிறார்.

அதேவேளை, இன்னும் பலர் இது தொடர்பாக அறியாமல் உள்ளனர். எனவே, மேலதிக நடவடிக்கைக்காகவும் உரிய ஆவணத்தை சமர்ப்பித்து நஷ்டஈடு பெறும் நோக்கிலும் மேற்படி நபர்களின் தகவல்களை தந்துதவுமாறு அவர் கேட்டுள்ளார்.

பல தமிழ்த்தாய்மார் கண்ணீரும், கம்பலையுமாக தினமும் தனது வீடுதேடிவந்து முறையிடுகின்றார்கள் என்றும் அவர்களுக்கு நஷ்ட ஈட்டையாவது பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இத்தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன என்று அவர் கூறினார்.

எதிர்வரும் 25.06.2010இக்கு முன்னர் சம்பந்தப்பட்டோர் பொ.பியசேன எம்.பி, சாகாமம் வீதி,அக்கரைப்பற்று 08. என்ற முகவரிக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ளி)

# சாய்ந்தமருது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வளநிலையம்

அம்பாறை,ஜூன்8

சாய்ந்தமருது பிரதேச மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலான வளநிலையம் ஒன்று சுமார் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா செலவில் சாய்ந்தமருது தாமரைக்குள வளவில் நிர்மாணிக்கப்பட்டு தற்போது முடிவுறும் தறுவாயில் உள்ளது.

'நெக்டெப்' என அழைக்கப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கரையோர அபிவிருத்தித் திட்ட அலுவலகதினால் ஆசிய அபிவிருத்தித் வூங்கியின் நிதி உதவியுடன் இவ்வலயம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

தனியார் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பொறுப்பில் இருந்த இக்காணியைச் சுவீகரித்து இவ்வலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த இக்காணியில் குப்பை மற்றும் கழிவுப் பொருட்கள் வகைதொகையின்றி பொது மக்களால் கொட்டப்பட்டு வந்தன. இதனால் இதனை அண்டியுள்ள பிரதேசங்களில் பல்வேறு சுகாதாரப் பிரச்சி னைகள் ஏற்பட்டன.

தற்போது இக்காணி சுவீகரிக்கப்பட்டு அங் கிருந்த குப்பைகள் மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டு கட்டட நிர்மாணப் பணிகள் முடிவுற்றிருப்பதனால் சுகாதாரப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணப்பட்டிருக்கிறது.

குப்பை கொட்டப்பட்ட வளவில் குப்பைகள் அகற்றப்பட்டு அழகான வள நிலையம் ஒன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துதவியமைக்கு பிரதேச குடியிருப்பாளர்கள் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீமுக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (ளி)

# பிறப்பு, இறப்பு பதிவாளரை நியமிக்குக

திருகோணமலை,ஜூன்8

செல்வநகருக்கு தமிழ்மொழியில் பணிபுரியக்கூடிய பிறப்பு, இறப்பு பதிவாளரை நியமித்து தருமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

செல்வநகர் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மக்கள் பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்வதற்காக சுமார் 12 கிலோ மீற்றர்களுக்கும் அப்பாலுள்ள சேருநுவர பிரதேசத்திற்கு செல்லவேண்டியுள்ளனர் எனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இம்மக்கள் வீண் செலவினத்தையும், பெரும் அசௌகரியங்களையும் எதிர்கொள்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்துடன், சேருநுவர பிரதேசத்திலுள்ள பதிவாளருடன் சிங்களமொழியில் அலுவல்களை பேசி நிறைவேற்றவேண்டியுள்ளதாகக் கூறுகின்றனர். மொழிப் பிரச்சினையால் மேலும் பல அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டி நேரிடுகின்றன எனவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

# ஜனவசம நிர்வாகத்திற்கு எதிராக தொழிலாளர்கள் தொடர் போராட்டம்

## ஐவர் சாகும்வரை உண்ணாவிரதம்

கண்டி,ஜூன் 8

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் (ஜனவசம) கீழ் இயங்கும் கண்டி ஹந்தானை அரச பெருந்தோட்ட நிர்வாகத்திற்கு எதிராகத் தொழிலாளர்கள் தொழிற்சங்கப் போராட்டத் தையும், உண்ணாவிரதப் போராட்டத்தையும் மேற்கொண்டு வருகின்றனர்.

நீண்டகாலமாகத் தாம் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காத காரணத்தால் தாம் உண்ணாவிரதத்தை முன்னெடுத்துள்ளனர் எனத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

பிரபல நான்கு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

இணைந்த தொழிற்சங்கச் செயலாளர் கே. தங்கராஜா தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. ஐவர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

ஏனையத் தொழிலாளர்கள் சுழற்சி முறையில் தமது ஆதரவை வழங்கி வருகின்றனர்.

ஜனவசம நிர்வாகம் கடந்த பத்து வருடங்களாக தமக்குச் சேரவேண்டிய பல்வேறு கொடுப்பனவுகளை மத்திய வங்கிக் கணக் கில் வைப்பில் இடாது தட்டிக் கழிக்கின்றது என அவர்கள் தெரிவித்தனர்.

பல கோடி ரூபாவை நிர்வாகம் துஷ்பிரயோகம் செய்வது மட்டுமல்லாது பொதுச் சொத்துக்கள் விற்கப்பட்டு தமக்கு அநீதி இழைக்கப் படுகின்றது என்றும் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள்கூட மறுக்கப்படுகின்றன. இது விடயமாக ஜனாதிபதியோ அல்லது 'ஜனவச' அமைப்பிற்குப் பொறுப்பான அமைச்சரோ தலையிட்டு நியாயம் பெற்றுத்தர வேண்டும் - இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்கள் கோருகின்றனர். (ளி)




# இளைஞர்கள் - யுவதிகளை ஏமாற்றி பணம்கறந்த பெண் கம்பளையில் கைது

கண்டி,ஜூன்8

இளைஞர் - யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதுடன், நீரிழிவு நோயாளர்களுக்கு நிதியுதவி பெற்றுக் கொடுப்பார் எனக்கூறி அவர்களிடமிருந்து லட்சக்கணக்கான ரூபாவை கபளீகரம் செய்தார் என்ற சந்தேகத்தில் கம்பளை பொலிஸார் பெண்ணொருவரைக் கைது செய்துள்ளனர்.

நான்கு பிள்ளைகளின் தாயான இப்பெண் கம்பளை மேலதிக நீதிவான் சாலிய பெரேரா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது நீதிவான் அவரை இம்மதாம் 9 ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட் டார்.

இப்பெண் இதுவரை 25 லட்சம் ரூபாவுக்கும் அதிகமாக தொகையை மோசடி செய்துள்ளார் என்றும், அவருக்கு எதிராக கம்பளை பொலிஸ் நிலையத்தில் 12 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் தெரியவருகின்றது.

இது குறித்து மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

35 வயதுடைய இப்பெண் பத்திரிகைகளில் வெளிவரும் நோயாயர்களின் விளம்பரங்களுக்குப் பதிலளித்து, அவர்களுக்கு தான் சார்ந்துள்ள அரச சார்பற்ற நிறுவனத்தின் மூலம் உதவி வழங்கத் தயாராகவுள்ளார் எனக் கூறியுள்ளார்.

அதற்கென ஆரம்ப வைப்பாகப் பத்தாயிரம் ரூபாவை குறிப்பிட்ட வங்கிக்கணக்கில் வைப்பிலிடுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இவரை நம்பிய பலர் வங்கிகளில் கணக்குகளை ஆரம்பித்தனர். இதன்பின் குறித்த பெண் வங்கிகளால் வழங்கப்படும் தானியங்கி அட்டைகளை சூட்சுமமாகப் பெற்றுக் கொண்டு பணத்தை கபளீகரம் செய்துள்ளார்.

சுமார் இரண்டு வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவந்ததாகக் கூறப்படும் இந்த மோசடியில் மாத்தளை, கண்டி, வத்தேகம, பேராதெனிய, எம்பிலிப்பிட்டிய, இரத்தினபுரி, கொடகாவெல உட்பட பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் சிக்கியுள்ளனர் என கம்பளை பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன. (ளி)

# அப்புகஸ்தனை தோட்டத்திலும் தொழிலாளர்கள் பகிஷ்கரிப்பு

நுவரெலியா,ஜூன்8

மஸ்கெலியா பிளாண்டேசனுக்கு சொந்தமான அப்புகஸ்தனை தோட்டத்தைச் சேர்ந்த மூன்று பிரிவுகளின் தொழிலாளர்கள் 360 பேர் கடந்த 18 ஆம்திகதி முதல் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பாக தொழிலாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

கடந்த 14 ஆண்டுகளாக 19 கிலோ தேயிலைக் கொழுந்து பறித்தால் மாத்திரமே ஒப்பந்தங்களுக்கு உட்பட்ட வேதனம் வழங்கப்பட்டு வந்தது.

கொழுந்தின் அளவில் குறைந்தால் கொடுப்பனவில் 30 சதவீதம் குறைக்கப்படும். 16 கிலோவிற்கு குறைந்து கொழுந்து பறிக்கப்பட்டிருந்தால் 345 ரூபாவே வழங்கப்படும்.

எனினும், மஸ்கெலியா பிளாண்டேசனுக்குச் சொந்தமான ஏனைய தோட்டங்களில் 16 கிலோ கொழுந்து பறித்தால் 405 ரூபா வழங் கப்படுகின்றது.

எமக்கும் இவ்வாறு வேதனம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரியே பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த 3ஆம்திகதி தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். எனினும் பலன் ஏதும் கிட்டவில்லை.

இது இப்படியிருக்க, 25 ஆம்திகதியில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய முற்பணத்தை வழங்குவதற்கும் நிர்வாகம் மறுத்து விட்டது. இதனால் தொழிலாளர்கள் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் - இப்படி தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமுகமாக கடந்த திங்கட்கிழமை சம்பந்தப்பட்ட தொழிற்சங்கமும், தோட்ட நிர்வாகமும் ஹட்டன் தொழில் ஆணையாளர் முன்னிலையில் பேச்சுகளை நடத்தியிருந்தன.

16 கிலோ கொழுந்து பறித்தால் 405 ரூபா வழங்குவதென இதன்போது இணக்கம் காணப் பட்டுள்ளது.

எனினும், மறுநாள் தொழிலாளர்கள் வேலை செய்யமுற்பட்டபோது 19 கிலோ பறிக்குமாறு வற்புறுத்தப்பட்டுள்ளது.

எனவே, தொழில் ஆணையாளரின் முன்னிலையில் வழங்கப்பட்ட உறுதிமொழி மீறப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழி லாளர்கள் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை யில் ஈடுபட்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆலோசனையா? ஹெல உறுமயவுக்கு அருகதை கிடையாது

## அரியநேத்திரன் எம்.பி. சாட்டை

கல்லாறு, ஜூன் 8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆலோசனை வழங்குவதற்கோ, அச்சுறுத்தல் விடுவதற்கோ எவ்வித அருகதை ஜாதிக ஹெல உறுமயவுக்குக் கிடையாது - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எருவில் பிரதேச பொதுமக்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவருக்கும் பெருவிழா எடுக்கப்பட்டது.

இதில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சீனித்தம்பி யோகேஸ்வரன், பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரியநேத்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்:-

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் பௌத்த மத குருமார் கருத்துக்களை வெளி யிடுகின்றமையே இந்நாட்டின் மிகப் பெரிய சாபக்கேடாகும். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய கூட்டமைப்பினருக்கு தமிழர்களின் பிரச்சினையை எப்படிக் கையாள வேண்டும் என்று நன்றாகவே தெரியும். ஜாதிக ஹெல உறுமய எங்களுக்கு சொல்லித் தரத் தேவையில்லை.எங்களை அச்சுறுத்துகிறார்கள் என்பதற்காக நாம் வாயை மூடிக் கொண்டு இருக்க மாட்டோம்.

மக்களின் பிரச்சினையை எந்த இடத்திலும் உரத்துச் சொல்வோம். நாளை மறுதினம்,(இன்று) அரசுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுகிறோம். அப்பேச்சுக்கள் தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வைத் தரும் வகையில் அமைதல்வேண்டும். அரசு தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகத் தொடர்ந்தும் நடத்தி வருகிறது. ஆகவே இலங்கையில் இருவேறு நாடுகள் உள்ளனவா என்கிற சந்தேகம் எழுகிறது. இப்படிச் கூறினார். அறியநேத்திதரன் எம்.பி.

'தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அவர்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டுமானால் அரசுடனான பேச்சுக்களில் பிரிவினைவாதத்தை முன் வைக்கக் கூடாது, என ஹெல உறுமைய எச்சரிக்கை விடுத்திருந்தது. (சி)

# தேசிய சின்னங்களை கட்சிகளின் சின்னங்களாகப் பயன்படுத்தாதீர்!

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

தேசிய சின்னங்களை கட்சி சின்னங்களாகப் பயன்படுத்தக் கூடாது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

இதன்படி, கலசம், சிங்கம், அல்லி மலர், கிரீடம், தேசிய கொடி, வாள், சிம்மாசனம் உள்ளிட்ட தேசிய அல்லது மத ரீதியான முக்கிய சின்னங்களைக் கட்சிச் சின்னங்களாக பயன்படுத்த முடியாது.

இலங்கையில் இதுவரையில் 66 அரசியல் கட்சிகள் பதிவு செய்துள்ளன எனவும், எதிர்காலத்தில் பதிவுசெய்ய உத்தேசிக்கும் கட்சிகள் தேசியச் சின்னத்தையோ அல்லது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் சின்னங்களையோ பயன்படுத்தாது புதிய சின்னங்களுடன் விண்ணப்பிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# தமிழரின் உரிமைகளை சலுகைகளுக்காக தமிழ்க் கூட்டமைப்பு விட்டுக்கொடுக்காது

## பொன்.செல்வராசா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

தமிழர்களின் உரிமைகளைச் சலுகைகளுக்காக ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டோம் - என்று தமிழ் தேசிய கூட்டமைப் பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. பொன். செல்வராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எருவில் பிரதேச பொதுமக்களால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களைப் பாராட்டி நடத்தப்பட்ட விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு-

தமிழ் மக்களின் ஆணையைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக வந்த நாம் சலுகைகளுக்காக உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம். பதவிகளுக்காக விலை போகமாட்டோம்.

தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைக்கும் பட்சத்தில் அத்தீர்வை அமுல்படுத்துவதற்காக அரசுக்கு ஆதரவு கொடுப்போம்.மாறாக அரசின் சலுகைகளுக்காக அதன் காலடிகளில் விழ மாட்டோம். தீர்வுத் திட்ட யோசனைகளைத் தயாரிப்பதற்காகச் சர்வகட்சி குழு ஏராளமான தடவைகள் கூடி ஆராந்தது. ஆனால் தீர்வுத் திட்ட யோசனை இழுத்தடிக்கப்பட்டதே தவிர உருப்படியாக எதுவுமே நடக்கவில்லை. எமது சமாதானப் பேச்சுகள் உரிய தீர்வைப் பெற்றுத் தரும் வகையில் அர்த்த மானவையாக அமைதல் வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# இன்று பணம் சம்பாதிக்கக் கூடிய துறையாக மாறியுள்ளது அரசியல்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு, ஜூன் 8

துரித கதியில் பணம் சம்பாதிக்கக் கூடிய துறையாக அரசியல் இன்று மாற்றமடைந்துள்ளது - என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மிகவும் லாபகரமான வியாபாரத் துறையாக அரசியல் உருவாகியுள்ளதென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

80 வீதமான அரசியல் நிகழ்வுகள் ஊழல் மோசடி நிறைந்தவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல், மோசடி இன்றைய அரசியலின் முக்கிய அங்கங்களாகக் காணப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புனித பிரிட்ஜஸ் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதிவான்களின் மீது அழுத்தம் செலுத்தக் கூடிய ஓர் காலமே தற்போது நிலவி வருகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.சொத்துகளை விற்று தற்போது தாம் வாழ்ந்து வருகிறார் எனவும், இதனை இழிவாகக் கருதவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியலில் மீண்டும் களமிறங்கும் உத்தேசம் தமக்குக் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.அரசியலின் ஊடாக குடும்பங்களது லாபத்தை உறுதி செய்யும் காலாசாரமே நிலவி வருகிறது.

அனைவரினதும் உரிமைகளையும், அபிலாஷைகளையும் மதிக்க வேண்டியது அவசியமென்ற போதிலும், இந்தப் பண்பு தற்போதைய சமூகத்தில் வீழ்ச்சியடைந்து செல்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை ஓர் இன சமூகத்திற்கு எதிரான வகையில் மேற்கொள்ளப்படக் கூடாது.

குறிப்பிட்ட ஓர் பிரிவினரின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக, அந்த இன சமூகத்தையே பயங்கரவாதிகளாக நோக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவி செய்வோம் என்கிறது பிரிட்டன்

கொழும்பு, ஜூன் 8

இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண பிரிட்டன் உதவி செய்யும் - என்று பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சர்களில் ஒருவரான கலாநிதி லியம் பொக்ஸ் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

அவர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சிங்கப்பூரில் சந்தித்து உரையாடினார். பிரிட்டனில் புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் அமைச்சர்கள் மட்டத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இச்சந்திப்பிலேயே இலங்கையில் நிரந்தர சமாதானம், தேசிய நல்லிணக்கம், உறுதியான பொருளாதார வளர்ச்சி ஆகியன ஏற்படுவதற்கு பிரிட்டன் உதவி செய்யும் என்று பொக்ஸ் கூறினார். (சி)


## மரக்கடைச்சல் வேலைக்கு ஆள் தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் இயங்கிவரும் மரவேலை செய்யும் தொழிற்சாலைக்கு மரக்கடைச்சல் வேலை தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல:4033

மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

இல.43,அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, உடுவிலில் 8 பரப்பு வெறுங் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ, தோட்டம் செய்யவோ உகந்தது.

தொடர்புக்கு:
0714102174/0771622770



# VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND,SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY,DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road,Jaffna.


## வன்னிப் பகுதியில் மிதிவெடி அபாய விழிப்புணர்வு

கொழும்பு, ஜூன் 8

இலங்கை இராணுவத்தினர் வன்னிப் பிரதேசங்களில் மீள குடியேற அனுமதிக்கப்பட்ட மக்களுக்கு மிதிவெடிகள் வெடிபொருட்கள் போன்ற அபாயகரமான பொருட்கள் குறித்த எச்சரிக்கைகளை மக்கள் கூடும் பிரதேசங்களில் விழிப்பு ணர்வுக் காட்சிகளாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில்வெடிக்காத வெடி பொருள்கள், பலவகையான மிதிவெடிகள், கிளைமோர்கள், கைக்குண்டுகள், ஏவுகணை, ஆர்.பி.ஜி. மோட் டார் குண்டுகள் போன்ற [illegible] திடங்கினர். (சி)

## நினைவஞ்சலியும் 17ஆவது பிறந்தநாளும்

தோற்றம்
08★06 ★1993

மறைவு
28★02 ★2009



அமரர் செல்வி ம.உசாளினி (உசா)

ஈரவிழிகள் காயவில்லை இதய அலை ஓயவில்லை
எத்தனையோ செல்வத்தை எமக்களித்துச் சென்றாலும்
அத்தனைக்கும் மேலான அன்புச் செல்வம் நீ எமக்கு
ஈடான செல்வமுண்டா? இறைவனையே
துதிக்கின்றோம் உன் ஆத்மா சாந்திபெற

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

ம.மிரிகா (சகோதரி).

(99137)

## மஹஜன சம்பத — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2249
திகதி 2010.06.06

வெற்றி எழுத்து: W வெற்றி எண்கள்: 0 6 7 9 7 9

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | W | 0 | 6 | 7 | 9 | 7 | 9 | ரூபா. 15,744,634/= | பரிசு - |
| 1ம் பரிசுகள் | | 0 | 6 | 7 | 9 | 7 | 9 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் 01 |
| 2ம் பரிசுகள் | | | 6 | 7 | 9 | 7 | 9 | ரூபா. 100,000/= | பரிசுகள் 07 |
| 3ம் பரிசுகள் | | | | 7 | 9 | 7 | 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 66 |
| 4ம் பரிசுகள் | | | | | 9 | 7 | 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 643 |
| 5ம் பரிசுகள் | | | | | | 7 | 9 | ரூபா. 100/= | பரிசுகள் 6,313 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 9 | ரூபா. 20/= | பரிசுகள் 63,423 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 0 | 6 | 7 | 9 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 07 |
| 8ம் பரிசுகள் | | 0 | 6 | 7 | 9 | | ரூபா. 1,000/= | பரிசுகள் 60 |
| 9ம் பரிசுகள் | | 0 | 6 | 7 | | | ரூபா. 100/= | பரிசுகள் 646 |
| 10ம் பரிசுகள் | | 0 | 6 | | | | ரூபா. 50/= | பரிசுகள் 6,285 |
| 11ம் பரிசுகள் | W | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 25,274 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 15,768,568.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,917,090.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனப் பயிற்சி செய்பவர்களின் கவனத்துக்கு...

''உடம்பை மறந்தால் உயிரை நினைக்க முடியும்.
உள்ளிருக்கும் இறைவனையும்
உணர்ந்து கொள்ள முடியும்.''

ஆர்.பிரியா
யோக போதனா ஆசிரியர்,
பிரிய யோகா பயிற்சி நிலையம்.

பகுதி - 9

### சர்வாங்காசனம்

செய்யும் முறை:



விபரீதகரணியாசனம் கொஞ்ச நாள் செய்த பின்புதான் சர்வாங்காசனம் செய்ய முடியும். விபரீதகரணி நிலையில் இருந்து கொண்டு கைகளை மேலும் அழுத்தி நெஞ்சு நாடியில் தொடும்படி உடலை உயர்த்திக் கைளை முதுகில் தாங்கி நிற்கும்படி L வடிவில் நிற்கவும். இரு கண்களையும் அரைகுறையாக மூடியவாறு கால்களின் பெருவிரல்களைப் பார்க்கவும். கால்களை விறைப்பாக வைத்துக் கொள்ளக் கூடாது. இளக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆசன நிலையில் சாதாரண மூச்சு. 2 நிமிடத்துக்கு ஒரு முறையாக, 3 முதல் 4 முறை செய்யலாம்.

பயன்கள்:


உடலில் உள்ள அத்தனை அங்கங்களுக்கும் பலன் கிடைப்பதால் சர்வாங்காசனம் எனப் பெயரிடப்பட்டது. முதுமையைப்போக்கும் தைராய்டு கிளாண்டு நக்கு வேலை செய்யும். ஞாபகசக்திக் குறைவு, தொந்தி, மலச்சிக்கல்,கல்லீரல்கேடு, கண்பார்வை மங்கல், நாடி மண்டல பலக்குறைவு, தைராய்டு பாராதைராய்டு முதலிய இடங்களில் தேங்கி நிற்கும் இரத்தத்தை நாடி நரம்புகள் மூலம் மேலே ஏற்றி மறுபடியும் கீழே இறக்கும் சக்தி இவ்வாசனத்திற்கு உண்டு. இதனால் இரத்த நாளங்களுக்குச் சுத்த இரத்தம் கிடைப்பதால் மனிதன் ஆரோக்கியமாக வாழலாம்.

ஒரு விதைக்குள் ஒடுங்கிக் கிடக்கும் ஆலமரம்.
அத்தனை ஒலிகளுக்கும் மூலமாய் இருப்பது ஓங்காரமே.''

### ஹலாசனம்

செய்யும்முறை:

ஹலாசனம் என்பது சமஸ்கிருதச்சொல். ஹலா என்பது கலப்பையைக் குறிக்கும். உடலை கலப்பை கொண்டு உழுவதற்கு ஒப்பாக சொல்லப்படுகிறது.




விரிப்பில் மல்லாந்து படுத்து, கால்களை ஒட்டியவாறு நீட்டி கைகளை உடல் பக்கத்தில் தரையில் வைத்துக் கொண்டு உள்ளங்கையை குப்புற வைக்க வேண்டும். மூச்சை சிறுது உள்ளிழுத்துக் கால்களை படத்தில் காட்டியவாறு இடுப்பில் இருந்து உயர்த்தி சரீரத்தின் மேல் வளைத்து சுவாசத்தை வெளியே விட்டு கட்டை விரல்களைத் தலைக்குப்பின் கொண்டு வந்து தரையைத் தொட முயற்சிக்கவும். நாடி நெஞ்சைத் தொடவேண்டும். ஒரு முறைக்கு ஒரு நிமிடமாக 2 முதல் 3 முறை செய்யலாம். ஆசன நிலையில் சாதாரண மூச்சு.

பயன்கள்:


முதுகுத்தண்டு பலம் பெறும். நாடி மண்டலங்கள் அனைத்தும் நன்கு வேலை செய்யும். முதுமை ஒழிந்து இளமை மேலிடும். சோம்பல் ஒழியும். இடுப்பு,முதுகு, கழுத்து பலம்பெறும். முதுகில் உள்ள முள்ளந்தண்டு வளைக்கப்பட்டு புது இரத்தம் உடல் எங்கும் பாச்சப்படுவதால் உடல் முழுவதும் இளமைப் பொலிவுடன் காணப்படும். சுவாசம் அடைபட்டு இருந்தாலும் இவ்வாசனம் செய்வதால் அடைப்பு எடுபடும். பெண்கள் கருவுற்ற இரண்டு மாதம் வரை இவ்வாசனம் செய்யலாம். பின் செய்யக் கூடாது. நீரிழிவு நோய் வெகு விரைவில் குணமாகும்.

''எண்ணம் தூய்மையாயிருந்தால்
செயலும் தூய்மையாகவே இருக்கும்''

### மச்சாசனம்

செய்யும்முறை :


சப்தவஜிராசனம்
SAPTHAVAJIRASANAM



பத்மாசனம் போடக்கூடியவர்கள் தான் இவ்வாசனத்தை செய்ய முடியும். பத்மாசனம் போட்டு மல்லாந்து படுத்துக் கொள்ளவும். கைகளைப் பின்னால் ஊன்றி முதுகைத் தூக்கி வில்போல் வளைத்துத் தலையைப் படத்தில் காட்டியபடி பின் வளைத்து, கைகளை எடுத்து கால் கட்டை விரல்களைப் பிடிக்கவும். நெஞ்சுப்பகுதி விரிந்து உயர்ந்திருக்க வேண்டும். இந்த நிலையில் நன்கு மூச்சை இழுத்து விடப்பயிற்சி செய்ய வேண்டும். ஒரு முறைக்கு 5 முதல் 15 வினாடியாக 3 முதல் 4 முறை செய்யலாம்.

பயன்கள்:

சர்வாங்காசனம், விபரீதகரணி, ஹலாசனம் இவற்றிற்கு மாற்றாசனம் இது. மார்பு விரிந்து இருப்பதால் சுவாசப்பையில் நிறைய காற்றுக் கொள்ள இடம் கிடைக்கிறது. சுரப்பிகள் அனைத்தும் புத்துணர்ச்சியோடு வேலை செய்யும். மூச்சை இழுத்து விட விட சுவாசக்குழாய்கள் சுத்தமாக்கப்படுகின்றது. எலும்பு பலப்படும். மார்பு விரிந்து நுரையீரல் நன்றாக வேலை செய்யும். மலச்சிக்கல் நீங்கும் மார்புச்சளி நீங்கும். ஆஸ்த்மா நோயாளர்களுக்கும் இவ்வாசனம் ஒரு சிறந்த மருந்து.

*(இன்னும் வளரும்)*

இந்த ஆசனங்களை தகுந்த குருவிடம் பயின்ற பின் செய்வதே சாலச்சிறந்தது

# துணிந்து நில் போராடு



ஒருமுறை விவேகானந்தர் வாரணாசிக்குச் சென்றிருந்தார். ஒரு பக்கம் பெரிய குளம், மறுபக்கம் நீண்டு நெடிது உயர்ந்த சுவர். அந்தத் தெருவழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அங்கிருந்த திடலில் ஏராளமான குரங்குகள் இருந்தன. தடித்த முரட்டு விலங்குகள் அவை. தாம் வாழும் தெரு வழியாக விவேகானந்தரைச் செல்லவிடாமல் மறித்தன. கீச்கீச்செனக் கூச்சலிட்டும், வீறிட்டு அலறியும், அவருடைய பாதங்களைப் பிடித்து இழுத்தும் வம்பு செய்தன. கடிக்கவும் தொடங்கின. விவேகானந்தர் அவற்றினின்றும் தப்பி விரைந்து ஓடத் தொடங்கினார். அவற்றிடமிருந்து தப்ப முடியாது என்ற அந்தக் கடுமையான சூழ்நிலையில், முன்பின் தெரியாத வழிப் போக்கர் ஒருவர் உரத்த குரலில் ' முரட்டு விலங்குகளை எதிர்த்து நின்றிடு' என்று கத்தினாராம். விவேகானந்தர் உடனே திரும்பி, தம்மை விரட்டிக் கடிக்க வந்த அந்தக் குரங்குகளை நேருக்கு நேர் துணிச்சலோடு பார்த்தாராம். உடனே அவை பின்வாங்கி, ஓடத் தொடங்கினவாம். அந்நிகழ்ச்சி தம் வாழ்க்கையில் ஒரு பாடமாக அமைந்தது என்கிறார் விவேகானந்தர்.

*சொன்னவர்: முனைவர் நிர்மலாமோகன்*

# அது அதுவாகவே இருக்கும் போது நான் நானாகவே இருக்கிறேன்

துறவி ஒருவர் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது மரத்தின் மேலிருந்து தண்ணீரில்தேள் ஒன்று விழுந்துவிட்டது. தத்தளித்தது. தண்ணீருக்குள் கைவிட்டுத் தேளைத் தூக்கினார் துறவி.



தன்னைக் காப்பாற்றுகிறார் என்ற எண்ணமின்றி நறுக்கென்று கொட்டியது தேள். துடித்து, தேளைத் தவறி, தண்ணீரில் விட்டார் துறவி. மறுபடியும் கருணையோடு தூக்கினார். மறுபடியும் கொட்டியது. எத்தனை முறை முயன்றாலும் அதே கதை. கரையிலிருந்து ஒருவர் கேட்டார். ' சுவாமி, தேள்தான் கொட்டுகிறதே திரும்பத் திரும்ப ஏன் காப்பாற்றுகிறீர்கள். விட்டுவிட வேண்டியதுதானே?

துறவி சொன்னார். '' கொட்டுவது தேளின் இயற்கைக் குணம். காப்பாற்றுவது மனிதனின் இயற்கை குணம். அதனுடைய இயற்கையை அது விடாதபோது என்னுடைய இயல்பை மட்டும் நான் ஏன் விடவேண்டும்?


(பகவான் ராமகிருஷ்ணர்)

# எப்படி எப்படியோ ஏமாற்றுகிறார்கள்

எல்லோரும் தாங்கள் செய்யும் தவறுகளை ஒப்புக்கொள்வதே இல்லை. ஏதாவது சமாதானங்கள் ,காரணங்கள், நியாயங்கள் சொல்லி ஏமாற்ற விரும்புகிறார்கள். இதை விளக்கும் ஓர் அழகான கதை.

சங்கரன்பிள்ளை ஒருமுறை சந்தைக்குப் போயிருந்தார்.

ஒரு குறிப்பிட்ட கழுதை அவருக்கு ரொம்பப் பிடித்திருந்தது. பிடித்ததற்கு முக்கிய காரணம்.



'' ஐயா, தயவு செய்து இதை அடித்து உதைத்து வேலை வாங்காதீர்கள். அன்பாகச் சொன்னாலேயே இது புரிந்துகொள்ளும்!' என்றான் கழுதை விற்றவன்.

ஆஹா.. அன்புக்குப் பணியும் கழுதையா?

சங்கரன் பிள்ளைக்கு வியப்புத் தாங்கவில்லை. அதிக விலை கொடுத்து, அதை வாங்கி வந்தார்.

மறுநாள்... சங்கரன் பிள்ளை கழுதையிடம் போய் அதை வருடிக் கொடுத்து, ''வா கண்ணே.. வேலைக்குப் போகலாம்'' என்று அன்பான வார்த்தைகள் சொன்னார்.

கழுதை அசையவில்லை.

சங்கரன்பிள்ளை கழுதையைக் கெஞ்சினார். கொஞ்சினார். எதற்கும் கழுதை மசியவே இல்லை.

விற்றவனை அழைத்து வந்தார். அவன் ஒரு பிரம்பு எடுத்து ' சுளீர்' என்று கழுதையை அடித்தான். உடனே அது எழுந்து வேலைக்குத் தயாரானது.

சங்கரன்பிள்ளைக்குக் கோபம் வந்தது.

'' முரட்டுக் கழுதையைக் கூட இப்படியொரு வேகத்துடன் நான் அடித்ததில்லை. அப்படியிருக்க, அன்பாகச் சொன்னாலே இது கேட்டு அதன்படி நடக்கும் என்று சொல்லி என்னை ஏமாற்றிவிட்டாயே?'' என்று கேட்டார்.

''ஐயா, இப்போதும் சொல்கிறேன். அன்பான வார்த்தைகளைச் சொன்னாலே போதும். ஆனால், கழுதையின் கவனத்தை முதலில் நம்பக்கம் திருப்புவதற்கு ஒன்றிரண்டு சவுக்கடிகள் தேவைப்படும்'' என்றான் கழுதை விற்றவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## புவியியல் II (சூழற் புவியியல்) | பகுதி - I

**பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01. பனிக்கட்டித்துண்டுகளைக் கொண்ட படிவு வீழ்ச்சியை அளக்கப் பயன்படும் கருவி எது?
1) ஆவிமானி 2) பாரமானி
3) காற்றுவேகமானி 4) மழைமானி

02. புறோட்டோ எல்லைப் பிளவு தொடர்பான சரியான கூற்று எது?
1) இந்தியத் தகட்டிலிருந்து இலங்கை பிரிவதற்குக் காரணமான பிளவு.
2) வட அமெரிக்காவில் காணப்படும் பிளவு.
3) கிழக்கு அவுஸ்திரேலியாவில் உள்ளது.
4) றொக்கி மலைத்தொடருக்கு அருகில் காணப்படுவது.

03. பசுமை அமைதி இயக்கத்தின் நோக்கம் யாது?
1) உயிர்ப் பல்வகையைப் பேணுதல்.
2) காடழிவைத் தடுத்தல்.
3) ஓசோன் படையைப் பாதுகாத்தல்.
4) கைத்தொழல் நாடுகளின் நச்சுக் கழிவுகள் விருத்தியடைந்து வரும் நாடுகளை அடைதலைத் தடுத்தல்.

04. ''உயிரினத் தொகுதி'' என்பது எதனைக் குறிக்கின்றது?
1) உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு ஏற்ற பிரதேசங்களில் வாழும் அனைத்து உயிரினங்களினதும் கூட்டு.
2) இயற்கைத் தாவரங்களைக் குறிக்கும்.
3) சமுத்திர சூழல் தொகுதிகளைக் குறிக்கும்.
4) நீர்ச் சூழல் தொகுதிகள் அனைத்தையும் குறிக்கும்.

05. உலக வானிலை தினம்,
1) மார்ச் 23 2) மார்ச் 21 3) மே 11 4) ஜூலை 11

06. 'ஹம்ஸ்' என்பது,
1) கரையோர ஊதுதுழைகளைக் குறிக்கும்.
2) சுண்ணாம்புக் கற்குகையின் வாய்ப்பகுதியாகும்.
3) சுண்ணாம்புக் கற்குகையின் முகட்டைத் தாங்கும் தூண்கள்.
4) புனற்பள்ளம் பெரிதாக மாறும்போது அழைக்கப்படும்.

07. சிறுபாறைத் தீவுகள் தோன்றுவது,
1) அடிகட்டைகள் வளர்வதனால். 2) வில்வளைவு உடைவதால்.
3) குகைகள் உடைவதால். 4) ஊதுதுழைகள் உடைவதால்.

08. 'வளிவடிகை' என்பது,
1) வளிமண்டலத்திலுள்ள காபனீரொக்சைட் ஒளித்தொகுப்பிற்குப் பயன்படுத் தப்படல்.
2) சமனற்ற மேற்பரப்பையுடைய பிரதேசங்களில் குளிர்ந்த பாரமான காற்று உயர் நிலப் பகுதியில் இருந்து தாழ்நிலங்களுள் செல்லல்.
3) மழைநீரில் வளிமண்டல வாயுக்கள் கரைதல்.
4) குளிர்ந்த வளி உலர்ந்த வளியாக மாறுதல்.

09. வடகீழ் தடற்காற்றுக்களும், தென்கீழ் தடற்காற்றுக்களும் சேர்வது,
1) முனைவு அயல்தாழமுக்க வலயத்தில்.
2) அயன அயல் உயரமுக்க வலயத்தில்.
3) மத்திய கோட்டுத் தாழமுக்க வலயத்தில்.
4) வடமுனைவு உயரமுக்க வலயத்தில்.

10. 'வெளித்தள்ளல்' என்பது எதனைக்குறிக்கும்,
1) வெப்ப நீரூற்றுக்களின் உருவாக்கத்தை.
2) பிளவுப் பள்ளத்தாக்கின் உருவாக்கத்தை.
3) எரிமலைக்குழம்பின் வெளியேற்றத்தை.
4) மேற்கூறிய யாவும் சரி.

11. கலிபோர்னியாவின் சியாரா நெவாடா மலை தொடர்பான சரியான கூற்று யாது?
1) இது 400 மைல் நீளமான ஆழத் தீப்பாறையாகும்.
2) மேற்பரப்பு ஆழமாக அரிக்கப்பட்டதால் இது வெளித் தெரிகின்றது.
3) இது ஒரு பெரிய தீப்பாறைத் திணிவுக்கு உதாரணமாகும்.
4) மேற்கூறிய யாவும் சரி.

12. 'தளர்படைப்பாறை' என்பது எதனைக் குறிக்கும்?
1) தாய்ப்பாறைகளை மூடியிருக்கும் பிரிவதால் சேர்ந்த பாறைப் பொருட்கள்.
2) எரிமலைக் குழம்புப் பாறைகள்.
3) அடர்சேற்று நிலங்கள். 4) எசுக்கர் போன்ற குன்றுகள்.

13. 'தொங்குபாரம்' என்றால் என்ன?
1) தொங்கு பள்ளத்தாக்குகள் ஊடாகக் கீழிறங்கும் நீர்வீழ்ச்சி.
2) காற்று காவிச் செல்லும் பரல்கள்.
3) அலை அரைந்து தேய்க்கும் பருப்பொருள்.
4) ஓடும் நீர் காவிக்கொண்டு செல்லும் பருப்பொருட்கள்.

14. பின்னடர் சேறுகள் காணப்படுவது,
1) பிறையுரு மணற்குன்றுகளில். 2) வெள்ளச் சமவெளியில்.
3) நீள்குன்றுகளில். 4) தொடர்மணற்குன்றுகளில்.

15. இத்தாலியின் ''அப்பியூலியாத் தாழ்நிலம்'' கொண்டிருப்பது,
1) மூடுபள்ளம் எனப்படும் அகன்ற புனற்பள்ளங்களை.
2) தொம்போலாக்களை.
3) கூழாங்கன்னாக்குகளை. 4) பிறைவுருமணற் குன்றுகளை.

16. கடற்கரைக்கும் தீவுக்கும் இடையில் படிவு ஏற்பட்டு நில இணைப்புள்ள தீவாகக்

## SPECIAL GUIDE FOR 2010 A/L ARTS STUDENTS

காட்சியளிக்கையில் அதனை எவ்வாறு அழைப்பர்?
1) கொழுக்கி வடிக்கன்னாக்கு, 2) விரிகுடா மணற்தடை.
3) வளைந்த நாக்கு. 4) தொம்போலா.

17. சமபாரமானியமுக்கக் கோடுகள் என அழைக்கப்படுபவை,
1) சமவெப்பக் கோடுகள். 2) சம அமுக்கக் கோடுகள்.
3) சம மழைவீழ்ச்சிக் கோடுகள். 4) சம உயரக் கோடுகள்.

18. 'தெய்வேந்திரா முனை' காணப்படும் மாவட்டம்,
1) அம்பாந்தோட்டை. 2) அம்பாறை.
3) காலி. 4) மாத்தறை.

19. ஐ.நாடுகள் அமைப்பு எந்த வருடத்தினைப் 'பாலைவனமாக்கல் எதிர்ப்பு வருடம்' எனப் பிரகடனம் செய்தது?
1) 2008 2) 2007 3) 2006 4) 2005

20. 'அட்டோள்கள்' என்பது எதனைக் குறிக்கின்றது?
1) பாலைநிலப் பசுஞ்சோலைகள். 2) கரையோரத் தொம்போலாக்களை.
3) சுண்ணாம்புக்கற் பிரதேச உவாவாக்களை.
4) முருகைக்கல் வளையத் தீவுகள்.

21. ஐ.நா. அமைப்பு ''வனவருடம்'' என எந்த ஆண்டை பிரகடனப்படுத்தியுள்ளது?
1) 2011 2) 2007 3) 2009 4) 2006

22. அதிகளவிலான அகழிகளைக் கொண்டிருக்கும் சமுத்திரம்,
1) இந்து சமுத்திரம். 2) பசுபிக் சமுத்திரம்.
3) ஆட்டிக் சமுத்திரம். 4) அத்திலாந்திக் சமுத்திரம்.

23. ''சூழல் அகதிகளின்'' உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்யும் பிரதான காரணி,
1) அமிலமழை. 2) நிலவழுக்குகை.
3) ஓசோன் படைச் சிதைவு. 4) மண்ணின் தரமிழப்பு.

24. ''ரான் ஏரிகள்'' என அழைக்கப்படுபவை,
1) செபமாலை ஏரிகளைக் குறிக்கும்.
2) பணியெருத் தேரிகளைக் குறிக்கும்.
3) எரிமலைவாய் ஏரிகளைக் குறிக்கும்.
4) மலைப்பனியாறு உருவாக்கும் சிறுமலையேரிகளைக் குறிக்கும்.

25. தூசுக்கிண்ணம் என்பது,
1) காற்றின் வீசல் செயன்முறையைக் குறிக்கும்.
2) அமெரிக்காவின் மத்திய மேற்கில் காற்றரிப்பினால் பாழடைந்த நிலப்பரப் பினைக் குறிக்கும்.
3) அயன சூறாவளிகளைக் குறிக்கும்.
4) மேற்பரப்பு நீரோட்டத்தினைக் குறிக்கும்.

26. சர்வதேச பசுமைக்கான சமாதானம் எனும் நிறுவனம் உருவாக்கப்பட்டது,
1) 1980 இல் 2) 1940 இல் 3) 1990 இல் 4) 1971 இல்

27. பின்வருவனவற்றில் சமுத்திரங்களை மட்டும் உள்ளடக்கிய தகடு எது?
1) பசுபிக் தகடு. 2) யுரோசியத் தகடு.
3) பிலிப்பைன்ஸ் தகடு. 4) சீனத் தகடு.

28. 'ட்யூன்ஸ்' என்பது எதனைக் குறிக்கும்?
1) மலைப்பனியாறு உருவாக்கும் நிலவுருவம்.
2) கண்டப் பனியாறு உருவாக்கும் நிலவுருவம்.
3) பாலைநில மணற்குன்றுகள்.
4) கடலரிப்பால் தோன்றும் குகைகள்.

29. ''கௌரோ'' என்பது எதனைக் குறிக்கும்?
1) பிரான்ஸியக் கயானாவில் காணப்படும் ஐரோப்பிய விண்வெளிக் கழகம்.
2) அமெரிக்க விண்வெளி மையம்.
3) இந்திய விண்வெளி மையம்.
4) பிரான்ஸின் விண்வெளி மையம்.

30. ஜடாங்குகளை அதிகம் காணக்கூடிய பாலைவனங்கள் எனக் கூறக்கூடியவை எவை?
1) மேற்கு அவுஸ்ரேலியா, சகாரா. 2) கலாகாரி, கோபி.
3) கோபி, மேற்கு அவுஸ்ரோலியா.
4) மத்திய ஆசியப் பாலைவனம், அற்றகாமா.

31. மேஸஸ் Mesos, பட்ஸ் Buttes போன்ற நிலவுருவங்களை அதிகமாகக் காணக் கூடிய பாலைவனங்கள்,
1) அரிசோனா, மத்திய ஆசியப் பாலைவனம்.
2) சகாரா, மேற்கு அவுஸ்ரேலியா.
3) கலகாரி, அற்றக்காமா. 4) அற்றக்காமா, பற்றக்கோணியா.

32. பிரிதளங்கள் காணப்படுவது,
1) மத்திய கோட்டிற்கு அருகில்.
2) கடக, மகரக் கோடுகளிற்கு அருகில்.
3) உயர், அகலக்கோடுகளுக்கருகில்.
4) மத்திய கோட்டு அமைதி வலயத்தில்.

33. 2010 ஏப்ரலில் எரிமலை ஒன்றின் கக்குகை காரணமாக ஐரோப்பிய நாடுகளின் விமானப் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டது. அந்த எரிமலை அமைந் துள்ள நாடு எது?
1) பிரான்ஸ். 2) இத்தாலி. 3) அயர்லாந்து. 4) ஐஸ்லாந்து.

34. மலைப்பனிக்கட்டியாறுகள் தோற்றுவிக்கும் பீடங்கள், பள்ளத்தாக்குகள் ஆகிய வற்றைக் காணக்கூடிய பிரதேசம்,
1) ஸ்கொட்லாந்து உயர்நிலம், வடவேல்ஸ்.
2) அவுஸ்ரேலியாவின் விக்ரோரியாப் பகுதி.
3) அமெரிக்காவின் கலிபோர்னியாப் பகுதி.
4) அந்தாட்டிக்காப் பகுதி.

(13 ஆம் பக்கம் பார்க்க)

என்.பாபு, B.A (Geo.Sp),
DMI., யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. ''சிலேற்றுப் பாறை'' தோன்றுவது,
   1) மாக்கல் வெப்ப, அமுக்க உருமாறுதலினால்.
   2) மாக்கல்லின் வெப்ப உருமாறுதலினால்.
   3) மாக்கல்லின் அமுக்க உருமாறுதலினால்.
   4) மேற்கூறிய யாவும் சரி.

36. ''ரியோ ஒப்பந்தம்'' கைச்சாத்திடப்பட்டது,
   1) 1980  2) 1972  3) 1992  4) 1996

37. ஏதாவதோர் இடத்தில் வற்றுக்கும், பெருக்குக்கும் இடையிலுள்ள நீர்மட்டத்தின் சராசரி வேறுபாடு எவ்வாறு அழைக்கப்படும்?
   1) தொம்போலோ.  2) அலையுயரம்.
   3) அலைநேரம்.  4) வற்றுப்பெருக்கு வீச்சு.

38. ''ஒருங்கற் காற்று'' என அழைக்கப்படுவது எது?
   1) உயரமுக்கத்தில் தோன்றும் சூறாவளிகள்.
   2) தாழமுக்கத்தில் தோன்றும் சூறாவளிகள்.
   3) மேலைக் காற்றுக்கள்.  4) வடகீழ் பருவக் காற்றுக்கள்.

39. ''அலைமுறிவு'' என்பது எதனைக் கருதுகின்றது?
   1) சூறாவளியின் வேக அதிகரிப்பு.
   2) எல்நினோவின் செயற்பாடு.
   3) சமுத்திர வற்றுப் பெருக்கு.
   4) ஆழம் குறைந்த கடலில் வேகமான அலைமுடி உடைவுறுதல்.

40. 2009 ஒக்டோபரில் ''மினினே'' புயல் தாக்கிய தீவு எது?
   1) கெய்ட்டி.  2) பிஜி.
   3) பிலிப்பைன்ஸ்.  4) சிசிலி.

## புவியியல் II (சூழற் புவியியல்) — பகுதி - I

### பகுதி 'அ' சூழல் மூலகம்

01. 1) பின்வரும் பதங்களை சுருக்கமாக விளக்குக.
      1. இமவாக்கம்.
      2. பனியருவி.
      3. பனிக்கட்டி மலை.
   2) மலைப் பனிக்கட்டியாறாதலின் விளைவாக உருவாகும் 3 நிலவுருக்களை விளக்கப்படத்துடன் விவரிக்குக.
   3) பனிக்கட்டியாற்றரிப்பு, ஆற்றரிப்பு ஆகியவற்றிற்கிடையிலான ஒற்றுமைகள், வேற்றுமைகள் தலா இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

02. 1) ஓடும் நீர் நிலவுருவங்களை உருவாக்கும் வகையில் மேற்கொள்ளும் மூன்று தின்னற் செயல்களைக் குறிப்பிடுக.
   2) ஓடும் நீர் பருப்பொருட்களை எடுத்துச் செல்லும் மூன்று நிலவுருவங்களைப் புனையா வரைபடத்துடன் விளக்குக.
   3) நீரரிப்பினால் தோற்றுவிக்கப்படும் மூன்று படிதல் நிலவுருக்களைப் பெயரிடுக.
   4) நீர் பெயரிட்ட நிலவுருவங்களை விளக்கப்படத்துடன் விளக்குக?

03. 1) கீழே கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நாடுகளிலும் காணப்படுகின்ற ஒவ்வொரு எரிமலைகளைப் பெயரிடுக.
      A - ஜப்பான்
      B - இத்தாலி
      C - பிலிப்பைன்ஸ்
      D - இந்தோனேசியா.
   2) எரிமலைச் செயற்பாட்டினைத் தூண்டும் நான்கு காரணிகளையும் குறிப்பிடுக?
   3) எரிமலைத் தொழிற்பாட்டின்போது வெளிவிடப்படும் பொருட்களை வகைப் படுத்தி உதாரணம் தருக?
   4) எரிமலைத் தலைவீட்டு நிலவுருவங்கள் மூன்றினைப் புனையா வரைபட உதவியுடன் விளக்குக.

04. 1) ஐரோப்பாக் கண்டத்திற்குரிய கெப்பனின் காலநிலை வகைகள் இரண்டினைப் பெயரிடுக.
   2) நீர் பெயரிட்ட வகைகளில் ஒன்றினைத் தெரிந்து அதன் முனைப்பான பண்பு களை விளக்குக.
   3) மேற்குறித்த காலநிலை வகை மனித நடவடிக்கைகளில் கொண்டுள்ள தாக் கத்தை விளக்குக?
   4) கெப்பனின் கட்டளை விதிகளை விளக்குக.

### பகுதி 'ஆ' சூழல் முகாமைத்துவம்

05. 1) உலகில் அயனக்காடழிப்பு நடைபெறுகின்ற நான்கு நாடுகளைப் படத்தில் குறிப்பிடுக.
   2) அயனக் காடழிப்பு துரிதமடைவதில் பங்களிப்புச் செய்துள்ள மூன்று காரணி களைக் குறிப்பிடுக.
   3) அயனக் காடழிப்பு நடவடிக்கையினால் ஏற்படுகின்ற விளைவுகள் இரண்டினை விளக்குக.
   4) அயனக் காடுகளை அழிவிலிருந்து பாதுகாக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக் கைகள் மூன்றை விளக்குக.

06. 1) ''உயிர்ப்பல்வகைமை'' என்பதனை விளக்குக.
   2) உயிர்ப்பல்வகைமை அழிவிற்கான காரணங்கள் மூன்று தருக?
   3) உலகின் உயிர்ப் பல்வகைமையினைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்படுகின்ற நட வடிக்கைகள் மூன்றை விளக்குக.
   4) இலங்கையில் உயிர்ப் பல்வகைமையினைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்படுகி ன்ற நடவடிக்கைகள் மூன்றை விளக்குக.

07. 1) ஓசோன் படையின் முக்கியத்துவத்தினை விளக்குக.
   2) ஓசோன் படைச் சிதைவிற்கான மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.
   3) ஓசோன் படைச் சிதைவினால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டினை விளக்குக.
   4) ஓசோன் படையினைப் பாதுகாக்க எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் மூன்றை விளக்குக.

08. 1) பச்சை வீட்டு வாயுக்கள் நான்கைப் பெயரிடுக.
   2) புவி வெப்பமாதலுக்குரிய காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
   3) புவி வெப்பமாதல் ஏற்படுத்தும் விளைவுகள் இரண்டினை விளக்குக.
   4) உலகளாவிய ரீதியில் கோளவெப்பமாதல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மூன்றை விளக்குக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## புவியியல் III (மானிடப் புவியியல்) — பகுதி - I

பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.

01. 'கம்முதாவ', 'விதாதா' போன்றன,
   1) இலங்கையின் கிராமிய அபிவிருத்தி, வறுமை ஒழிப்பை நோக்கமாகக் கொண்டுள்ளன.
   2) மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பகுதிகளாக உள்ளன.
   3) நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டுள்ளன.
   4) மீன்பிடி, கால்நடை வளர்ப்பினை நோக்கமாகக் கொண்டுள்ளன.

02. ஒரு நகரத் தொகுதி ஒரு பிரதான தலைநகரை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி அடையும்போது அப்போது அந்த நகரம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
   1) நகரக்குவிவு  2) மெற்றோபொலிட்டன்
   3) ஒட்டுண்ணிநகரம்  4) மாநகரம்.

03. பின்வருவனவற்றுள் உலகின் மாட்டிறைச்சி உற்பத்தியில் முக்கியத்துவம் பெறும் நாடுகளின் தொகுதி எது?
   1) சிலி, பேரு, கொலம்பியா, தாய்லாந்து.
   2) ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆஜன்ரீனா, அவுஸ்திரேலியா.
   3) ஜப்பான், தென்கொரியா, கம்போடியா, சீனா.
   4) நமீபியா, இந்தியா, பாகிஸ்தான், மலேசியா.

04. இலத்தீன் அமெரிக்காவில் 'மில்பா' என்றும், தென்கிழக்காசியாவில் 'லடாங்' என்றும் அழைக்கப்படுவது,
   1) நாடோடி மந்தைமேய்த்தல்.  2) மத்தியதரை விவசாயம்.
   3) கால்நடை வளர்ப்பு.  4) பெயர்வுப் பயிர்ச்செய்கை.

05. ஐ.நா அமைப்பு எந்த ஆண்டினை ''மக்கள் தொகை வருடம்'' எனப் பிரகடனம் செய்தது?
   1) 1974  2) 1964  3) 1954  4) 1946

06. சிறுதோட்ட தேயிலைச் செய்கை நடவடிக்கைகளுக்கு உதவும் நிறுவனம்.
   1) சிறுதேயிலை தோட்ட அபிவிருத்திச் சங்கம்.
   2) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
   3) விவசாயத் திணைக்களம்.  4) அரச மரக் கூட்டுத்தாபனம்.

07. 1997 - 2006 வரையான தசாப்த காலப் பகுதி ஐ.நா சபையால் எவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டது,
   1) வீதி அபிவிருத்தி தசாப்தம்.  2) வறுமை ஒழிப்பு தசாப்தம்.
   3) சுகாதார அபிவிருத்தி தசாப்தம்.
   4) பெண்கள் அபிவிருத்தி தசாப்தம்.

08 'மாதுரு ஓயா நீர்த்தேக்கம்' உள்ளடக்கப்படுவது,
   1) மகாவலித் திட்டத்தின் 'B' பிரதேசம்.
   2) மகாவலித் திட்டத்தின் 'M' பிரதேசம்.
   3) மகாவலித் திட்டத்தின் 'C' பிரதேசம்.
   4) மகாவலித் திட்டத்தின் 'I' பிரதேசம்.

09. ''$A_{12}$'' வீதி இணைப்பது,
   1) புத்தளம் - திருகோணமலை.  2) கண்டி - புத்தளம்.
   3) கண்டி - யாழ்ப்பாணம்.  4) கொழும்பு - மட்டக்களப்பு.

10. 'நீலப்புரட்சி' என்பது,
   1) சிறிய நிலங்களில் அதிக தானிய உற்பத்திப் பெருக்கம்.
   2) மீன் கடல் உயிர் உற்பத்திப் பெருக்கம்.
   3) எண்ணெய் உற்பத்திப் பெருக்கம்.
   4) பழவகை, மரக்கறிப் பயிர் உற்பத்திப் பெருக்கம்.

11. இலங்கையின் தாழ்நிலத் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்,
   1) கல்கமுவ.  2) பலன.
   3) தலவாக்கொல்லை.  4) பெரல்மதுளை.

12. இலங்கையின் சிறு தெங்கு முக்கோண வலயம் அமைந்துள்ள மாவட்டம்,
   1) புத்தளம்.  2) அம்பாந்தோட்டை.
   3) மாத்தறை.  4) காலி.

13. 'சோமாங்' என்பது,
   1) அவுஸ்ரேலியாவின் கால்நடை வளர்ப்பு.
   2) ரஷ்யாவின் நாடோடி மந்தை மேய்த்தல்.
   3) கனடாவின் பழங்குடி மக்கள்.
   4) மலேசியாவின் பெயர்ச்சிப் பயிர்ச் செய்கை.

14. உயர் பிறப்பு வீதம், உயர் இறப்பு வீதத்தில் இருந்து தாழ் பிறப்பு வீதம், தாழ் இறப்பு வீதத்திற்கு மாறுவதை விவரிப்பது,
   1) குடித்தொகை அடர்த்தி.
   2) குடித்தொகைக் கட்டமைப்பு.
   3) குடிவிவரணவியல் நிலைமாற்றம்.  4) குடிவரவு.

15. நில அலகு ஒன்றிலுள்ள குடித்தொகை அளவைக் குறிப்பது,
   1) சனத்தொகைக் கட்டமைப்பு.  2) சனத்தொகைப் பரம்பல்.
   3) சனத்தொகை அடர்த்தி.  4) சனத்தொகைக் கூம்பு.

16. 'மனிதனின் உலகியற் சாதனைகளை ஆராயும் இயலே மானிடப் புவியியலாகும்' எனக் கூறியவர்,
   1) திரவாதா.  2) செம்பின்.  3) புரூணே.  4) லாபிளாஸ்.

17. செம்பனை எண்ணெய் (Palm oil) ஏற்றுமதியில் முதலிடம் பெறும் நாடு,
   1) இந்தோனேசியா.  2) சீனா.
   3) மலேசியா.  4) ஜப்பான்.

18. மரபு சாரா எரிபொருள் வளமாகக் கரும்புச்சாற்றைப் பயன்படுத்தும் நாடுகள்,
   1) ரஷ்யா, ஜப்பான்  2) இந்தியா, தாய்வான்.
   3) அமெரிக்கா, பிரேசில்  4) பிலிப்பைன்ஸ், சீனா.

19. 'ஆந்திரியாக்கஸ்' எனப்படுவோர்,
   1) அவுஸ்திரேலியாவின் ஆதிவாசிகள்.
   2) வடசைப்பிரியாவில் வாழும் நாடோடி இனத்தவர்.
   3) ஆபிரிக்காவின் மந்தை மேய்ப்போர்.
   4) வட அமெரிக்காவின் பழங்குடியினர்.

20. 'கிராண்ட் பாங்' மீன்பிடித்தளம் காணப்படுவது,
   1) வடமேல் அத்திலாந்திக் மீன் பண்ணையில்.
   2) வடகீழ் அத்திலாந்திக் மீன் பண்ணையில்.
   3) வடமேல் பசுபிக் மீன் பண்ணையில்.
   4) வடகீழ் பசுபிக் மீன் பண்ணையில்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



சில வேலைகளை முடிக்க பல மணிநேரம் காத்திருக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். சிலருக்கு வாக்குக் கொடுத்து விட்டு அதை நிறைவேற்ற முடியாமல் சாக்குப் போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். முக்கியமான சில செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள்.

### இடபம்



சோர்வு, சோம்பல் விலகி புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கிக் கொடுப்பீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுக்க முன்வருவர். நேரம் பார்த்து செயற்பட்டு சில வேலைகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள்.

### மிதுனம்



முன்யோசனையுடன் செயற்படாததால், சில விடயங்களில் அவதிகளுக்கு ஆளாகலாம். நீங்கள் எங்காவது வெளியில் புறப்பட்டுச் செல்லும் நேரத்தில் உறவினர்கள் வீட்டிற்கு வரலாம். நண்பர்கள், சக ஊழியர்களின் மனம் கோணாமல் நடந்துகொள்ள முற்படுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

### கடகம்



பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறலாம். பழைய நண்பர் ஒருவரின் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும். பேராசையாகச் செயற்படுவதன் மூலம் சில விஷயங்களில் அதிருப்தி அடையலாம். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். நீங்கள் கேட்ட உதவியைத் தராமல் சிலர் கைவிரிக்கலாம்.

### சிங்கம்



சில வேலைகளை முடிக்க ஒரு முறைக்கு இரு முறை அலைய நேரிடலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். ஏதோ ஒரு வழியில் மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். நன்றி மறந்த சிலரை எண்ணி வேதனை அடைவீர்கள். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த கடன் பாக்கிகள் வராமல் இழுத்தடிக்கலாம்.

### கன்னி



புத்துணர்ச்சி தெம்புடன் செயற்படும் நாள். அடமானமாக வைத்த பொருள் ஒன்றை மீட்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையலாம். நண்பர் ஒருவர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். பரியமான உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். பெற்றோர் வழியில் பெருமைப்படும் நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

### துலாம்



நண்பர்கள் அல்லது உறவினர்கள் கைமாத்தாக வாங்கிய பணம் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தினருக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். பல நாள்களாக இழுத்தடித்துக் கொண்டிருந்த சில வேலைகள் நல்ல விதமாக முடியலாம். கடும் அலைச்சலை தரும் என நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிவுக்கு வரும்.

### விருச்சிகம்



சில விடயங்களுக்காக கணிசமான தொகையைச் செலவிடலாம். வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் கடுமையாகப் பேசுவதை தவிர்க்க வேண்டும். எதிர்பார்த்த ஒரு காரியம் நடக்காமல் போனாலும், எதிர்பாராத ஒரு காரியம் நடக்கும். மறைமுக எதிர்ப்புகள், போட்டிகளால் மன அமைதி பாதிக்கும் வாய்ப்பு உண்டு.

### தனுசு



குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். அயலார் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சக ஊழியர்களின் திடீர் விடுமுறையால் அவர்கள் வேலையை சேர்த்துச் செய்யலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும்.

### மகரம்



புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். மனதில் வைத்திருந்த ஆசை ஒன்று நிறைவேறிய திருப்தியுடன் காணப்படுவீர்கள். தாய் வழி உறவுகளால் அனுகூலம் கிடைக்கலாம். பெண்கள் வழியில் மனதிற்கு சந்தோஷம் தரும் நிகழ்ச்சி நடக்கலாம். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள்.

### கும்பம்



உங்களின் தொழில் ரீதியான செயற்பாடுகளை மற்றவர்கள் குறை சொல்லலாம். வெளிப்படையாக நல்லவர்கள் போல சிலரிடம் பேசினாலும், உள்ளுக்குள் நீங்கள் ஒரு திட்டம் போட்டு செயற்படுவீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள் நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். வீண் பிடிவாதங்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

### மீனம்



போட்டிகள், சவால்களில் வெற்றி பெறுவீர்கள். உங்களின் குறையை மற்றவர்கள் அறிந்து கொள்ளாத வகையில் ஜம்பமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நண்பர்களின் ஒத்துழைப்போடு புதிய காரியம் ஒன்றைச் செய்ய முற்படுவீர்கள்.

# சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று யாழ்.மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## சிவசோதி சக்திதாசன்
### ஹாட்லிக் கல்லூரி

நான் தரம் ஒன்று முதல் புலமைப்பரிசில் பரீட்சை வரை மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். தரம் 6 முதல் ஹாட்லிக் கல்லூரியில் கற்றுவருகின்றேன். ஜி.சி.ஈ. சாதாரண தர பரீட்சையில் 9 ஏ சித்திபெற்றதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலையில் கற்றதை வீட்டில் மீளக்கற்றமையும் சுயகற்றலும் என்னுடைய வெற்றியின் பிரதான காரணமாகும். கடந்த கால வினாத்தாள்களைச் செய்தமையும் பத்திரிகைகளில் வெளிவந்த மாதிரி வினாத்தாள்களை செய்தமையும் என் கல்வி அடைவை உயர்த்துவதில் செல்வாக்குச் செலுத்தியது.

பெற்றோரினதும் சகோதரிகளினதும் பூரண பங்களிப்பு பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்பும் அயலவர்களின் தூண்டுதலும் நான் இப்பெறுபேற்றைப் பெற காரணமாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் நான் அவர்களுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

மாணவர்கள் விடைகளை பெறும் யுத்திகளை பயிலும் இயந்திரங்களாக இருக்காது பாடங்களில் தாற்பரியத்தை விளங்கிக்கொண்டு அதனை மேலும் விருத்திசெய்யும் சிந்தனையாளர்களாக இருக்கவேண்டும். மாணவர்கள் இறுதிப்பரீட்சையை குறியாகக்கொண்டு கடுமையாக உழைப்பதன் மூலமே சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம். உயர் தரத்தில் கணிதப்பிரிவை தெரிவுசெய்து கற்றுவரும் எனது இலட்சியம் பொறியியல் துறையில் எதிர்காலத்தில் சிறந்து விளக்குவதேயாகும்.



## வேல்முருகு கீர்த்தனன்
### ஹாட்லிக் கல்லூரி

நான் ஆரம்பக் கல்வியை புற்றளை மகா வித்தியாலயத்தில் கற்றேன். பின்னர் 6ஆம் தரத்திலிருந்து ஹாட்லிக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கற்றேன்.

2009 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி 6ஏ2பிசி எனும் பெறுபேற்றைப் பெற்றேன். நான் இந்தப் பெறுபேற்றைப் பெறுவதற்கு ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோர் காரணமாக அமைந்துள்ளனர்.

நான் படிப்பதற்குப் பெரிதும் ஆதரவாக இருந்தது எனது பாடசாலை நூலகம். அங்கு நான் மேலும் பல வெற்றிகளை எனது பெற்றோரிற்கும் பாடசாலைக்கும் வழங்குவேன்.

என்னை ஊக்குவித்த பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## பாலேந்திரா சூர்யா
### ஹாட்லிக் கல்லூரி

நான் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் 8ஏபி பெறுபேற்றினைப் பெற்றதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

எனது ஆரம்பக்கல்வியை கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலையில் கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தரம் 6 முதல் இன்றுவரை ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றேன்.

அன்றாடம் கற்றவற்றை வீட்டில் மீட்டல் செய்தமை, கடந்த கால வினாப்பத்திரங்களையும் மாதிரி வினாப்பத்திரங்களையும் பயிற்சி செய்தமை என்பவற்றின் ஊடாக என்னால் இப்பெறுபேற்றினைப் பெற முடிந்தது.

அந்தவகையில் இச்சிறந்த பெறுபேற்றினைப் பெற உதவிய இறைவன், பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், புலோலி கல்வி நிலைய ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் உயர்தரத்தில் கணிதத்துறையினை தெரிவுசெய்து கற்று வருகின்றேன். ஒரு பொறியியலாளராகி நாட்டுக்குச் சேவை செய்வதே எனது நோக்காகும். அதற்கு இறை ஆசியை வேண்டி நிற்கின்றேன்.



## பாலேந்திரன் டினேஸ்
### ஹாட்லிக் கல்லூரி

நான் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி 5ஏ2பி2சி பெறுபேற்றைப் பெற்றுள்ளேன். நான் இந்தப் பெறுபேற்றைப் பெற காரணமான ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

நேர்காணல்: எஸ்.மூர்த்தி

நான் ஒவ்வொரு பாடங்களையும் அன்றன்றே படிப்பதை வீட்டில் படிப்பேன். விளங்காதவற்றை ஆசிரியர்களிடம் கேட்டுக்கற்பேன். முழு முயற்சியும், உழைப்பும் உள்ள மனிதன் வாழ்வில் வெற்றியடைவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**01.12.1991**

* தமிழீழ காவல்துறையின் யாழ். நகரப் பணிமனை (யாழ்.பொலிஸ் நிலையம்) இன்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படும் என விடுதலைப் புலிகள் தரப்பு தெரிவிப்பு.
* விடுதலைப் புலிகளுக்கு அமைச்சர் தொண்டமான் எழுதிய அவசர கடிதம் ஒன்று யாழ். அரச அதிபரால் யாழ்ப்பாணத்தில் வைத்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவரிடம் கையளிப்பு.

**02.12.1991**

* எமது காவல்துறை மக்களோடு மக்களாக பழகி குற்றச்செயல் நிகழாத சமூகம் ஒன்றை உருவாக்கும் செயல்திட்டம் ஒன்றை முன்னெடுக்கும் என தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் தெரிவிப்பு.
* வடபகுதிக்கான மின்விநியோகப் பாதையைச் சீர்செய்வது குறித்து ஆராய இலங்கை மின்சாரசபை பொறியியலாளர் குழுவொன்று மாங்குளம் செல்வதாகத் தெரிவிப்பு.

**03.12.1991**

* நாட்டின் இனப்பிரச்சினைக்கு உடனடியாக அரசியல் தீர்வு காணவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி ஐரோப்பிய சமூகம் இலங்கை அரசுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவிப்பு.
* குறைந்தது ஆறு மேற்கு நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்குவதை நிறுத்தி விட்டன என முன்னாள் அமைச்சர் லலித் அதுலத்முதலி தெரிவிப்பு.

**04.12.1991**

* விடுதலைப் புலிகள் பூரணமான சுயாட்சியை கோருகின்றனர் என அமைச்சர் தொண்டமான் 'புரொண்ட்லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு.
* அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள அமைச்சர் தொண்டமானுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடை யேயான பேச்சுவார்த்தையின் போது சண்டையற்ற நிலையை உருவாக்குதல் உட்பட முக்கிய சில விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

**05.12.1991**

* ஐக்கியதேசியக் கட்சியில் இருந்து லலித் அதுலத்முதலி, காமினி திசநாயக்க, உட்பட 8 எம்பிக்கள் அக்கட்சியின் செயல் குழுவினால் வெளியேற்றப்பட்டமை சட்டபூர்வமானது என நீதிமன்றம் தீர்ப்பு.
* உள்நாட்டுச் சண்டை அரசினால் சர்வதேச பிரச்சினை ஆக்கப்பட்டுவிட்ட நிலையில் வருடக்கணக்கான யுத்தம் அரசுக்குப் பாதகமாகவே முடியும் என இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவிப்பு.

**06.12.1991**

* வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அடுத்த மாத முடிவுக்குள் அரசு தீர்வு காணத் தவறினால் தாம் வழங்கிவரும் நிவாரண மற்றும் உதவிகளை முற்றாக நிறுத்திவிடப் போவதாக மேற்கு நாடுகளில் இயங்கும் பல சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் அரசுக்கு எச்சரிக்கை.
* பத்மநாபா கொலை தொடர்பாக தமிழக அரசு அதிகாரிகள் உட்பட முக்கிய பல புள்ளிகள் கைது செய்யப்படுவார்கள் என வெரித்தாஸ் வானொலி தெரிவிப்பு.

**07.12.1991**

* இனப்பிரச்சினைக்கு உதவுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள சில மேற்கு நாடுகள் அரசிடம் விடுதலைப் புலிகளிடம் இவ்விடயம் தொடர்பான அவர்களது முன்மொழிவுகளைத் தருமாறு கேட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* யாழ்ப்பாணம் செல்லும் அமைச்சர் தொண்டமானின் சமாதான யோசனைகள் அமைச்சரவையின் பரிசீலனைக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

**08.12.1991**

* அமைச்சர் தொண்டமானின் யாழ்ப்பாண விஜயம் திடீர் என ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* பலாலி முகாம் இராணுவத்தினர் இடைக்காடு, பத்தமேனி பகுதிகளுடாக முன்னெற முயன்ற போது விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் பெரும் சண்டை மூண்டதாகத் தெரிவிப்பு.

**09.12.1991**

* விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள பொலிஸார் மற்றும் படையினரைப் பார்வையிடுவதற்கான அவர்களது பெற்றோர்களின் யாழ்ப்பாண விஜயம் கூட்டுப் படைத் தலைமையக உத்தரவால் தள்ளி வைக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* சமாதானப் பேச்சை தொடங்க முன்னர் புலிகள் முதலில் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற நிபந்தனையுடன் விடுதலைப் புலிகளை பேச்சுக்கு முன்வருமாறு மீண்டும் ஜனாதிபதி பிரேமதாஸ அழைப்பு விடுப்பு.

**10.12.1991**

* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளின்போது வடக்கு - கிழக்கை தமிழரின் பாரம்பரிய தாயகமாக ஏற்கக் கூடாது என அரசுக்கும் ஜனாதிபதிக்கும் பௌத்த குருமார் நிபந்தனை விதிப்பு.
* அப்பா ஸ்தாபித்த கட்சியின் ஊடாக மக்களுக்கு சேவை செய்ய ஒன்றிணையுங்கள் என தமது பிள்ளைகளான அனுரா மற்றும் சந்திரிகா ஆகியோருக்கு முன்னாள் பிரதமர் சிறிமாவே அழைப்பு விடுப்பு.

**11.12.1991**

* வெறுங்கையுடன் நான் யாழ்ப் பாணம் செல்வதில் பயன் இல்லை. ஜனாதிபதியினதும் எதிர்க்கட்சிகளினதும் கருத்துக்களை அறிந்துகொண்டுதான் விடுதலைப் புலிகளைச் சந்திப்பது பொருத்தமாய் இருக்கும் என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.
* சோவித் யூனியன் என்ற அமைப்பு செத்துவிட்டதாக உக்ரைன் உட்பட மூன்று மாநிலக் குடியரசுகளின் ஜனாதிபதிகள் தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

**12.12.1991**

* வடபகுதி மக்களின் கஷ்டங்கள், துன்ப துயரங்களை நேரில் கண்டறிய தென்னிலங்கையில் இருந்து நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு தூதுக்குழுவொன்று நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரிவிப்பு.
* நமது தாயகத்தை - நாட்டைக் காக்க வீட்டுக்கொருவர் போராடப் புறப்பட வேண்டும் என விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் அழைப்பு விடுப்பு.

**13.12.1991**

* எனக்கெனத் தோண்டிய குழியில் சதிகாரர்கள் தாமே விழுந்துள்ளனர். அவர்களது பாவத்துக்கு இப்போது நாம் விலை கொடுக்கவேண்டியுள்ளது என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.
* ஈழத் தமிழ்ப் போராளிக்குழு ஒன்றின் தலைவரான வரதராஜப் பெருமாளுக்கு பூரண பாதுகாப்பை வழங்கிக் கொண்டு ஈழப் போராளிகளுக்கு எதிராக இந்திய அரசு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை எவ்வாறு அமுல்படுத்த முடியும் என தி.மு.க.தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளதாகத் தெரிவிப்பு.

**14.12.1991**

* மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சில தமிழ்ப் பகுதிகளில் உள்ள தமிழர்களின் வீடுகள் மற்றும் விவசாய நிலங்களை ஏனைய இனத்தவர்கள் உடமையாக்கி வருவதாகத் தெரிவிப்பு.
* வட பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்தினால் தடை விதிக்கப்பட்ட 47 வகையான பொருள்களில் 8 பொருள்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகைச் செய்தி தெரிவிப்பு.

**15.12.1991**

* யாழ்.மாவட்ட சுயேட்சைக்குழு எம்.பி.க்களாக நியமிக்கப்பட்ட ஆறு பேர் இன்னும் பத்து நாள்களுக்குள் பதவியேற்காவிட்டால் தமது பதவிகளை இழந்தவர்களாகி விடுவர் என சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவிப்பு.
* அடுத்த ஆண்டு முடிவதற்குள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைதிச் சூழ்நிலையை உருவாக்க முடியும் என்று அரசு நம்புகிறது என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

# ஒழுக்காற்றுக் குழு முன் ஆஜராகுமாறு பாலிதவுக்கு ஐ.தே.கட்சி உத்தரவு

கொழும்பு, ஜூன் 08

கடந்த பொதுத் தேர்தலின்போது ஐ.தே.கட்சியின் எம்.பி. பாலித ரங்கே பண்டார தாக்கப்பட்டமை தொடர்பாக அவரிடமிருந்து முறைப்பாடு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக கட்சியின் ஒழுக்காற்றுக் குழு முன் ஆஜராகுமாறு அவருக்கு கட்சி உத்தரவிட்டுள்ளது.

இந்த மாதம் 12 ஆம் திகதி ஒழுக்காற்றுக் குழு முன்னிலையில் ஆஜராகுமாறு தமக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று பாலித ரங்கேபண்டார நேற்று கூறினார்.

தாம் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தமை தொடர்பாக அவர் கட்சியிடம் முறைப்பாடு செய்திருந்தார். ஆனால், கட்சி இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாலித கட்சி மீது குற்றஞ்சாட்டியிருந்தார்.

அத்தோடு அவர் இனி கட்சியின் நிகழ்வுகளில் கலந்துகொள்ளமாட்டார் என்றும் கட்சியில் இருந்து விலகப்போகிறார் என்றும் செய்திகள் வந்துகொண்டிருந்தன.

தம் மீதான தாக்குதலை மேற்கொண்டவர் தமது கட்சியைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர் சாந்த அபயசேகர என்று பாலித கூறியிருந்தார்.

சாந்த அபயசேகர மீது எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று பாலித ஐ.தே.கவின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மீது குற்றஞ்சாட்டினார்.

ஆனால், இதுதொடர்பாக ஒழுக்காற்றுக் குழு நடவடிக்கை எடுக்கும் என்று திஸ்ஸ அத்தநாயக்க கூறியிருந்தார். அதைத் தொடர்ந்து இத்தாக்குதல் தொடர்பாக விசாரிக்க ஒழுக்காற்றுக் குழு முன் ஆஜராகுமாறு பாலிதவுக்கு உத்தரவிடப்பட்டது. (ஒ-சி)

# விஸாக் கட்டுப்பாடுகளை நீக்குமாறு இந்தோனேஷியாவிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 08

இந்தோனேஷிய அரசு விதித்திருக்கும் இலங்கைக்கான விஸா கட்டுப்பாடுகளை நீக்கவேண்டும் என்று இலங்கை அரசால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷிய சுற்றுலாத்துறை அமைச்சரை நேற்று ஜகார்த்தாவில் சந்தித்துப் பேசிய அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் மேஜர் ஜெனரல் நந்தா மல்லவாராச்சி இலங்கை அரசின் சார்பில் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவு மேலும் பலமடையவேண்டும் என்றால் இலங்கைக்கான விஸா கட்டுப்பாடு நீக்கப்பட வேண்டும் என்று மல்லவாராச்சி தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தோனேஷிய தூதுவர் ஜவ்பர் ஹுஸைன் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர் என்று இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஒ-சி)

# சமயத் தலைவர்களுக்கான காப்புறுதித் திட்டம் விரைவில்

## மத விவகார அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஜூன், 08

சமயத் தலைவர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு புத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

விபத்துகள் மற்றும் நோய்கள் காரண மாக பாதிக்கப்படும் பிக்குகளுக்கும் ஏனைய சமயத் தலைவர்களுக்கும், உதவும் வகையில் இந்தக் காப்புறுதித்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மதவிவகாரங்களுக்கான நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது என்று புத்த சாசன மற்றும் மதவிவகார பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்த்தன தெரிவித்தார்.

இந்த நிதியங்களில் உள்ள பணங்களைக் கொண்டு சமயத் தலைவர்களுக்கு காப்புறுதி வசதிகள் செய்து கொடுக்கப் படும்.

மேலும், மதவிவகாரங்களுக்கான நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிதியத்தில் உள்ள பணங்களைக் கொண்டு சமயத் தலைவர்களுக்கான காப்புறுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

நான்கு சமயங்களையும் சேர்ந்த வணக்க ஸ்தலங்களைப் புனரமைப்பதற்கான உதவிகள் வழங்கப்படும் என பிரதமர் டி.எம். ஜெயரத்ன உறுதியளித்துள்ளார்.

இதற்கான நிதியம் மதவிவகார நிதியத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது என்றும் பிரதியமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்த்தன தெரிவித்தார். (சி)

# பிரிட்டன் வாழ் இலங்கைத் தமிழரில் அதிகமானோர் தாயகத்துக்கு விஜயம்

## தூதரக வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஜூன் 08

அதிகளவான பிரிட்டன் வாழ் இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர் என தூதரக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்று தசாப்த கால யுத்தத்தின் பின்னர் பிரிட்டன் கடவுச்சீட்டுடைய இலங்கைத் தமிழர்கள் அதிகளவில் தற்போது இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர் என பிரிட்டனுக்கான இலங்கைப் பிரதித் தூதர் பீ.எம். அம்ஸா தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் 30 விசாக்கள் என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கு விசா வழங்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகளவான தமிழர்கள் இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர் எனவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசாரங்கள் பொய்ப்பிக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# எதிர்வரும் நாள்களில் இடியுடன் கூடிய மழை

## வானிலை நிலையம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன், 08

நாட்டில் பல பகுதிகளில் எதிர்வரும் காலப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை வீழ்ச்சி காணப்படும் என்று வளிமண்டலவியல் அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரபிக் கடலில் ஏற்பட்ட சூறாவளியின் விளைவாக இலங்கைக்கு அருகில் காற்றமுத்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் நாள்களில் இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி பெய்யும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக சபரகமுவ, மத்திய - தென் மற்றும் மேல் மாகாணங்களில் காற்றுடன் கூடிய மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகளில் இடையிடையே இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்னல் ஏற்படும் அபாயம் இருப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.மின்னல் ஏற்படும் அபாயம் இருப்பதால் பொதுமக்களை பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூந்தலைப்பற்றி அக்கறைகொள்ளும் உங்களுக்கு சருமத்திற்கு பராமரிப்பு

இயற்கையான அழகு சாதன பராமரிப்பிற்காக அனேகமானோர் மிக ஆர்வம் காட்டி வருகின்றனர். **ReeBonn** உம் அப்படிப்பட்ட ஒரு இயற்கை அழகு சாதன உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நிறுவனம் ஆகும். **ReeBonn** உற்பத்திகளில் இயற்கை மூலிகை சாறு அடங்கியுள்ளதால் உங்களுக்கு எவ்வித பின்விளை வுகளுமின்றி தைரியமாக பாவிக்க முடியும. **ReeBonn** உற்பததிகள் இப்போது நவீன தொழிநுட்ப உபகரணங்களை கொண்டு அவர்களுக்கெ சொந்தமான தொழிற் சாலையில் உற்பத்தி செய்கின்றமையால், **ReeBonn** உற்பத்திகளின் தரத்திலும் அதன் பண்பிலும் உங்களால் மிகுந்த நம்பிக்கை வைக்கமுடியும்.

இன்று நாங்கள், உங்களுக்கு **ReeBonn Leave-on Silicone Conditioner** மற்றும் **ReeBonn Herbal Body Lotion** உற்பத்திகளை குறித்து தெளிவுபடுத்த சிந்தித்துள்ளோம.

**ReeBonn Leave-on Silicone Conditioner**

மிருதுவான கூந்தலை பெற்றுக்கொள்வதற்காக பெண்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றனர். அனேகமானோர் சக மனிதர்களுடன் பழகும் போது கூந்தலின் சீரற்ற, வறண்ட தன்மையின் காரணமாக தங்களைக் குறித்து தாங்களே தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகின்றனர். **Vitamin E** அடங்கிய **ReeBonn Silicone Conditioner** பாவிப்பதன் மூலம் கூந்தலில் காணப்படக்கூடிய சீரற்ற, வறண்ட தன்மையை இல்லாதொழித்து மிருதுவான, பளபளப்பான அழகிய கூந்தலை பெற்றுக்கொள்ளாம்.

மேலும் சந்தையில் காணப்படுகின்ற பல விதமான கூந்தல் பராமரிப்பு உற்பத் திகளை பாவிப்பதன் மூலம் பொடுகுத்தொல்லை, கூந்தல் உதிர்வு போன்ற பிரச சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு. இதிலிருந்து பாதுகாக்க **Ree Bonn Silicone Conditioner**ஐ பாவிப்பதன் மூலம் ஆண், பெண இரு பாலாருக்கும் எந்தவித பாதிப்புமின்றி அழகிய பளபளப்பான, மிருதுவான கூந்தலை பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பர வரணம்

**ReeBonn Leave-on Silicone Conditioner**

பாவிப்பதனால்......

1.மிருதுவான, பளபளப்பான மற்றும் மனங்கவர் அழகிய கூந்தலை பெற்றுத் தரும்.
2.கூந்தலில் ஏற்படும் சிக்கலை சீராக்கி, உங்கள் கூந்தலை வாருவதற்கு இலகுவாயிருக்கும்.
3.கூந்தலை பாதிக்கக்கூடிய சூரியக்கதிர் (**UV**) தாக்கத்திலிருந்து கூந்தலை பாதுகாக்கும்.
4.கூந்தலைச்சுற்றி பாதுகாப்பான கவசத்தைப்போன்று **ReeBonn Silicone Conditioner** தொழிற்படுவதால், பலவீனமான கூந்தலுக்கு நல்ல பாதுகாப்பும் போஷாக்கி னையும் அளிக்கிறது.
5.கூந்தலின் இயற்கையான நிறத்தை வெளிக்காட்டும். (**Enhances the Natural Colour**)
6.தலை மயிர் நுனி உடைவதை தடுத்து, வறண்ட தன்மையுடைய (**Dry & Damage**) கூந்தலை ஆரோக்கியமாக மாற்றும்.
7.இதில் அடங்கியுள்ள **Vitamin E** யின் மூலம் கூந்தலுக்கு போஷாக்கும் சக்தியும் கிடைக்கிறது.

பாவிக்கும் முறை:

**ReeBonn Leave-on Silicone Conditioner** சில துளிகளை உங்கள் கையில் இட்டு, இரு உள்ளங்கைகளிலும் பூசி, ஒருங்கே நன்கு கூந்தலைச்சாரும் வகையில் கூந்தலில் பூசவும். அதன் பின்னர் நீங்கள் விரும்பியவண்ணம் உங்கள கூந்தலை வாரிக் கொள்ளலாம்.

**ReeBonn Silicone Conditioner** இப்போது **100ml** மற்றும் அலுவலகத்திற்கு எடுத்துச்செல்ல கூடியவகையில் **25ml** களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**ReeBonn Herbal Body Lotion**

இப்போது நாங்கள் **ReeBonn Herbal Body Lotion** ஐ பற்றி கவனிப்போம்.

காலநிலை மாற்றங்களாலும், குளிரூட்டிய சூழலில் தொழில்புரிகின்றமை யாலும், அன்றாடம் வீட்டுவேலை செய்யும்போதும், சருமத்தில் உள்ள ஈரலிப் புததன்மை சூழலுக்கு உறிஞ்சப்பட்டு சருமம் வறண்டு போகிறது. இந்நிலையில் சூரிய ஒளி, சூழலில உள்ள விஷக்கிறுமிகள் மற்றும் சருமம் வறட்ச்சியில் இருந்தும் பாதுகாக்க, **ReeBonn Herbal Body Lotion** சிறந்ததாகும்.

**ReeBonn** அறிமுகப்படுத்தியுள்ள 5 வகையான **Herbal Body Lotion** களாவன:

1.ReeBonn Herbal Papaya Body Lotion (for Fair & Glowing)
2.ReeBonn Herbal Carrot Body Lotion (for Soft & Fair skin)
3.ReeBonn Herbal Avocado Body Lotion (for Moisturizing & Glowing skin)
4.ReeBonn Herbal Almond & Rose Body Lotion (for Soft & Smooth skin)
5.ReeBonn Herbal Cocoa Butter Body Lotion (for Soft & Supple skin)

**ReeBonn Herbal Body Lotion** பாவிப்பதனால்.............

1.சருமத்திற்கு போஷாக்கு, ஈரலிப்பு மற்றும் பாதுகாப்பு தந்து உங்கள் மேனியை பட்டு போன்று மென்மையாகவும், பொலிவாகவும் வைத்திருக்கும.
2.சூரிய ஒளி மற்றும் சூழலில் உள்ள விஷக்கிறுமிகளில் இருந்து மேனியை பாதுகாக்கிறது.
3.சருமத்தை நாளுக்கு நாள் வெண்மையாக்கும்.
4.சருமத்தில் ஏற்படும் சுருக்கம் மற்றும் வறண்ட தன்மையை அகற்றி வெண்மையான, நோயற்ற சருமத்தை உருவாக்கும்.
5.இயற்கை சாறினால் தயாரிக்கப்பட்டமையால், சருமத்திற்கு இயற்கையான போஷாக்கினை வழங்குகிறது.

**ReeBonn Herbal Body Lotion** தினமும் பாவித்து சிறந்த பலனை அடையுங்கள்.

**ReeBonn Herbal Body Lotion** இப்போது 120அட மற்றும் அலுவலகத்திற்கு எடுத்துச்செல்ல கூடியவகையில் **60ml** களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

100மி.ல. ReeBonn Silicone Conditioner ஐ கொள்வனவு செய்து, ரூ.பா 80 பெறுமதியுள்ள ReeBonn Herbal Body Lotion ஒன்றை இலவசமாக பெற்றுகொள்ளுங்கள்.



# எயார்டெல் மூலமாக தற்போது கிழக்கிலும் வணக்கம் சொல்ல முடிகின்றது

திருகோணமலை, அம்பாறை, கல்முனை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலே சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதனை பெருமிதத்துடன் அறிவித்துள்ளது.

★தற்போது 70% இற்கும் அதிகமான சனத்தொகையினை உள்ளடக்குகின்றது.

★ 4 பிரத்தியேகமான எயார்டெல் நிலையங்களுக்கு மேலதிகமாக 2,000 விற்பனைத் தொடர்பாடல் அமைவிடங்கள் மூலமாகவும் கிடைக்கப் பெறுகின்றது.

★கிழக்கிலுள்ள வாடிக்கையாளர்களுக்கெனப் பிரத்தியேகமான வெகுமதிகளை வழங்கி ஆர்வத்தினை ஏற்படுத்தியுள்ளது.

யூன் 2,2010, கொழும்பு ஆசியாவின் மிகப் பாரிய உள்ளிணைக்கப்பட்ட சேவை வழங்குநர்களுள் ஒன்றான பார்தி எயார்டெல்லின் ஒரு துணை நிறுவனமான பார்தி எயார்டெல் லங்கா ஆனது இலங்கையின் கிழக்கு மாகாணத்திலே தனது வருகையினை பெருமிதத்துடன் இன்று அறிவித்துள்ளது. இதன் மூலமாக எயார்டெல் ஆனது தனது சேவைகளை அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டகளுக்கு விஸ்தரிப்பதுடன் தற்போது நாடளாவிய ரீதியிலே 70% இற்கும் மேற்பட்ட சனத்தொகையினை உள்ளடக்கிகுன்றது.

கிழக்கிலே சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பாக கருத்துரைத்த பார்தி எயார்டெல் லங்காவினது பிரதம நிறைவேற்று அதிகாரியான அமாலி நாணயக்கார அவர்கள், ''கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களுக்கு சேவையளித்து அதனது வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குவதற்கு கிடைக்கப்பெற்ற இந்த வாய்ப்பினையிட்டு நாம் மிகவும் பூரிப்படைந்துள்ளோம். எயார் டெல்லானது இச் சந்தையிலே மக்களுக்கு இயலக்கூடிய நியாயமான முறையிலே சேவைகளை வழங்குவதற்காக உண்மையான, அர்ப்பணத்துடனனான முயற்சிகளை முன்னெடுத்து தெற்காசியாவிலே அண்ணளவாக 140 மில்லியன் வாடிக்கையாளர்கள் தற்போது அனுபவித்து வருகின்ற எமது சேவையின் பயன்களை இன்னும் அதிகமான இலங்கை மக்கள் அனுபவிக்கும் வகையிலே அவர்களை ஆளுமைப்படுத்துவதற்கு முயற்சிப்போம். எமக்குப் பின்னாலுள்ள அனுபவம், நிபுணத்துவம் ஆகியவற்றின் துணையுடன் அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்தின் புதியதொரு சகாப்தத்தினுள் எழுச்சிபெற்றுள்ள கிழக்கிலே சிறந்த ஒரு பெறுபேற்று விளைவினை ஏற்படுத்துவோம் என்பது எமது உறுதியான நம்பிக்கை''.

தனது சேவைகளை ஆரம்பிப்பதனை அறிவிக்கும் வகையிலே கிழக்கு மாகாணத்திலுள்ள வாடிக்கயைாளர்களை பூரிப்படையச் செய்வதற்காக அவர்களுக்கு மட்டும் பிரத்தியேகமான புத்தாக்கமான உற்பத்திகள் மற்றும் சேவைகள் மற்றும் கவர்ச்சியான உள்ளூர் மற்றும் சர்வதேச அழைப்புக் கட்டணங்கள் அடங்கிய தெரிவுகளை எயார்டெல் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் தெரிவுகளிலே தமிழிலே கீபோர்ட் (Keypad) இனை வழங்கும் வண்ணம் நொக்கியாவுடன் (Nokia) இணைந்து வழங்கும் ஒரு கவர்ச்சியான கையுபகரணப் பொதிச் சலுகை, இலவச உரையாடல் நேரம், குறுஞ் செய்திச் சேவை (SMS) மற்றும் 1GB வரையிலான தரவிறக்கங்கள் போன்றன உள்ளடங்குகின்றன. கிழக்கிலுள்ள வாடிக்கையாளர்கள் இலவசப் பிரார்த் தனைகளை மற்றும் பிரார்த்தனைச் செய்தி அறிவிப்புக்கள், இலவச வரவேற்புத் தொனிகள், தெய்வீகம் சார்ந்த உள்ளடக்கங்கள் மற்றும் தென்னிந்தியப் பொழுதுபோக்கு உள்ளடக்கங்கள் போன்ற பல்வேறு வகைப்பட்ட பெறு மதிசேர் சேவைகளையும் அனுபவிக்க முடிகின்றது. அதற்கு மேலதிகமாக இந்தியா மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் அழைப்புகளுக்குச் சந்தையிலும் பார்க்க 40% வரையிலான கட்டணக் கழிவுகளையும் வழங்குகின்றது.

பார்தி எயார்டெல்லானது கிழக்கிற்கு விஸ்தரிக்கப்படுகின்ற அறிவிப்பானது இலங்கையின் முழுச் சனத்தொகையினையும் உள்ளடக்க வேண்டும் என்ற அதனது நோக்கில் மற்றுமொரு முக்கியமான நிகழ்வினைப் பூர்த்திசெய்துள்ளது. 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலிடுவது என்ற அதனது உத்தரவாதமானது நாட்டிலே வேறுஎந்த மொலைல் தொழிற்பாட்டாளரை விடவும் தனித்துவமாக அமைந்து மிகவிரைவாக வலையமைப்பினை விஸ்தரித்துச் செயற்படுத்துவற்கு அனுசரணையளித்துள்ளதுடன் அனைத்து இலங்கையர்களும் உலகத்தரம் வாய்ந்த மொபைல் சேவைகளை நியாயமான கட்டணங்களுடன் அனுபவிக்கும் வகையிலே வழங்க வேண்டும் என்ற நிறுவனத்தினது உறுதிமொழியினையும் நிறைவேற்ற உதவியுள்ளது.

## பார்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்டினைப் பற்றி

பார்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்டானது தனது சேவைகளின் வர்த்தகத் தொழிற்பாடுகளை 2009 ஜனவரி 12 அன்று ஆரம்பித்ததுடன் தற்போது மொத்தமாக 1 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு தொலைத் தொடர்பாடல்கள் சட்ட இல.25 இற்கு அமைவாக 2007ஆம் ஆண்டிலே தனது அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டதுடன், இலங்கை முதலீட்டுச் சபையின் கீழே பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாகவும் திகழ்கின்றது. தனது அனுமதிப்பத்திரத்தின் கீழே நிறுவனமானது குரல் தொலைபேசி (Voice Telephony), குரல் அஞ்சல் (Voice Mail), தரவுச் சேவைகள் (Data Services) மற்றும் GSM அடிப்படையிலான சேவைகள் உள்ளடங்கலாக டிஜிற்றல் மொபைல் சேவைகளை வழங்கிவருகின்றது. இந்த அனைத்துச் சேவைகளும் எயார்டெல் வர்த்தக நாமத்தின் கீழே வழங்கப்படுகின்றன.

**மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து கீழுள்ள எவரையும் தொடர்புகொள்ளுங்கள்.**

| | | |
|---|---|---|
| திரு.யொஷான் முனவீர | சமந்தா மென்டிஸ் | தனுஷ்கா ஜெயவர்த்தன |
| வர்த்தகத் தொடர்பாடல்கள் தலைவர். | சிரேஷ்ட உதவி முகாமையாளர் | வெகுசன தொடர்பு இணைப்பாளர் |
| பார்தி எயார்டெல் லங்கா | GPR தொடர்பாடல்கள் ஆலோசனை நிறுவனம் | GPR தொடர்பாடல்கள் ஆலோசனை நிறுவனம் |
| 0755841289 | 0773405154 | 0777334738 |
| johann.munaweera@airtel.lk | samantha@gpr.lk | dhanushka@gpr.lk |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பகுதிக்கு மீண்டும் சென்று வசிப்பதற்கு குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் ஆர்வம்

கிளிநொச்சி,ஜூன்8

தற்போது வன்னிப் பிரதேசத்தில் மக்கள் குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, குடாநாட்டில் மீளக்குடியேறிய வன்னியைச் சேர்ந்த குடும்பங்கள் மீண்டும் வன்னிக்குச் சென்று குடியேறுவதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரியவருகின்றது.

வன்னியில் இடம்பெற்ற போர் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் தஞ்சமடைந்த மக்கள் அங்கிருந்து விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டிலுள்ள உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தற்காலிக குடிசைகள் அமைத்தும் வாழ்ந்து வருகின்றார்கள்.

தற்போது வன்னிப் பிரதேசத்தில் மீள் குடியேற்றம் துரிதமாக இடம்பெற்று வருவதனால் இவர்கள் தாமும் தமது பழைய இடங்களுக்குச் செல்வதற்குரிய ஆவணங்களைப் பெறுவதற்காக தமது பகுதிக் கிராம உத்தியோகத்தர்களின் உதவியை நாடியுள்ளனர்.

இவர்களில் அநேகர் தொழில் வசதிகள் எதுவுமின்றி மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-115)

## கிளிநொச்சி ம.வியின் விளையாட்டு விழா

கிளிநொச்சி,ஜூன் 8

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின். வருடாந்த விளையாட்டு விழா நாளைமறுதினம் வியாழக்கிழமை பாடசாலையின் அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்சில் ஆர்வலர்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு பாடசாலைச் சமூகத்தினர் கேட்டுள்ளனர். (50-405)

## வட்டக்கச்சி, இராமநாதபுரம் சந்தைகள் இதுவரை இயங்காமையால் மக்கள் அவதி

கிளிநொச்சி,ஜூன்8

வட்டக்கச்சி, இராமநாதபுரம் மக்கள் கடந்த ஏப்ரல் மாதம் மீள்குடியேற்றப்பட்டபோதிலும் வட்டக்கச்சிப் பொதுச் சந்தை, இராமநாதபுரம் சந்தை என்பன இதுவரை இயங்கவில்லை. இதனால் மக்கள் பொருள் களைப் பெறுவதில் தமது உற்பத்திகளான தேங்காய் போன்றவற்றை சந்தைப்படுத்துவதில் இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மீள்குடியேற்றம் இடம்பெற்று இரு மாதங்களாகியும் இச்சந்தைப் பகுதிகள் துப்புரவு செய்யப்படக்கூட இல்லை. வட்டக்கச்சி சந்தைப் பகுதி கட்டட இடிபாடுகளுடன் காட்சி தருகின்றது. இதனால் கிளிநொச்சிச் சந்தை, அம்பாள்குளம் பகுதிக்கு மாற்றப்பட்டது போல் இச்சந்தைகளும் வேறு இடங்களுக்கு மாற்றப்படுமோ என மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக சந்தைகளை ஆரம்பித்து மக்களுக்கான தேவைகளை நிறைவேற்ற முன்வரவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (50-405)

## கல்மடுநகர் உப தபாலகம் இதுவரை இயங்கவில்லை

கிளிநொச்சி, ஜூன் 8

கடந்த மே மாதம் கல்மடுநகர் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் கல்மடு உபதபாலகம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் இப்பகுதி மக்களுக்கான தபால் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாதாந்த உதவிப்பணம் பெறுவோரும், பணம் பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவில் உபதபால் நிலையத்தினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.(50-405)

## 'நேர்ப்' திட்டப் பயனாளிகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி,ஜூன்8

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான 'நேர்ப்' வீட்டுத் திட்ட விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 3ஆம் திகதி கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலையில் வைத்து இவ்விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் திட்ட இணைப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டு திட்டம் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளித்தார்கள்.

அடுத்த வாரம் பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று வீட்டு அழிவு தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு விண்ணப்பத்தின் அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனக் கூறப்படுகின்றது. (50-405)

## கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு விஜயம்

கிளிநொச்சி, ஜூன் 8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் கடந்த 4ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியின் நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர்.

நண்பகல் 12 மணியளவில் வருகை தந்த இவர்கள் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடி நிலைமைகளை நேரில் கண்டறிந்தனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி தற்போது ரி.ஆர்.ரெக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதன் ஆரம்பப்பிரிவு கடந்த 2ஆம் திகதி தொடக்கம் சொந்த வளாகத்தில் தற்காலிகக் கொட்டகைகளில் இயங்கி வருகின்றது. இவ்விரு இடங்களையும் பார்வையிட்ட அவர்கள் நிலைமைகளை சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்துவதாக கூறினார்கள்.

கடந்த மாதம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது சிவஞானம் சிறிதரன், இடைத்தங்கல் முகமாக பயன்படுத்தப்படும் கல்லூரியை மீண்டும் கல்லூரி நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும் என உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-405)

## முன்பள்ளி மீண்டும் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூன் 8

கல்மடுநகர் சுதாங்கனி முன்பள்ளி கடந்த 31 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

எனினும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனம் மற்றும் முன்பள்ளி வசதிகள் என்பவற்றை வழங்க எந்த நிறுவனமும் முன்வரவில்லை. எனவே இது தொடர்பாக தொடர்புடையவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என முன்பள்ளியின் பெற்றோர் கேட்டுக் கொள்கின்றனர். (50-405)

## வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதி மக்கள் நாளை சொந்த இடங்களில் மீளக்குடியமர்வு

கிளிநொச்சி,ஜூன்8

செட்டிகுளம் மெனிக்பாம் முகாம்களில் உள்ள வடக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நாளை புதன்கிழமையும் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்கிழமையும் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

சிவிக்சென்ரர், வட்டக்கச்சி, மாயவனூர், மாவடி, இராமநாதபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர். இவர்களின் மீள்குடியேற்றத்திற்கான இடைத்தங்கல் முகாமான இராமபுரம் ம.வி பயன்படுத்தப்பவுள்ளது. இதுவரை காலமும் கிளிநொச்சி பிரதேச மக்கள் மீள்குடியமர்விற்கான இடைத்தங்கல் முகாமாக கிளிநொச்சி மத்திய கல்லூரி பயன்படுத்தப்பட்டு வந்தது.

மேற்படி கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களின் மீள்குடியேற்றப் பதிவுகள் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாகவும், இவ்வாறானவர்கள் தாங்கள் தற்போது வதியும் கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து தமது பதிவுகளை நீக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் ஆவணத்தினைக் கொண்டு வருதல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-405)




## கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் காணி விசாரணைக் கூட்டங்கள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 8

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களின் காணி விசாரணைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி பின்வரும் ஒழுங்கில் இக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை - ஊரியான் கிராம அலுவலர் பிரிவு

எதிர்வரும் 10ஆம் திகதி - முரசுமோட்டை கிராம அலுவலர் பிரிவு

11ஆம் திகதி - கண்டாவளை கிராம அலுவலர் பிரிவு

15ஆம் திகதி - புளியம்பொக்கணை கிராம அலுவலர் பிரிவு

17ஆம் திகதி - கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவு

அத்துடன் கடந்த முதலாம் திகதி உமையாள்புரத்திலும் கடந்த 3ஆம் திகதி குமரபுரத்திலும் கடந்த 4ஆம் திகதி கோரக்கன்கட்டிலும் இக்கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இக்கூட்டங்களுக்கு வருகை தரும் பொதுமக்கள் குடும்ப பங்கீட்டு அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் காணி தொடர்பான ஆவணங்களின் மூலப் பிரதிகளும் போட்டோப் பிரதிகளையும் கொண்டுவருமாறு கண்டாவளைப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் கேட்டுள்ளார்.

மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் காணி தொடர்பான இக்கூட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக அமையும் என மக்கள் பாராட்டுகின்றனர். (50-405)

## கல்மடு நகர் மக்களுக்குக் கொடுப்பனவு

கிளிநொச்சி,ஜூன் 8

கல்மடுநகர் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த மே 8ஆம் திகதி மீள்குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவு கடந்த 3ஆம் திகதியும் மே 15ஆம் திகதி மீள்குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவு கடந்த 4ஆம் திகதியும் கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இவர்கள் மீள்குடியமரும்போது 5ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தற்போது 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

எனினும் முகாமிற்கு வெளியில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்து மீள்குடியமர்ந்த மக்களுக்கு 5ஆயிரம் ரூபா வழங்கப்பட்டபோதிலும் இதுவரை 20ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை. இவர்களுக்கு இக்கொடுப்பனவினை விரைவாகப் பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் முயலவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.(50-405)

## கிளி/ம.வியில் சித்திரக் கண்காட்சி

கிளிநொச்சி,ஜூன் 8.

கிளிநொச்சி மகாவித்தியாலய சித்திரம் கற்கும் மாணவர்களதும் கற்பிக்கும் ஆசிரியர்களதும் ஆக்கங்கள் அடங்கிய சித்திரக் கண்காட்சி கடந்த 3ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4மணிவரை நடைபெற்றது.

பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி பு.குமார் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கலாசார உத்தியோகத்தர் செ.விந்தன் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இக்காண்காட்சி ஆசிரியர்களான இ.வித்தியானந்தன், செ.தெய்வேந்திரமூர்த்தி ஆகியோரின் நெறிப்படுத்தலில் ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெற்றது. இக்கண்காட்சியை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆர்வலர்கள் எனப் பெருமளவானோர் மாலை வரை கண்டுகளித்தனர்.

இக்கண்காட்சியில் வைக்கப்பட்ட ஆங்கங்களில் வகுப்பு ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆங்கங்கள் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. (50-405)

## 'போலி முகங்கள்' நூல் வெளியீடு

மன்னார்,ஜூன் 8

கவிஞர் வி.எஸ்.சிவகரன் எழுதிய 'போலி முகங்கள்' நூல்வெளியீட்டு விழா எதிர்வரும் 12ஆம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் அனுசரணையில் அதன் தலைவர் தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு முதன்மை அதிதியாக மன்னார் ஆயர் கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகையும் சிறப்பு அதிதியாக மன்னார் அரசாங்க அதிபர் அ.நீக்கொலஸ்பிள்ளையும் கலந்துகொள்வர்.

அறிமுக உரையை மடு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியான் நிகழ்த்துவார்.

போலி முகங்கள் முதற்பிரதியை சேவாலங்கா வடமாகாணப் பணிப்பாளர் தமிழழகன் பெறுவார்.

கலாபவன நாட்டியக் கல்லூரி மாணவர்களின் சிறப்பு நடனமும் இடம்பெறவுள்ளது.

(50-80)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி தேவை

சுண்டுக்குழிக்கு அண்மையில் 3 பரப்புக்காணி உடன் தேவை.

தொடர்பு: 0774601072 (99230)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

கொழும்பைத் தளமாகக் கொண்ட பிரபல Electrical Equipments விற்பனை செய்யும் நிறுவன மொன்றிற்கு, யாழ்ப்பாணத்தில் கடமைபுரிய விற்பனைப் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர். தொழில்நுட்பத் தகைமை உடையவர்களுக்கும் முன் அனுபவம் உடையவர்களுக்கும் முன் உரிமை வழங்கப்படும். கீழ்வரும் முகவரியில் சுயவிவரக் கோவையுடன் 10.06.2010 வியாழக்கிழமை காலை 9-11 மணிக்குள் சமுகமளிக்கவும்.

இல.33, ஆசிர்வாதம் வீதி,
கிறீன் கிறாஸ் ஹொட்டல்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 3688032 (99240)

## யாழ்ப்பாணத்தில் அழகுக்கலையில் பயிற்சிபெற அரியதோர் சந்தர்ப்பம்

**"PEO BEAUTY LADY LINE"**
*645A, Hospital Road, Jaffna.*

* முக அலங்காரம் (Facial)
* மணப்பெண் அலங்காரம் (Bridal make up)
* தலைமுடி சுருட்டுதல், நீட்டுதல் (Hair perming & Straitening)
* கை, கால் அழகுபடுத்தல் (Menicure & Pedicure)

ஆகிய கலைகளுக்கு இலங்கையில் பிரபல அழகுக் கலை நிபுணர் திருமதி மாலினி ராஜபக்ஷ அவர்களால் 10 நாள்கள் பயிற்சியளிக்கப்படும்.

பயிற்சிக்காலம்: 10.06.2010 - 19.06.2010
கட்டணம் - முழுப் பயிற்சிகளுக்கும் ரூபா 5000.00
தற்போது பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
*குறிப்பு:* இப் பயிற்சிக்காலத்தில் முக ஒப்பனை செய்பவர்களுக்கு 10% கழிவு

தொடர்பு: 021 321 0204, 021 227 0018 (99236)

## முடிவில்லாத் துயரலையின் நினைவலைகள்

இரண்டாம் ஆண்டு — முதலாம் ஆண்டு



அமரர் நா.வேலன் (சின்னப்பு)
தோற்றம் 28.06.1927 — மறைவு 21.08.2008

திருமதி வேலன் மகேஸ்வரி
தோற்றம் 04.07.1945 — மறைவு 20.05.2009

கண்ணீரால் ஓராண்டு கரைந்து மறைந்ததுவே!
வாயில் கடந்து எப்படி நீங்கள் இருவரும் போனீர்கள்.
பிள்ளைகள் வயிறு பற்றிஎரிவதுதான் தெரியாதோ
இயற்கையின் நியதியிலே எமையெல்லாம் தவிக்கவிட்டு
இறைவனின் பாதங்களை சென்றடைந்த எம் செல்வங்களே!
அகலுமா உங்கள் நினைவின் பாரம்.
மறையுமா உங்கள் பிரிவின் சோகம்,
விட்டகண்ணீர் காயவில்லை - இனி விழிகளிலோ நீரும் இல்லை.
உத்தமமான உங்கள் நினைவு உள்ளம் விட்டு அகலவில்லை
என்னதான் செய்திடினும் எம் சோகம் மாறவில்லை.
கண்ணீரில் வாழ்வதனால் கடல்நீரும் காரமில்லை.
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உம்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

கல்பனா ஸ்ரோஸ் & பேக்கறி, பிரதான

## அலுவலக உதவியாளர் (PEON) தேவை

யாழ்ப்பாணம் வணிகர் கழக அலுவலகத்திற்கு அலுவலக உதவியாளர் (PEON) தேவை.

விண்ணப்பங்கள் 12.06.2010ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.
இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (ஜி/563166)

## மேசன் வேலைக்கு ஆள்கள் தேவை

நீர்வேலிப் பகுதியில் வேலை செய்வதற்கு மேசன், கூலி ஆள்கள் தேவை. தகுதிக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 0569612 (99237)

## அதிர்ஷ்டலாபச்சீட்டு திகதி மாற்றம்

06.06.2010ஆம் திகதி யா/மாதகல் சென். யோசப் மகா வித்தியாலயத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 12.06.2010 சனிக்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

(99238) அதிபர்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 8

ஊர்காவற்றுறை, புளியங்கூடல், செருத்தனைப்பதி மகாமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.(50-204)

* * *

பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(50-204)

* * *

வல்வை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் 1008 சங்காபிஷேகமும் மணவாளக்கோல நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளன.

நேற்று திங்கட்கிழமை பூர்வாங்கக் கிரியைகள்நடைபெற்றன. (50-204-253)

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவு நாளை சண்டிலிப்பாயில்

நவாலி, ஜூன் 8

வன்னியில் இருந்து வந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் வழங்கப்பட்ட இருபதாயிரம் ரூபா பணத்தினைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கும் புதிதாக வந்தவர்களுக்குமான கொடுப்பனவு நாளை புதன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை அதற்கான ஆவணங்களுடன் அன்று காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (1-100)

## தவறிவிட்டது

115/03, பெரியார்குளம், பூந்தோட்டம், வவுனியாவைச் சேர்ந்த ஜெயரூபன் அஜந்தா என்பவரின் தேசிய அடையாள அட்டை (No855313626V) கொடிகாமம் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

நேரில்: CTB பஸ் நிலையத்தில் தயவுசெய்துகொடுக்கவும்
எம்.ஜி.ஆர்.திருமணசேவை
வே.புஸ்பாரியமூர்த்தி (CTBசாரதி)0770344496

## Affiliated with JOBSNET Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

ஆங்கில மூலம்

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
**Mobile: 0777 140 844 / 071 803 48 48**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி :10.06.2010**

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் சிவானந்தம்



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு, ஐயா கடையடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவானந்தம் 06.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் இராசாத்தியின் அன்புக் கணவரும் நிருபன் (UK), லசந்தன் (மலேசியா) ஆகியோரின்அன்புத் தந்தையும் டயானாவின் (UK) அன்பு மாமனும் நிறேதனின் (UK) அன்புப் பேரனும் காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் Dr.குணரட்ணம், நடராஜா (கனடா), சச்சிதானந்தம் (கனடா), சிறிதானந்தம், மகேஸ்வரி (கனடா), ஜெயானந்தம் (UK), பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, யோகம்மா மற்றும் பரமேஸ்வரி (UK), அன்னலெட்சுமி (UK), காலஞ்சென்ற Dr.குணசிங்கம் மற்றும் தவமணி (NSB கொட்டாஞ்சேனை), பொன்னம்பலம் (சட்டத்தரணி), இலங்காதேவி (கச்சேரி, யாழ்), Dr.பாலசிங்கம் (UK)ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.06.2010) புதன் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'லங்கா வாசா',*
*கண்டிவீதி, சாவகச்சேரி வடக்கு.*
*தொ.பே.: 0777 146686* (99233)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சோமாஸ்கந்தன் தவமணி



வேலணை மேற்கு, சிற்பனை முருகன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான திருமதி சோமாஸ்கந்தன் தவமணி நேற்று முன்தினம் (06.06.2010) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமாஸ்கந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லையா - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் ஸ்கந்தஸ்ரீ, ஸ்கந்தமணி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சொர்ணலிங்கம் மற்றும் திருமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பெந்த, மீனாம்பாள் ஆகியோரின் அன்பு மாமியும் சீரிபெயாத்த, தோமஸ், அனோஜன், சுஜீவினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பூம்பாவை, இராசாம்பிகை, காலஞ்சென்ற சிவசாமி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.06.2010) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 6 மணிவரை அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை புதன் கிழமை (09.06.2010) மு.ப. 10 மணியளவில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.25, ஆஸ்பத்திரி வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*
*021 222 4132* (99234)

தகவல்:
சொ.பிரதாபன்
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்தை முதல் தடவையாக கைப்பற்றியது ஸ்ரீ காமாட்சி அம்பாள் வி.கழகம்

வலி.வடக்கு, ஜூன் 8

ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்தை முதன்முறையாகக் கைப்பற்றியது ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம்.

ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவன்த்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய 19ஆவது வெற்றிக் கிண்ணச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகமும் ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரதீசன் 4பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 56 ஓட்டங்களைப் பெற்றார். ஜெயரூபன் 4 பௌண்டறிகள் 2 சிக்ஸர்களுடன் 44 ஓட் டங்களையும் நிரோஷன் 4 பௌண்டறிகள் 3 சிக்ஸர்களை விளாசி 42 ஓட்டங்களையும் அரவிந்தன் 31 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 33 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் சார்பாகப் பந்து வீசிய விமலகாந் 8 ஓவர்



கள் பந்துவீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கலிஸ்ரன் 7 ஓவர்கள் பந்து வீசி 21ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஜசிந்தன், சுபதீபன் ஆகியோர் தலா 8 ஓவர்கள் பந்து வீசி முறையே 41, 71 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

263 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக்கழகம் 36.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 187 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 75 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

கபில்தேவ் 4 பௌண்டறிகள் 2 சிக்ஸர்களுடன் 56 ஓட்டங்களையும் ரஜீவ் 5 பௌண்டறிகள் 2 சிக்ஸர்களுடன் 55 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனையோர் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். உதிரிகளாகப் 18 ஓட்டங்கள் கிடைத்தன.

ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் சார்பில் பந்துவீசிய சஞ்சீவ் 6 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஜெயரூபன் 8 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் திலீபன் 8 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகத்தின் கே.ரதீசன் தெரிவானார். தொடர்நாயகனாக ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் கே.செல்ரன் தெரிவானார். (6-86)

# ரதீசன், திவாகர் அதிரடி இணைப்பாட்டம்; யாழ்.மத்திய கல்லூரி இறுதியாட்டத்தில்!

யாழ்ப்பாணம், ஜூன் 8

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா ருவென்ரி-20 சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு ரதீசன், திவாகர் ஜோடியின் இணைப்பாட்டத்தால் யாழ்.மத்திய கல்லூரி தகுதிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி அழைக்கப்பட்ட பாடசாலைக்கு இடையே நடத்திய ருவென்ரி-20 போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஆதித்தன் அதிரடியாக ஆடி 3 பௌண்டறிகள் 7 சிக்ஸர்களுடன் 69 ஓட்டங்களையும் இராகுலன், உத்தமன் ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும் சாம்பவன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாகப் 15 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜெனோசன், யீது தலா 4ஓவர்கள் பந்து வீசி முறையே 17, 24 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

160 ஓட்டங்களில் வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 19.2 ஓவர்கள் 6 விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களை பெற்றது.

ரதீசன் 4 பௌண்டறிகள் 5 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 70 ஓட்டங்களையும் திவாகர் ஒரு பௌண்டறி 4 சிக்ஸர்களுடன் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பில் இராகுலன், சுஜிதரன் தலா 3ஓவர்கள் பந்து வீசி முறையே 28, 35 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். (6-86)

## வடமாகாண அணிக்கான வீரர்கள் தெரிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடமாகாணத் துடுப்பாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிப் போட்டி நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தத் தெரிவுப்போட்டியில் 1989ஆம், 1990ஆம், 1991ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்களே பங்குகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டியில் பங்குபற்றும் வடமாகாண அணிக்கே இவ்வீரர்கள் தெரிவு இடம்பெறவுள்ளது. (6)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# தேசிய மட்டத் தடகளப் போட்டியில் 9 யாழ்.வீரர்கள் பதக்கம் வென்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 8

தேசிய மட்ட கனிஷ்ட பிரிவு தடகளப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 9பேர் பதக்கங்களை வென்றுள்ளனர்.

கடந்த 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை டியகலவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கில் கனிஷ்ட பிரிவு தடகளப் போட்டி நடைபெற்றது.



இதில் 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டெறிதல் நிகழ்வில் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ஹரிகரன் முதலாவது இடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தையும் கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்வில் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த தே.மோகுனந் முதலாவது இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும் வென்றனர்.


20வயதுப்பிரிவு ஆண்களுக்கான தட்டெறிதல் நிகழ்வில் சென்.அன்ரனிஸ் கல்லூரியைச் சேர்ந்த பற்றிக் டிலான் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த புவனேந்திரன் பானுப்பிரியன் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதல் நிகழ்வில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த டபிள்யூ.சி. லிவிங்ரன் இரண்டாமித்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்வில் அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த அகிலன் இரண்டாவது இடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்வில் அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த அ.பவித்திரா, யாக்சனா ஆகியோர் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

23 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குண்டுபோடும் நிகழ்வில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வாகீசன் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் வென்றார்.

இப்போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து 70 வீர, வீராங்களைகள் பங்குபற்றினர். அனுசரணையை யாழ்.மாவட்ட மெய் வன்மைச் சங்கம் மேற்கொண்டிருந்தது. (6-23)




*ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பி.பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினர் வேலணைப் பிரதேச செயலர் எம்.நந்தகோபன், கௌரவ விருந்தினர்களான ஈ.எஸ்.பி.பேரம்பலம் நிறுவனத்தின் உரிமையாளர் பி.நாகரத்தினம், யாழ்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் போசகரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபருமான வி.கணேசராசாவும் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும்-வண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணித்தலைவர், திருமதி நந்தகோபனிடம் இருந்து வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக்கொள்வதை நான்காவது படத்திலும்- ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட ரதீசன், தொடர் நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட செல்ரன் ஆகியோர்களுக்கான வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படுவதை இறுதிப் படங்களிலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுடில்லிக்கு இன்று வரும் மஹிந்தவுக்கு எதிராக தமிழகத்தில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள்



சென்னை, ஜூன் 08

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகையைக் கண்டித்து தமிழகம் முழுவதும் இன்று மாபெரும் கறுப்புக்கொடி எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படுகிறது.

இந்தப் போராட்டத்துக்கு ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம், நாம் தமிழர் இயக்கம், லட்சிய தி.மு.க., புதிய தமிழகம் கட்சி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன.

இதுகுறித்து நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை ஜனாதிபதி 8 ஆம் திகதி (இன்று) இந்தியா வருகிறார். அவருக்கு இந்திய அரசு இரத்தினக் கம்பள வரவேற்பளிக்க இருக்கிறது எனும் செய்தி அதிர்ச்சியை அளிக்கிறது.

ஏறத்தாழ ஒரு லட்சத்திற்கு அதிகமான தமிழர்கள் படுகொலை செய்யப்படவும், 3 லட்சம் தமிழர்கள் முள்வேலிக்குள் சிக்கி தவிப்பதற்கும் காரணமான ஒரு நபர் எந்தவித விசாரணையுமின்றி இராஜ மரியாதையுடன் இந்தியாவிற்கு வருகிறார்.

உலகம் முழுவதும் அவர் மீது குற்றப் பட்டியல் வாசிக்கப்படுகிறது. ஆனால், இதுவரை இந்தியா எந்தவித விசாரணையையும் கோரவில்லை. குறைந்தபட்சம், கண்டத்தைக்கூடத் தெரிவிக்கவில்லை. ஏனெனில் போரை நடத்தியதே இந்தியாதான்.

எனவே, நாதியற்ற இனமல்ல நம் தமிழ் இனம் என்பதை ஊருக்கும் உலகுக்கும் எடுத்துச் சொல்லவும் மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்திக் கண்டிக்க வலியுறுத்தியும் 8 ஆம் திகதி (இன்று) தரணி எங்கும் வாழும் தமிழர்களாகிய நாம், தெருமுனைக் கூட்டங்களை நடத்துவோம். ஈழத் தமிழர் இனப்படுகொலையை உலகுக்கு அம்பலப்படுத்துவோம்.

மேலும் எனது தலைமையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் தியாகி முத்துக்குமார் உயிர் நீத்த இடத்தில் காலை 11 மணியளவில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ''ஈழத்தமிழர்களுக்குத் தாயகம் கிடையாது; தமிழ் இனம் தனித் தேசிய இனம் அல்ல. தமிழர்களின் பூர்வீகத் தாயகமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்கும் பேச்சுக்கே இடம் இல்லை'' - என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் 8 ஆம் திகதி (இன்று), பிரதமரைச் சந்தித்துப் பேச மஹிந்த ராஜபக்ஷ, புதுடில்லி வருகிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



வேதனையால் வெந்துபோன தமிழர் இதயத்தில் சூட்டுக்கோலை நுழைக்கும் வகையில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய அரசு சிவப்புக் கம்பள வரவேற்பளிக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷ வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், வரவேற்பு அளிக்கும் மத்திய அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கவும் 8 ஆம் திகதி (இன்று) சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்துக்கு எதிரே, காலை 10 மணியளவில் கறுப்புக் கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

- இப்படி வைகோ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து பழ.நெடுமாறன் வெளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சர்வதேச சமூகத்தால் போர்க்குற்றம் புரிந்தவர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய அரசு இரத்தினக் கம்பள வரவேற்பளிக்க இருப்பதை இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழர்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பை மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரிவிக்கும் வகையில் 8ஆம் திகதி (இன்று) காலை 10 மணிக்கு சென்னையில் இலங்கைத் தூதுவர் அலுவலகம் முன்பாக மாபெரும் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

அதேநாளில் அதேநேரத்தில் தமிழகமெங்கும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்.

- இப்படி அந்த அறிக்கையில் உள்ளது.



முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நேற்றுமுன்தினம் கேரளா, கொச்சியில் பிரபல கர்நாடக இசைக்கலைஞர் கே.ஜே.யேசுதாஸை சந்தித்துப் பேசியபோது.....

# புதுடில்லிக்கு வரும் மஹிந்தவை தமிழக எம்.பிக்கள் சந்திக்க ஏற்பாடு

சென்னை, ஜூன் 08

இந்தியா வரும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தமிழக எம்.பிக்கள் குழு சந்தித்துப் பேசுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவை, முதல்வர் கருணாநிதி நேற்றுமுன்தினம் புதுடில்லிக்கு அனுப்பியுள்ளார் என தி.மு.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் நலன்புரி முகாம்களில் அடைக் கப்பட்டனர்.

இந்நிலையில், இலங்கை ஜனாதிபதி இன்று (ஜூன் 8) இந்தியா வருகிறார். அப்போது, முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரையும் விடுவிக்கவும், தமிழர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளைச் செய்யுமாறும் மஹிந்த ராஜபக்ஷவை, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வற்புறுத்த வேண்டும் என்று பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக முதல்வர் கருணாநிதி பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்திலும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் இந்தியா வரும் மஹிந்த ராஜபக்ஷவை தமிழக எம்.பிக்கள் குழுவினர் நேரில் சந்திக்கவுள்ளனர். இலங்கை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்கள் அனைவரையும் விடுவிக்கவும், அவர்களுக்கான மறுவாழ்வு மற்றும் மீள்குடியமர்வுப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும் மஹிந்த ராஜபக்ஷவிடம் தமிழக எம்.பி.க்கள் குழுவினர் வலியுறுத்துவார்கள் எனத் தெரிகிறது.



இதற்காக தமிழக எம்.பிக்கள் குழுவினர் சென்னையிலிருந்து புதுடில்லி புறப்பட்டுள்ளனர்.

தமிழக எம்.பிக்கள் - மஹிந்த சந்திப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவை, முதல்வர் கருணாநிதி ஏற்கனவே புதுடில்லிக்கு அனுப்பியுள்ளார் என தி.மு.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இந்தியச் செய்திகள்

# ஜெயலலிதாவால் இனிமேல் ஆட்சிக்கு வரவே முடியாது!

## துணை முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

அ.தி.மு.க. இனிமேல் ஆட்சியைப் பிடிக்க முடியாது. ஜெயலலிதாவால் ஆட்சிக்கு வரவே முடியாது - என்று துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தஞ்சையில் நடைபெற்ற திருமண விழா ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு பேசியவை வருமாறு

சட்டமன்ற புதிய கட்டடத் திறப்பு விழாவுக்கும் ஜெயலலிதாவுக்கு அழைப்பு விடுத்தோம். ஆனாலும் அவர் அதில் கலந்து கொள்ளவில்லை. அண்மையில் ஜெயலலிதா கலந்து கொண்ட விழாவில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சட்டசபைக் கூட்டம் புதிய வளாகத்தில் நடைபெறாது. பழைய சட்டசபை வளாகத்தில்தான் நடைபெறும் என்று பேசினார். இதிலிருந்தே அவர்கள் ஆட்சிக்கு வரமுடியாது என்று தெரிகிறது - என்றார்.

# தி.மு.கவுடன் கூட்டணி குறித்து பா.ம.க. முடிவு இன்று அறிவிப்பு



சென்னை, ஜூன் 08

தி.மு.கவுடன் மீண்டும் கூட்டணி அமைப்பது பற்றிய பா.ம.கவின் முடிவு இன்று செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தி.மு.கவுடன் மீண்டும் கூட்டணி அமைப்பது குறித்து கடந்த முதலாம் திகதி சென்னையில் பா.ம.க. எம்.எல்.ஏக்கள் குழுவினர் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினர்.

இப்போதைய மாநிலங்களவைத் தேர்தலிலேயே அன்புமணிக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கருணாநிதியிடம் பா.ம.கவினர் வலியுறுத்தினர் எனவும், இதனை ஏற்க தி.மு.க. மறுத்துவிட்டது எனவும் கூறப்படுகிறது. இந்நிலையில் மீண்டும் முதல்வர் கருணாநிதியைச் சந்திக்க பா.ம.கவினர் தொடர்ந்து முயன்று வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

மாநிலங்களவைத் தேர்தலில் பா.ம.கவுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் அல்லது 2011 சட்டப் பேரவைத் தேர்தலில் பா.ம.கவுக்கு எத்தனை இடம் அளிக்கப்படும் என்று இப்போதே உறுதியாக அறிவிக்க வேண்டும் என்பதை முதல்வர் கருணாநிதியிடம் வலியுறுத்த பா.ம.க.வினர் திட்டமிட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையே பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், அக்கட்சியின் முக்கிய நிர்வாகிகளுடன் சென்னையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆலோசனை நடத்தினார்.

கூட்டத்துக்குப் பின் ராமதாஸை சந்தித்த செய்தியாளர்களிடம், கூட்டத்தில் விவாதிக்கப்பட்டவை பற்றி கருத்துத் தெரிவிக்க அவர் மறுத்து விட்டார்.

பா.ம.க. மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னையில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. அக்கூட்டத்துக்குப் பின்னர் நடந்தது என்ன? என்பது பற்றித் தெரிவிக்கிறார் என ராமதாஸ் கூறினார்.

எனவே, தி.மு.க. - பா.ம.க. கூட்டணி பற்றி தி.மு.க. உயர்நிலை செயற்றிட்டக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய பா.ம.கவின் முடிவு இன்று அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காங். கூட்டணியின் நம்பிக்கைக்குரிய கட்சியாக நீடிப்போம்; மம்தா தெரிவிப்பு

கொல்கத்தா, ஜூன் 08

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் நம்பிக்கைக்கு உரிய கட்சியாக இருப்போம். பதவிக்காலம் முடியும்வரை இந்தக் கூட்டணியை ஆதரிப்போம் - என்று மத்திய ரயில்வேத் துறை அமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவியுமான மம்தா பானர்ஜி கூறினார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அப்பேட்டியில் மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

மேற்கு வங்க மாநிலத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸுக்கும், திரிணாமுல் காங்கிரஸுக்கும் கூட்டணி ஏற்படவில்லை என்பதை யாரும் திசை திருப்ப வேண்டாம். எங்களை அனைவரும் கைவிட்டபோது நாங்கள் மக்களிடத்தில் சென்றோம். மக்கள் எங் களுக்கு ஆதரவு வழங் கியிருக்கின்றனர்.



இப்போது ஒன்றும் முடிந்து போகவில்லை. நாங்கள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு நம்பிக்கைக்கு உரிய கட்சியாக நீடிப்போம். மத்தியில் இந்தக் கூட்டணியின் பதவிக் காலம் முடியும்வரை ஆதரிப்போம். இந்த முடிவில் மாற்றம் இல்லை.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முதல் ஆட்சியின்போது, இடதுசாரிகள் ஆதரவு கொடுத்துவந்தார்கள். பின்னர் அமெரிக்காவுடன் செய்துகொண்ட அணு சக்தி ஒப்பந்தத்தை எதிர்த்து, ஆதரவை வாபஸ் பெற்றுக்கொண்டார்கள். அதுபோல் நாங்கள் செய்ய மாட்டோம்.

மேற்கு வங்கத்தில் இனிவரும் சட்டசபைத் தேர்தலின்போது, காங்கிரஸுடன் கூட்டணி ஏற்படுத்திக்கொள்ள முழு முயற்சிகளை மேற்கொள்வோம். எங்களை நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்லர் என்று சிலர் கூறி வருகிறார்கள். அது உண்மை அல்ல. நாங்கள்தான் மற்றவர்களை விட நம்பத்தகுந்தவர்கள்.

பிரதமர் மன்மோகன்சிங், மிகவும் நல்லவர். சிறந்த நிர்வாகி. அவருடைய ஆசீர்வாதமும், அன்பும் ஆதரவும் எங்களுக்கு இருக்கின்றன. யார் - யார் என்ன செய்கிறார்கள் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

மேற்கு வங்கத்தில் விரைவில் சட்டசபை தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது எங்கள் விருப்பம். மேற்கு வங்க அரசு, மக்களுக்கு எந்த நன்மைகளையும் செய்யவில்லை.

மாவோயிஸ்ட்களுக்கு நாங்கள் ஆதரவு கொடுக்கவில்லை. எங்களுக்கும் அவர்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

- இப்படி மம்தா பானர்ஜி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீபா ஒப்பந்தத்தின் மூலம் இந்தியத் தொழிலாளர்களை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி!

## விஜித ஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன், 8

இலங்கையில் ஆயிரக்கணக்கானோர் தொழிலின்றி வாடுகையில், சீபா எனப்படும் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் மூலம் இந்தியத் தொழிலாளர்களை இலங்கைக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியத் தொழிலாளர்கள் நாட்டினுள் கொண்டு வரப்படவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் இதுவரை நாடாளுமன்றத்திடம் சமர்ப்பக்கப்படவில்லை யெனவும் ஆனால், என குறித்த அமைச்சு கள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயாராகின்றன எனவும் அவர் கூறினார்.

எனவே, குறித்த இந்த ஒப்பந்தம் நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படவேண்டுமென அவர் கூறினார்.

இலங்கையில் ஆயிரக்கணக்கானோர் வேலையற்று இருக்கையில் இந்தியத் தொழிலாளர்களை நாட்டுக்குள் கொண்டு வருவது ஆபத்தானதொரு விடயம் என அவர் தெரிவித்தார்.

அரசு ஐபா விருது வழங்கும்போர்வையில் இதனை நிறைவேற்ற முயல்கின்றன என்றும் விஜித ஹேரத் குற்றம்சாட்டினார்.

ஐபா விழா தொடர்பாக அதிக கூக்குரல் எழுப்பப்பட்டாலும் அது நாட்டுக்கோ, இலங்கைக் கலைஞர்களுக்கோ இலங்கைக் கலைகளுக்கோ எதுவித நன்மையையும் தரவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் கலாசாரம், கலைஞர்கள், உள்ளூர்த் துறைகள் என்பவை உயர்ந்த தரத்தில் இருக்கும் ஒரு காலகட்டத்தில் அரசு இந்தியக் கலைஞர்களுக்காகவும் அவர்களது துறைக்காகவும் பொது மக்களின் பணத்தில் 60 கோடி ரூபாவைச் செல விட்டமை எமக்குக் கவலையளிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடித்த 8 இலங்கை மீனவர்கள் கைது

கொழும்பு, ஜூன், 8

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 5 இலங்கை மீனவர்கள் நேற்றுமுன்தினம் இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்திய, தமிழ்நாடு - நாகபட்டினம் கடற்பரப்பில் வைத்து இந்த இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணித்த இயந்திரப் படகொன்றும் இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக் கைகள் எடுக்கப்படுகின்றதென கடற்றொழில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# விளக்கமறியலில் விமானப் படை அதிகாரிகள்

கொழும்பு, ஜூன், 8

கொழும்பு நீதிமன்ற உத்தரவின் பேரில் ஆறு விமானப்படை அதிகாரிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலி வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் காவலர்களைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரிலேயே விளக்கமறியலில் இவர்கள் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்ப டுகின்றது.

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம்; தென்னாபிரிக்கா விழாக் கோலம்

உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் தென்னாபிரிக்கா முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது.

உலகிலேயே அதிகமான நாடுகள் பங்கேற்கும், அதிகமான ரசிகர்கள் பார்த்து ரசிக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை முதன்முறையாக தென்னாபிரிக்கா நடத்துகிறது.

போட்டி தொடங்க இன்னும் 3 நாள்களே உள்ள நிலையில் தென்னாபிரிக்கா முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது. ஜோகன்னஸ்பர்க் தம்போ சர்வதேச விமான நிலையத்திலிருந்து போட்டி நடைபெறும் உதைபந்தாட்ட மைதானம் வரையிலான வீதிகள் மிகவும் அழகாக சீரமைக்கப்பட்டுள்ளன.

தொலைக்காட்சிகள் உதைபந்தாட்டச் செய்திகளை அதிகமாக வெளியிட்டு ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன.

அடுக்குமாடிக் கட்டடங்கள், அலுவலகங்கள் மற்றும் கார்களில் உலகக் கிண்ணத்தை நினைவுகூரும் வகையில் வண்ணமயமான கொடிகளும், முக்கிய நகரங்கள் மற்றும் சிறு நகரங்களில் ஏராளமான விளம்பரப் பதாகைகளும் வைக்கப்பட் டுள்ளன.

தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா தமது நாட்டு உதைபந்தாட்ட வீரர்கள் அணியும் மஞ்சள் நிற உடை அணிந்தே, தற்போது வலம் வருகிறார்.

தென்னாபிரிக்காவில் உள்ள நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் வெள்ளிக்கிழமை தோறும் உதைபந்தாட்ட உடையணிந்து வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால், உதைபந்தாட்ட உடைகளுக்கான வியாபாரம் சூடுபிடித்துள்ளது.

2010ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெறும் என்று 2004ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது முதல், வீதிகள், விமான நிலையங்கள், ஹோட்டல்கள், மைதானங்கள் எனப் பலதும் புதிதாக அமைக்கப்படத் தொடங்கின.

கோலாகலமாகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் மட்டுமின்றி, 32 நாடுகளின் முன்னணி வீரர்களும் ஆக்ரோஷமாக ஆடவுள்ளமையால் உலகக் கிண்ணம், உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு பெரும் திருவிழாவாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

## 30 நிமிட அதிரடி உதைபந்தாட்டம்

'ருவென்ரி-20' கிரிக்கெட் பாணியில், 30 நிமிடங்களைக் கொண்ட, அதிரடி உதைபந்தாட்டப் போட்டி டில்லியில் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 'ஓவ்சைட்' போன்ற சர்ச்சைக்குரிய விதி முறைகள் கிடையாது. அணிக்கு தலா 5 வீரர்கள் இருந்தால் போதுமானது.

தற்பேதை உலகக் கிண்ண உதைபந்தாட்டக் காய்ச்சல் ரசிகர்களை ஆட்டிப் படைக்கும் நிலையில். டில்லியைச் சேர்ந்த பாடசாலை மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் சேர்ந்து, மிகக் குறைந்த நேரத்தில் நடக்கும் வித்தியா சமான போட்டியை அறிமுகப்படுத்தியுள் ளனர். இதற்கு 'டில்லி ஸ்டிரீட் உதைபந் தாட்ட சம்பியன்ஷிப்' எனப் பெயரிட்டுள் ளனர். இத்தொடர் 5 நாட்களுக்கு(இன்று முதல் 12ஆம் திகதி வரை) நடக்கவுள்ளது.

# பங்களாதேஷை இன்னிங்ஸால் வென்றது இங்கிலாந்து

மான்செஸ்டர், ஜூன் 8

பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து-பங்காளாதேஷ் அணிகளுக்கிடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் நடந்தது.

இதன் முதலாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி, இயான் பெல் விளாசிய சதத்தின் உதவியுடன் 419 ஓட்டங்களைக் குவித்தது. அடுத்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய பங்களாதேஷ் அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்று 'பலோ-ஒன்' ஆனது.

இந்த நிலையில் 3ஆவது நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. மழை காரணமாக ஆட்டம் சுமார் 2 மணி நேரம் தாமதமாகத் தொடங்கியது.

203 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது 2ஆவது இன்னிங்ஸை ஆடிய பங்களாதேஷ் அணி, குறுகிய நேரத்தில் சுருண்டது. இங்கிலாந்து வீரர்களின் வேகப் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் 34.1 ஓவர்களில் 123 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதன் மூலம் இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து அணி சார்பாக பந்து வீச்சில், ஸ்ரீபன் பின் 5 விக்கெட்டு களையும், அன்டர்சன் 3 விக்கெட்டுகளையும் சாய்த்தனர். இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி, 2-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது.




# உதைபந்தாட்டத்தை காண்பதற்கு முண்டியடித்ததால் ரசிகர்கள் பலர் காயம்!

நைஜீரியா-வடகொரிய அணிகளுக்கிடையே நடந்த சினேகபூர்வ ஆட்டத்தின்போது நெரிசல் ஏற்பட்டதில், ரசிகர்கள் பலர் காயமடைந்தனர்.

உலகக் கிண்ணப் போட்டியை முன்னிட்டு நடந்த பயிற்சியாட்டம் ஒன்றில், நேற்றுமுன்தினம் ஜோகன்னஸ்பர்க் மெக்லாங் மைதானத்தில் நைஜீரிய அணியுடன் வட கொரியா மோதியது.

இந்தப் போட்டியைக் காண வந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் மைதானத்திற்கு வெளியே திரண்டிருந்தனர். போட்டி ஆரம்பமாவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்னர் மைதானத்தின் வாசல் திறக்கப்பட்டது. உடனே ரசிகர்கள் முண்டியடித்துக்கொண்டு அந்த வழியாக உள்ளே செல்ல முயற்சித்தமையால் கடும் நெரிசல் ஏற்பட்டது. இதனால், ரசிகர்கள் பலர் காயமடைந்தனர். பொலிஸார் ஒருவரும் படுகாயமடைந்தார்.

உலகக் கிண்ணப் போட்டி ஆரம்பமாக இன்னமும் 3 நாட்களே உள்ள நிலையில் இந்தச் சம்பவம் தென்னாபிரிக்காவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

# ஓட்டோவில் ஆர்ஜென்ரினா வர்ணம்; சாரதியை மிரட்டிய பிரேஸில் ரசிகர்கள்!

ஓட்டோவை அர்ஜென்ரினக் கொடியின் வர்ணத்திற்கு மாற்றிய சாரதிக்கு, பிரேஸில் ஆதரவு ஓட்டோச் சாரதிகள் மிரட்டல் விடுத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கேரளாவில் உள்ள மலப்புரம் நகரம் இந்தியாவின் பிரேஸில் என்று அழைக்கப்படும் அளவுக்கு உதைபந்தாட்ட ரசிகர்கள் நிறைந்தது. உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நெருங்கியுள்ளமையால் நகரமே விழாக் கோலம் பூண்டுள்ளது.

மலப்புரத்தை சேர்ந்த நஸீர் என்ற ஓட்டோச் சாரதி, ஆர்ஜென்ரினாவின் தீவிர ரசிகர். உலகக் கிண்ணப் போட்டி நெருங்கிவருவதை முன்னிட்டு இவர், தனது ஓட்டோவுக்கு ஆர்ஜென்ரினாக் கொடியின் நீலம்-வெள்ளை வர்ணங்களைப் பூசி பெருமையுடன் ஓட்டி வந்தார். ஓட்டோ ஓட்டுவது தவிர, வாடிக்கையாளர்களிடம் ஆர்ஜென்ரினா அணிக்கு ஆதரவு வழங்கும் படியும், மரடோனாவின் பெருமைகளை விளக்குவதும் நஸீரின் கூடுதல் வேலை.

இவரது செயற்பாடு குறித்து அங்குள்ள பிரேஸில் ஆதரவு ஓட்டோ ரசிகர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியமையால் அவர்கள் நஸீரை பிரேஸிலுக்கு ஆதரவு வழங்கும்படி மிரட்டிச் சென்றுள்ளனர்.

2006ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின்போது பிரான்ஸ் அணித்தலைவர் சினடேன் சிடேனை 'பன்னி' என்று திட்டிய சம்சுதீன் என்ற ஓட்டோச் சாரதி கத்திக்குத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்பெயின் வீரர் நடால் 5 ஆவது தடவையும் சம்பியன்

பாரிஸ், ஜூன் 8

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில், ஸ்பெயின் வீரரான ரபெல் நடால் 5ஆவது முறையாகச் சம்பியன் பட்டத்தை வென்றார். அத்துடன், டென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தையும் தன்வசப்படுத்தினார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி, கடந்த இரண்டு வார காலமாக பரிஸ் நகரில் நடந்து வந்தது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் இத்தாலி வீராங்கனை பிரான்செஸ்கா சிவோன் பட்டம் வென்ற நிலையில், நேற்றுமுன்தினம் ஆண்கள் ஒற்றையர் இறுதியாட்டம் நடந்தது. இதில் 2ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபெல் நடாலும், 5ஆம் நிலை வீரரான ஸ்வீடனின் ரொபின் சோடர்லிங்கும் மோதினார்கள்.

'களிமண் தரை'யில் ராஜாவான நடாலின் ஆக்ரோஷமான - சாதுர்யமான ஆட்டத்துக்கு இணையாக சோடர்லிங்கால் ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால், ஆட்டம் தொடக்கத்திலிருந்தே நடாலின் கட்டுப்பாட்டில் இருந்தது.

2 மணி 18 நிமிடங்கள் வரை நீடித்த இந்த ஆட்டத்தில் நடால் 6-4, 6-2, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று 5ஆவது முறையாக பிரெஞ்ச் ஓபன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

பிரெஞ்ச் ஓபனில் இதுவரை ஒரே ஒரு ஆட்டத்தில் மட்டுமே நடால் தோற்றிருக்கிறார். கடந்த ஆண்டு 4ஆவது சுற்றில் இதே சோடர்லிங்கிடம் தோற்றிருந்தார். அதற்கு இப்போது வஞ்சித்துக் கொண்டார். ஒட்டுமொத்தத்தில் நடாலின் 7ஆவது கிராண்ட்ஸ்லாம் மகுடம் இது வாகும்.

ஸ்வீடனின் ஜோர்ன் போர்க்குக்கு (6 தடவைகள் பிரெஞ்ச் ஓபனை வென்றிருக்கிறார்) பிறகு அதிக முறை பிரெஞ்ச் ஓபனை வென்றவர் என்ற சிறப்பை 24 வயதான நடால் பெற்றிருக்கிறார்.

இந்த வெற்றியின் மூலம், பெடரரை (சுவிட்ஸர்லாந்து) பின்னுக்குத் தள்ளி டென்னிஸ் தரவரிசையில் மீண்டும் முதலிடத்தைத் கைப்பற்றி யுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கியின் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு வியாழனன்று

யாழ்ப்பாணம்,ஜூன் 8

கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலங்கை வங்கியின் வட பிராந்தியக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் நடைபெறும் இந் நிகழ்வு வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மாவட்ட அடிப்படையிலும், அகில இலங்கை ரீதியிலும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற இலங்கை வங்கியின் சிறுவர் சேமிப்புக் கணக்குகளைப் பேணிவரும் 23 மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் தங்கள் பெயர் விவரங்களை கிளை முகாமையாளர் ஊடாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். . (ஓ-16)

# இலங்கை வருகிறார் அகாஷி

ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இந்த மாத இறுதியில் இலங்கை வருகின்றார். மீள் குடியேற்றம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக அவர் இங்குள்ள அரசியல் பிரமுகர்களுடன் பேசுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மீள் குடியேற்ற அமைச்சர் உள்ளிட்ட பலரை அவர் சந்தித்துப் பேசுவார் என்று அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முக்கியமாக இலங்கைக்கான ஜப்பானின் நிதி உதவி தொடர்பாக அகாஷி அரச தரப்பினருடன் விரிவான பேச்சு நடத்துவார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## பூப்புனித நீராட்டு விழா

திரு.திருமதி கௌரிநாதன் - கிரிசா
தம்பதியரின் செல்வப்புதல்வி

### திருநிறை செல்வி கோபிகா

அவர்களுக்கு 06.06.2010 (ஞாயிற்றுக்கிழமை) சுவிற்ஸர்லாந்து நாட்டில் பூப்புனித நீராட்டு விழா நடைபெற்றது.
கோபிகா பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல்:
திருமதி பஞ்சலிங்கம் பாலசரஸ்வதி (அம்மம்மா),
யமுனா (சித்தி), இரவீந்திரன் (மாமா)
தொ.பே.: 0779597308,
0041417607962 (சுவிஸ்) (சி-568302)

இணுவில்.


# யாழ்.நகரில் இன்றும் நாளையும் வயலின் இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 8

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற வயலின் இசைக் கலைஞர்களான அக்கரை சுப்பலக்ஷ்மி, அக்கரை சொர்ணலதா சகோதரிகளின் இசை நிகழ்வு இன்று மாலை 5 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.எஸ்.பி. நாகரத்தினம் கலந்துகொள்வார்.

தொடர்ந்து நாளை புதன்கிழமையும் மாலை 5 மணியளவில் மேற்படி கலைஞர்களின் வயலின் இசை நிகழ்ச்சி இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு சங்கீத பூஷணம் ப.சிவஞானசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-16)

# காலாவதியான, தரம் குறைந்த ரூ. 70 கோடி பெறுமதியான மருந்து வகைகள் அழிப்பு

## இன்னும் 13 கொள்கலன்கள் காத்திருப்பு

கொழும்பு, ஜூன் 8

அரச வைத்தியசாலைகளில் இருந்து அகற்றப்பட்ட காலாவதியான, தரங்குறைந்த மருந்துகளைக் கொண்ட 13 கொள்கலன்கள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன வளவில் தரித்து நிற்கின்றன எனவும், 70 கோடி ரூபா பெறுமதியான 20 கொள்கலன் மருந்துகள் ஏற்கனவே அழிக்கப்பட்டுள்ளன எனவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சால் கடந்த வருடம் இறக்குமதி செய்யப்பட்டு அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட மருந்துகளில் காலாவதியானவையும், தரம் குறைந்தவையும் அந்தந்த வைத்தியசாலைகளில் இருந்து அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவுக்கு திருப்பி அனுப்பப்பட்டன.

இம்மருந்துகளை அழிப்பதற்கு 100கிலோவுக்கு 50ஆயிரம் ரூபா செலவாகிறது. சிமெந்துத் தொழிற்சாலையில் பாவிக்கப்படும் மிகப்பெரிய இயந்திரமொன்றைக் கொண்டே அவை அழிக்கப் படுகின்றன. அத்துடன், தரித்து நிற்கும் கொள்கலன் ஒன்றுக்கு மாதாந்த வாடகையாக 5 ஆயிரம் ரூபா செலுத்தப்படுகிறது என வும் அந்த அதிகாரி கூறினார்.

இவ்வாறு அப்புறப்படுத்தப்பட வேண்டிய மருந்துகள் இன்னும் அரச வைத்தியசாலைகளில்


## கண்ணீர் அஞ்சலி



நீர்ப்பாசன பொறியியலாளர் கிளிநொச்சிப் பிரிவில் கடமையாற்றிய

### மாணிக்கவாசகர் மகாலிங்கசிவம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதி நீர்ப்பாசன பணிப்பாளரும்
உத்தியோகத்தர்களும், கிளிநொச்சிப் பிராந்தியம்

நீர்ப்பாசன பொறியியலாளரும்,
உத்தியோகத்தர்களும்,
கிளிநொச்சிப் பிரிவு.

ஊழியர் நலன்புரி சங்கம்,
நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சிப் பிராந்தியம். (99242)

## வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்கள் தேவை

**விண்ணப்பதாரிகள்**

* 25 வயதுக்குள் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
* சிறந்த கல்வித்தகைமை மற்றும் மேலதிக தகைமைகள். [பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்கள் தகுதியிருப்பின் விண்ணப்பிக்கலாம்]
* தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு அவசியம். [சிங்கள மொழி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்]
* தெரிவு செய்த விண்ணப்பதாரிகளுக்கு சம்பளம் +மேலதிகக் கொடுப்பனவு.
* சந்தைப்படுத்தல் அனுபவம்மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

உடனடியாக விண்ணப்பிக்கவும், தொடர்பு கொள்ளவும்.
ஹிரான் பீற்றர்.
0773427843 (99245)

## ஏலவிற்பனை அறிவித்தல்

### சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை

*தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரிக் கிளையில் 31.03.2009 வரை அடகு வைத்து 31.03.2010 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

ஏலவிற்பனைத் திகதி :- 26.06.2010 சனிக்கிழமை மு.ப. 9.30 மணி
இடம் :- 141, V.M.K. கட்டடம், கண்டி வீதி, சாவகச்சேரி (கிளையில்)

*ஏல விற்பனையை இரத்துச் செய்யும், ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.*

*உதவிப் பொது முகாமையாளர் (கடன்) - கொழும்பு - 03*
*சார்பாக முகாமையாளர், சாவகச்சேரி.*

NSB National Savings Bank

(சி-568165)

## வேலையாள்கள் தேவை

பொருள்களை விநியோகம் செய்யும் நிறுவனத்திற்கு முகாமையாளர், விற்பனைப் பிரதிநிதி, கம்பியூட்டர் கணக்காளர் (பெண்கள் விரும்பத்தக்கது) தேவை. விண்ணப்பங்களைச் சுய எழுத்துக்களுடன் 13.06.2010இற்கு முன் கிடைக்கக் கூடியதாக 321, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



## VACANCIES

### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts in the Sports Science Unit up to 21.06.2010.

Visiting Lecturer in Physical Education for the following fields
Basket Ball / Netball

Visiting Instructor in Physical Education for the following fields
Basket / Netball

| Post | Rate of payment Rate |
|---|---|
| Visiting Lecturer | Rs. 300/- per hour |
| Visiting Instructor | Rs. 150/- per hour |

Application forms and other details may be obtained from the, office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self -addressed stamped envelope** 23x10 c.m. in size.

Those who wish to apply **for more than one post/ field** should make **separate applications.**

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Board should chan- nel their applications through the Heads, of respective Insti- tutions. Applications received after the closing date will be rejected without intimation. Only those applicants who possess the qualifications and experience for consideration will be called for an interview.

**Registrar**
**2010.06.04**



அமரமம

## உத்தரக்கிரியை பத்திரிகை



*அன்புடையீர்!*

*நிகழும் விகிர்தி வருடம் வைகாசித் திங்கள் 11ஆம் நாள் (25.05.2010) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி*

### அமரர் திருமதி தையலாம்பாள் சுந்தரமூர்த்தி

*அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (09.06.2010) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

*குறிப்பு:*
*தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமூகம் தரவும்.*

இங்ஙனம்
திரு.சு.கண்ணன் (மகன்)
திரு.க.வைத்திலிங்கச் செட்டியார்
திரு.க.ரமேஷ் [illegible]

*160, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (99246)


# ஆனந்தசங்கரி இன்று வன்னிக்கு

கிளிநொச்சிப் பிரதேச மக்களது குறைகளைக் கேட்டறிவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அங்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளைமறுதினம் வியாழக்கிழமையும் பிரதேச மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் குறைகளை அறிய உள்ள தாகவும் எனவே பாதிக்கப்பட்டவர்கள் இந்தக் கலந் துரையாடலில் பங்குகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-1-14)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 24 ★ 03 ★ 1959



மறைவு 09 ★ 05 ★ 2010

### அமரர் நடராசா மகேந்திரன்

கடந்த 09.05.2010 அன்று மறைந்த எமது குடும்ப விளக்கின் துயர்செய்தி அறிந்து உடன் வருகைதந்து பலவழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்குகொண்ட அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (08.06.2010) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேஷ்டி சபிண்டீகரண நிகழ்வுகளில் பங்குகொள்ளுமாறும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*தாமன் தோட்டம்,*
*அல்வாய் கிழக்கு, அல்வாய்.*
T.P. 0779909812 / 0776183232

*தகவல்:*
மனைவி,
பிள்ளைகள்.

(இ/568187)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்துரோகச் செயலுக்கு சரத் பொன்சேகா உடந்தையாக இருந்தால் தூக்கிலிடப்படுவார்

## பாதுகாப்பு செயலர் கோத்தபாய பி.பி.ஸிக்குப் பேட்டி

கொழும்பு, ஜூன், 08

''இலங்கையில் கடந்த வருடம் நடந்த இறுதிப் போரின் போது இராணுவத்தின் உயர் அதிகாரிகள் போர்க் குற்றங்களுக்கான உத்தரவை விடுத்தார்கள் என்று இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, தொடர்ந்து சொல்வாரானால், அவர் தூக்கிலிடப்படுவார்'' - இவ்வாறு பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

பி.பி.ஸியின் 'ஹார்ட் டோக்' நிகழ்ச்சிக்காக வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்ட கூறியுள்ளார்.

'ஒரு சர்வதேச சுயாதீன விசாரணை நடக்குமாயின் அதற்கு தான் முழுமையாக ஒத்துழைப்பேன்' என்று பொன்சேகா கூறியிருக்கிறாரே என கோத்தபாய ராஜபக்ஷவிடம் பி.பி.ஸி. செய்தியாளர் கேட்டபோது, அவர் அதனை செய்ய முடியாது. அவர் இராணுவத்தின் தளபதியாக இருந்திருக்கிறார். அவர் பொறுப்பு மிக்கவார இருந்திருக்க வேண்டும். இது ஒரு தேசத் துரோகம். அவர் அதனைச் செய்தால் அதற்காக அவரை நாங்கள் தூக்கிலிடுவோம். எவ்வாறு அவர் பொய் சொல்ல முடியும். அவர் எவ்வாறு நாட்டை காட்டிக்கொடுக்க முடியும்.' என்று கூறினார்.

(சி)

# குப்பைக்கு தீ மூட்டிய வேளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்னத்தம்பி விஜயரட்ணம் (வயது 60), தேவதாஸ் விவேகானந்தன் (வயது 65), வன்னியசிங்கம் (வயது 58) ஆகியோர் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் விஜயரட்ணம் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது :-

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவிருந்த தளங்கிளப்புப் பிரதேச மக்களின் தேவைகளைக் கேட்டறியும் கலந்துரையாடலுக்காக அப்பிரதேச மக்கள் குறித்த இடத்தைத் துப்புரவு செய்துள்ளனர்.

இந்தச் சுத்திகரிப்புப் பணியில் ஆண்களும், பெண்களுமாக சுமார் 50 பேர் வரையில் ஈடுபட்டிருந்தனர்; அங்கு ஒன்று சேர்ந்த குப்பை கூளங்களை ஓரிடத்தில் குவித்து தீமூட்டிய வேளையிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, குப்பை கொளுத்தப்பட்ட இடத்தில் காய்ந்த - பட்டுப்போய் விட்ட பூவரசு மரம் இருந்தது என்றும் அதன் கீழேயே குப்பை குவிக்கப்பட்டு, எரியூட்டப்பட்டது என்றும் அந்த மரத்தில் ''ஷெல்'' சிக்கியிருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப்பிரதேசம் சிலமாதங்களின் முன்பே கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-10-16-207)

# சீனாவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குக் கிடைக் கும் முதலாவது மிகப்பெரிய கடன் தொகையான 1.2 பில்லியன் அமெரிக்க டொலரைச் சீன அரசு வழங்கவுள்ளது.

அதேசமயம் இரண்டாவது பெரிய கடனாக ஆசிய அபிவிருத்தி வங்கி 424 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

# அரசமைப்புத் திருத்தங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புத் திருத்தம் தொடர்பாகப் பேசப்படுகின்றது. குறிப்பாக இந்தத் திருத்தத்தில் முக்கிய இடம் பிடிப்பது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்கும் விடயம்தான்.

கடந்த தேர்தல்களில் இந்த விடயம் பரவலாகப் பேசப்பட்டது. எதிர்க்கட்சிகளும் அரசும் இந்த ஜனாதிபதி முறைமையை ஒழிக்கப்போகின்றன என்று தேர்தல் காலங்களில் மக்களிடம் கூறின.

ஆனால், அதை ஒழிக்கும் திட்டம் எதுவும் அரசிடமில்லை. அரசமைப்பில் திருத்தம் செய்யும்போது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையில் உள்ள சில சரத்துக்களை மாத்திரம் நீக்கிவிட்டு நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இரண்டு தடவைகள் மாத்திரம் ஜனாதிபதியாக இருக்கமுடியும் என்ற சட்டத்தை மாற்றி இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் ஜனாதிபதியாக இருக்கக்கூடியவாறு அரசமைப்பில் மாற்றத்தைச் செய்யவுள்ளது.

இந்த அரசமைப்புத் திருத்தங்களை இந்த நாட்டு மக்களுக்கோ அல்லது நாடாளுமன்றத்துக்கோ இதுவரை அரசு தெரிவிக்கவில்லை. ஆனால், இந்தியா செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிடம் இதனைக் காண்பிக்கத் திட்டமிட்டுள்ளார்.

இந்தியாவின் ஒரு மாநிலம் போல்தான் இலங்கை இப்போது செயற்படுகிறது. இதை வரவேற்க முடியாது. அரசமைப்புத் திருத்தங்களை உடனடியாக நாடளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்குமாறும் நாம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றோம்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை இல்லாது ஒழிக்கப்படாது விட்டால் அது இல்லாதொழிக்கப்படும் வரை நாம் போராடுவோம். ஜனநாயகவாதிகளை ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம்.

மஹிந்த ராஜபக்ஷ அவரது மகனை அடுத்த ஜனாதிபதியாக்கும் திட்டத்தில் உள்ளார். அவரது மகன் பூரண அரசியல் அனுபவத்தைப் பெற்று ஜனாதிபதியாவதற்கான தகுதியை அடையும்வரை நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையைத் தக்கவைத்துக் கொள்ளவே மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

அமைச்சுக்களின் நிகழ்வுகள் அனைத்துக்கும் அவரது மகனையும் இணைத்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி அமைச்சுக்கள் அனைத்துக்கும் உத்தரவிட்டுள்ளார். அதனால், அனைத்து நிகழ்வுகளிலும் ஜனாதிபதியின் மகனைக் காணக்கூடியதாகவுள்ளது. - என்றார்.

(அ-சி)

# மஹிந்தவின் இந்திய விஜயத்தின்போது ஐந்து உடன்படிக்கைகள் கைச்சாத்து

கொழும்பு, ஜூன், 08

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின்போது ஐந்து முக்கிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று 8 ஆம் திகதி இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

அத்துடன், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ஜனாதிபதி பிரதீபா பட்டேல், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரை ஜனாதிபதி மஹிந்த சந்திக்கவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது பயங்கரவாத ஒழிப்பு, குற்றத்தடுப்பு, கலாசார அபிவிருத்தி மற்றும் சிறுதொழில் முயற்சி ஆகிய ஐந்து உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன என்றும் தெரியவருகிறது.

# அரசியல் தீர்வை உடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அதன் தொடர்ச்சியாக மாலை 6 மணியளவில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகளுடன் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்ததோடு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் முன்வைத்திருக்கும் அரசியல் தீர்வு குறித்தும் தெளிவாகக் கேட்டறிந்துகொண்டார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதோடு அதிலிருந்து தொடங்கி அதை மேலும் செழுமைப்படுத்தி ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சக வாழ்வும் சமவுரிமையும் உள்ளதான அரசியல் ஏற்பாடு நோக்கிச் செல்வதே தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடிந்த நடைமுறைச் சாத்தியமான வழிமுறை என்றும், அதை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகளால் உறுதியாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுவரை கிடைத்திருந்த சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்தியிருக்காத தமிழ்த் தலைவர்களின் தவறான வழிநடத்தலுக்காக தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தை ஒருபோதும் பின்தள்ளி விட வேண்டாம் என்றும், அனைத்து தரப்பாலும் ஏற்க முடிந்த நடைமுறைச் சாத்தியமான யோசனைகளையே தாம் முன்வைத்து வருவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களிடம் எடுத்து விளக்கியிருந்த ஈ.பி.டி.பி.யின் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே ஈ.பி.டி.பி. அரசாங்கத்துடன் உறவுக்குக் கரம் கொடுத்து வருவதாகவும் ஜனாதிபதியிடம் எடுத்து விளக்கியிருந்தனர்.

மேலும், இச்சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்திருந்த ஈ.பி.டி.பி.யின் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினை குறித்து எமது நட்பு நாடாகிய இந்தியா உட்பட சர்வதேச சமூகம், மற்றும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருக்கும் யோசனைகளையே தாம் வலியுறுத்தி வருவதாகவும், அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்துகின்ற சமகாலத்தில் தமிழ் மக்களின் உடனடி அவசியப் பிரச்சினைகளுக்கும் அரசாங்கம் உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல், இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துதல், கைது செய்யப்பட்டடோர், மற்றும் சரணடைந்திருப்போர்களை விடுதலை செய்தல், அவ்வாறு விடுதலை செய்யப்படும் முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் முகமாக அவர்களுக்கான தொழிற்பயிற்சி, வேலை வாய்ப்பு, மற்றும் அவர்களுக்கான கல்வி கற்கும் வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற மனிதாபிமானப் பணிகளையும் அரசியல் தீர்வு முயற்சிகளை நடைமுறைப்படுத்தும் ஏககாலத்தில் விரைவாகச் செய்து முடிக்க வேண்டும் என்றும் ஈ.பி.டி.பி. தரப்பினர் சந்திப்பில் வலியுறுத்தினர்.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி. சில்வா, பசில் ராஜபக்ஷ, ஜீ.எல். பீரிஸ், மைத்திரிபால சிறிசேன, பௌசி ஆகியோரும் -

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நாடாளுமன் றக் குழுக்களின் பிரதித் தலைவர் முரு கேசு சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப் பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உத யன்), அமைச்சரின் பிரத்தியேகச் செயலா ளர் தயானந்தா, ஈ.பி.டி.பி.யின் சர்வதேச அமைப்பாளர் மித்திரன், நிர்வாகச் செயலாளர் புரட்சிமணி, அமைச்சரின் இணைப் பதிகாரி ராஜ்குமார், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரும் ஈ.பி.டி.பி.யின் விசேட பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டனர் என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# அரசு கூட்டமைப்புக் குழு இனப்பிரச்சினை, மீள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையிலான முதலாவது சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நேற்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 6.30 வரை நடைபெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்,பஸில் ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, டலஸ் அழகப்பெரும மற்றும் உயர் அதிகாரிகளான ரஜீவ விஜேசிங்க, காமினி சேனரத் ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் விநோ நோதராதலிங்கம் தவிர்ந்த 13 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றைய சந்திப்பில் பங்குபற்றினர்.

பேச்சு ஆரம்பத்தில் வன்னி மக்களின் மீள்குடியேற்றம் அவர்களின் அவலங்கள் தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றை இரா.சம்பந்தன்ஜனாதிபதியிடம்கையளித்தார்.

மீள்குடியமர்ந்த மக்களுக்கு வீடுகளை அமைத்தல் மற்றும் திருத்தி மீளமைத்தல், அவர்களின் வாழ்வாதார உதவிகள், கல்வி வசதிகள் மற்றும் அந்த மக்களின் அவசர தேவைகள் என்பன அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

மீளக்குடியமர்ந்த ஒரு லட்சத்து அறுபதாயிரம் மக்களுக்கும் வீடுகளை அமைக்க அரசாங்கத்தால் முடியாது. அதற்கு போதிய நிதிவளம் எம்மிடம் இல்லை. அவர்கள் தமது வயல்களை விதைக்க அனுமதி வழங்கியுள்ளோம். 1500 ஏக்கர் முதல் 2 ஆயிரம் ஏக்கர் வரை நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. நெற்செய்கைக்கு தேவையான விதை நெல் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் நெற்செய்கை மேற்கொண்டு அதில் கிடைக்கும் வருமானத்தில் வீடுகளை அமைக்கலாம்.

அத்துடன் இந்தியாவில் இருந்து கூரைத் தகடுகள் வரவிருக்கின்றன. அவை மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தையின் போது வன்னி மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக சுமார் ஒரு மணிநேரம் விவாதிக்கப்பட்டது.

வன்னியில் இருந்து வந்து படையினரிடம் சரணடைந்த 12 ஆயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்களையும் விடுவிக்க வேண்டும் என கூட்டமைப்பினர் பிரஸ்தாபித்தனர்.

இந்த விவகாரத்தில் பாதுகாப்பு விடயமே முன்னுரிமைப்படுத்தப்படுவதாக தெரிவித்த அரச தரப்பு இதுவரை 4 ஆயிரம் பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 8 ஆயிரம் பேர் உள்ளனர். அவர்களும் படிப்படியாக விடுவிக்கப்படுவர். எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் அவர்களை விடுவிக்கும் பணி பூர்த்தியடையும் என்று அரச தரப்பினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

அண்மையில் விடுவிக்கப்பட்ட ஒருவர் அனுராதபுரத்தில் புலனாய்வு பணியில் ஈடுபட்ட சமயம் படையினரால் கைது செய்யப்பட்டார் என்று அரச தரப்பினர் கூட்டமைப்பினரிடம் சுட்டிக்காட்டினர்.

ஜே.வி.பியினருக்கு பொது மன்னிப்பு வழங்கிய போன்று விடுதலைப் புலி போராளிகளுக்கும் மன்னிப்பு வழங்க வேண்டும் என்று கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

ஜே.வி.பியையும் விடுதலைப் புலிகளையும் ஒன்றாகப் பார்க்க முடியாது. ஜே.வி.பி.யினருக்கு 4 வருடங்களின் பின்னரே மன்னிப்பு வழங்கினோம் என்று அரச தரப்பினர் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்களை வெளியிடுமாறு கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்தனர்.

### லண்டனில் உள்ளவர்கள் தொடர்பு கொள்வராம்

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களை வெளியிட முடியாது. பெயர் விவரங்களை வெளியிட்டால் லண்டனில் உள்ள புலி உறுப்பினர்கள் அவர்களுடன் தொடர்பு கொள்வர். பின்னர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் சென்றுவிடுவார்கள் என்று அரச தரப்புப் பிரதிநிதிகள் அதற்குப் பதில் அளித்தனர்.

வன்னியில் 3,500 அரச சார்பற்ற நிறுவனங்கள் பணியாற்றியுள்ளன. ஆனால் அவை அங்கு ஒழுங்காகச் செயற்படவில்லை என்றும் அரச தரப்பினர் ஒரு கட்டத்தில் கூட்டமைப்பினரிடம் கூறினர்.

வன்னியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு 50 ஆயிரம் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 15 ஆயிரம் சைக்கிள்கள் வழங்கப்படவிருக்கின்றன என்றும் அரச தரப்பில் தகவல் வெளியிடப்பட்டது.

இதேவேளை நேற்றைய பேச்சுக்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் கேட்டபோது பேச்சுக்கள் திருப்திகரமாக அமைந்தன என்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

(அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கைலாகு கொடுத்து வரவேற்பதையும் அவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# எமது நாட்டுக்கு எதிராக சில சக்திகள் உலகம் முழுவதும் பிரசாரம் செய்கின்றன

## சுதந்திரக் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி விசனம்

கொழும்பு, ஜூன் 08

இலங்கைக்கு 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகை உட்பட உதவிகளை வழங்கவேண்டாமென சில சக்திகள் உலகம் முழுவதும் பிரசாரம் செய்து வருகின்றன. இருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கி உட்படப் பல நிதி நிறுவனங்கள் எமது நாட்டுக்கு உதவ முன்வந்துள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற அகில இலங்கை ஸ்ரீ.ல.சு.கட்சி பொதுக் குழுக் கூட்டத்தில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

பொதுக்குழுக் கூட்டத்துடன் அரசியல் வாழ்வில் ஜனாதிபதி 40 வருடங்களைப் பூர்த்தி செய்தமையைக் கொண்டாடும் விழாவாகவும் இது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கடந்த பொதுத் தேர்தலில் கட்சி வெற்றி பெற உழைத்த அனைவருக்கும் ஜனாதிபதி, விருதும் சான்றிதழும் வழங்கி கௌரவித்தார்.

வைபவத்தில் ஜனதிபதி தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:-

1970களில் நான் அரசியல் வாழ்வை ஆரம்பித்தபோது அரசியலில் இருந்தவர்களில் பிரதமர் டி.எம்.ஜயரட்ணவும், அத்தாவுத செனிவிரட்னவும் மாத்திரம் அரசியலில் இருக்கின்றனர். நாம் அன்று முதல் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றி கண்டுள்ளோம். இதை வென்றுள்ளேன் புதையல் தோண்டியதற்காக அல்ல. கட்சிக்காகவே இதைச் செய்தேன்.

நாட்டைப் பிளவு படுத்த முயற்சித்த பயங்கரவாதத்தை எனது தலைமைத்துவத்தின் கீழ் வெற்றிகரமாக இல்லாதொழித்தேன். இப்போது வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகியவற்றுக்கு இடையில் நட்புறவைக் கட்டி எழுப்புவதே நாம் இன்று மேற் கொள்ளவேண்டிய விடயமாகும்.

நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு நாம் இப்போது தீர்வு காணவேண்டும். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

# யுத்தத்தின் இறுதி நாள்களில் நிகழ்ந்த சம்பவங்களுக்கு சாட்சியம் இருக்கிறது

## இனப்படுகொலைகளுக்கு எதிரான தமிழர் அமைப்பு கூறுகிறது

கொழும்பு, ஜூன் 08

யுத்தத்தின் இறுதி நாள்களில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து களமுனையில் பணியாற்றிய படை உயரதிகாரி ஒருவரின் சாட்சியம் கிடைக்கப் பெற்றுள்ளது என்று அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'இனப்படுகொலைகளுக்கு எதிரான தமிழர்கள்' என்கிற அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்த இராணுவ உயரதிகாரி உயிராபத்துக் கருதி வெளிநாடு ஒன்றில் மறைந்து வாழ்கின்றார் என்றும் அவர் யுத்தத்தின் இறுதி நாள்களில் இடம்பெற்ற சம்பவங்களை 100 பக்கங்களில் சத்தியக் கடதாசியாக எழுதிக் கையொப்பமிட்டு அந்த அமைப்புக்குக் கொடுத்துள்ளார் என்றும் அந்த அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரண் அடைய வந்த புலிப் பிரமுகர்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னணி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் 12 வயது மகனும், அவருடைய மெய்ப்பாதுகாவலர்கள் ஐவரும் சரணடைந்த போது அவர்களைச் சித்திரவதை செய்து படுகொலை செய்தோர் சம்பந்தப்பட்ட விவரங்கள், யுத்தக் குற்ற ஆதாரங்களை மறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரச உயர்மட்டத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற உத்தரவு குறித்த விடயங்கள், தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை ஸ்தாபிக்கும் முயற்சிகள் ஆகியன உட்பட ஏராளமான விடயங்களை அவர் அந்த சத்தியக் கடதாசியில் வெளிப்படுத்தி உள்ளார் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

அந்த சத்தியக் கடதாசியின் பிரதிகளை வெகுவிரைவில் சர்வதேச மனிதாபிமான அமைப்புகள் அனைத்துக்கும் அனுப்ப உள்ளதாகவும் மேற்படி அமைப்பு அறிவித்துள்ளது. (ஒ-சி)



இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழக முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் சந்தித்துப் பேசியபோது.....

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு மருத்துவபீடம், சட்டத்துறைக்கு இம்முறை சிங்கள மாணவர்களும் அனுமதிக்கப்படுவர்

கொழும்பு, ஜூன் 8

பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை 22,800 மாணவர்கள் அனுமதிக்கப்படவிருக்கின்றனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கா மேற்கண்டவாறு உதயனுக் குத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவரங்களை நேற்று வெளியிட்ட பின் மாணவர் அனுமதி குறித்துக் கேட்டபோது இப்படிக் கூறினார்.

சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் இம்முறை யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கும், சட்டத்துறைக்கும் அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் கூறினார்.

அவர்களுக்கு விடுதி வசதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-1)

# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு இல்லை ஐபா விழாவுக்கு பல கோடி ரூபாக்கள் செலவு

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 08

உறுதியளிக்கப்பட்டபடி 2,500 ரூபா சம்பள உயர்வை எதிர்பார்த்து அரச ஊழியர்கள் காத்திருக்கின்றனர். விலைவாசி உயர்வை சமாளிக்க முடியாமல் மக்கள் தடுமாறும் போது அரசு கோடிக்கணக்கான ரூபாவை செலவிட்டு ஐபா விருது விழாவை நடத்தி இருக்கிறது.

ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கயந்த கருணாதிலக எம்.பி. நேற்றுக்காலை எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்நாட்டில் 40 சதவீதமானோர் சமுர்த்திக் கொடுப்பனவை நம்பி வாழும் வறுமைக் கோட்டுக்கு கீழ் இருந்து வருகின்றனர். ஓட்டோ மீதான இறக்குமதியைக் குறைத்திருந்தாலாவது சுயதொழில் வாய்ப்பு உருவாக வழிஏற்பட்டிருக்கும். ஆடம்பர வாகனங்கள் மீதான இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

காஸ், பாண் ஆகியவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. பால்மாவின் விலை இன்னும் சில நாள்களில் உயர்த்தப்படவுள்ளது. காய்கறி விலைகள் என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளன. இந்த நிலையில் அரசு வாகனங்கள் மீதான வரியை ஐம்பது சதவீதத்தால் குறைத்துள்ளது. கோடிக்கணக்கான ரூபாக்களை செலவிட்டு ஐபா விழாவை நடத்துகின்றது. இதனால் எமது நாட்டுக்கும் எமது கலைஞர்களுக்கும் ஏதாவது நன்மை ஏற்பட்டுள்ளதா? இல்லை. ஜனாதிபதித் தேர்தலின் போது 'வளமான எதிர்காலம் கிடைக்க வாக்களியுங்கள்' எனப் பிரசாரம் செய்தனர். பொதுத் தேர்தலின் போது வியக்கத்தக்க நாடாக மாற்றுவோம் என பிரசாரம் செய்தனர். ஆனால் நடப்பது என்ன?

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

# 2010 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு சட்டமூலம் இன்று நாடாளுமன்றில்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 2010ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக் கீட்டு சட்டமூலம் இன்று (செவ்வாய்க் கிழமை) நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இத்தகவலை ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இச்சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டு 21 நாள்களுக்குப் பின்னர் இந்த ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும். இதனை எதிர்வரும் 29 ஆம் திகதி ஜனாதிபதியும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ சபையில் சமர்ப்பிப்பார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் ஜூன் 30 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 4 ஆம் திகதி வரை நடைபெறும். அதேவேளை குழு நிலை விவாதமும் நான்கு நாள்கள் இடம்பெறும். இதற்கான வாக்கெடுப்பு ஜூலை மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் எனவும் தெரிவித்தார். (சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org